NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
Sat & Sun - 8.30 a.m.
விலங்குப்பாகுபாட்டியல்
Sat. & Sun. 11-30 a. m.
சிறுநீர் சனனித் தொகுதி
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
PHYSICS
நிலை மின்னியல்
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்;
03-09-1988
Sat - 2.30 p.m.

மலை: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ ஆவணி மீ 18 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 20 (03-09-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 26

## தொலைபேசி முற்றுகத் துண்டிப்பு

யாழ்ப்பாணம், செப்3

யாழ் - கொழும்பு தொலைபேசி சேவை முற்றாகத் துண்டிக்கப் பட்டிருக்கிறது

இந்தச் சேவையை சீர்படுத்துவதற்கான வேலைகள் தற்போது வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் - கொழும்பு தொலைபேசிச் சேவையின் கீழ் 24 இணைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்த 24 இணைப்புக்களும் தற்போது இயங்காமல் இருக்கின்றன என்று யாழ் தொலைபேசித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

(ஒ-ஐ-10)

## கந்தளாயில் சிங்களவர் இருவர் கைது

திருகோணமலை, செப். 3

கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் இரண்டு தொழிலாளர்கள் தங்கள் வீட்டில் மூன்று சட்டுத் துவக்குகளை வைத்திருந்தபோது பொலீசாரினால் கைது செய்யப்பட்டனர்.

சுனில் ஐயாததின, எல். ரி. சருணரத்தின ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவார்.

(ஒ-150)

## 5 பஸ்கள் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம் செப் 3

தலயாருக்குச் சொந்தமான மூன்று சொகுசு பஸ்களும், இரண்டு மினி பஸ்களும் இந்திய அமைதிப் படையினரால் யாழ்ப்பாணம் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன:

யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபட்ட இந்த பஸ்கள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துக்கும் அதிகமான தொகையைப் பிரயாணிகளிடமிருந்து வசூலித்ததை அடுத்தே இவை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது,

(ஒ - ஐ - 10)

ஸியா மரணம்:

## விமானப்படை அதிகாரிகள் 9 பேர் கைது

இஸ்லாமபாத், செப். 3

அதிபர் ஸியாவின் மரணம் தொடர்பாக பாகிஸ்தான் விமானப் படையைச் சேர்ந்த ஒன்பது அதிகாரிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

அதிபர் ஸியா பயணம் செய்த விமானம் நடுவானில் வெடித்துச் சிதறிய சம்பவம் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

## செய்திச் சாரம்

### விளையாட்டு விபரீதமானது

வாஷிங்டன், செப் 3

வட கலிபோர்னியாவில் சிறுவன் ஒருவன் தீப்பெட்டியுடன் விளையாடினான்.

அதனால் அங்கு 560 ஏக்கர் காடு சாம்பலானது, குறைந்தது 5 வீடுகள் முற்றாக எரிந்து போயின. (ஒ-எ)

### பொன்னாலை வரதராஜரின் ரதோற்சவம்

யாழ்ப்பாணம், செப், 3

பிரசித்தி பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் தேர்த்திருவிழா இன்று 3ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள புகழ்மிக்க மூன்று விஷ்ணு ஆலயங்களில் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயமும் ஒன்றாகும். (சி)

### பருத்தித்துறை மருதடி முருகன் கோவிலில்

கரவெட்டி, செப் 3

பருத்தித்துறை மருதடி முருகன் ஆலய மேற்கு வாசலில் இன்று சனிக்கிழமை காலை எட்டு மணிமுதல் மாலை நான்கு மணி வரை உண்ணாவிரதம் நடைபெறும்.

பூஸா முகாமில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக இந்த உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

(ஒ-ஐ-70

### பல்கலைக்கழக மாணவரும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப் 3

பூஸா முகாமில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக நேற்று 400 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் உண்ணாவிரதம் இருந்தனர்.

யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து இவர்கள் ஊர்வலமாக புறப்பட்டபொழுது அமைதிப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள் என்றும், எச்சரிக்கை செய்யப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

எனினும் மாணவர் பிரதிநிதிகள் அமைதிப் படை உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதை அடுத்து உண்ணாவிரதத்தில் மாணவர்களைக் கலந்து கொள்ள படையினர் அனுமதித்தனர். (ஒ-10)

# யுத்த நிறுத்தம் செய்வது குறித்து இந்தியா ஆராய்வு

## பொது ஸ்தாபனங்களுடன் நேற்று உயர் அதிகாரிகள் பேச்சு

யாழ்ப்பாணம், செப்டம்பர் 3

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாம் யுத்த நிறுத்தம் செய்வது குறித்து இந்தியத் தரப்பில் மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

இது குறித்து இந்திய அமைதிப் படையின் உயர் அதிகாரிகள் குழு, இங்குள்ள பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது குறிப்பிடப்பட்டதாக அறியவந்தது.

இந்தியத் தரப்பில் யுத்த நிறுத்தம் அறிவித்து விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று பொது ஸ்தாபனங்கள் பலவும் கடந்த பல மாதங்களாக இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடமும், இந்திய அரசாங்கத்திடமும் வலியுறுத்தி வந்தது தெரிந்ததே.

அந்தக் கோரிக்கை குறித்து இந்திய அரசு இப்போது ஆராய்ந்து வருவதாகவும், யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களுடன் நேரடியாகப் பேசி, சுமுகமான தீர்வு ஒன்றுக்கு வர விருப்பம் கொண்டிருப்பதாகவும் நேற்றைய கலந்துரையாடலின்போது கோடிட்டுக் காட்டப்பட்டதாகவும் மிக நம்பிக்கையாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆயுதங்கள் மீட்பு: 2 ஹெலிகள் முற்றுகச் சேதம்

# கடந்த மாதத்தில் மட்டும் 64 இந்திய இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம், செப் 3

கடந்த மாதத்தில் (ஆகஸ்டில்) இடம் பெற்ற மோதல்களின் போது இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 64 பேர் உயிரிழந்துள்ளனர்; 67 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து 20 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

-இப்படித் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் 31 8 1988 திகதியிட்டு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விபரம் வருமாறு:-

1-8-88 இலிருந்து 30-8 88 வரை நடந்த விடுதலைப் புலிகள் - இந்திய இராணுவ மோதலில் 64 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். 67 பேர் காயமடைந்துள்ளனர் இந்திய இராணுவத்திலிருந்து ஒரு பிறென் எல். எம். ஜி 13 எஸ். எல் ஆர், 6 எஸ். எம் ஜி. எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பலத்த பாதுகாப்பு அரண்களால் சூழப்பட்ட நிக்தியகுள இந்திய இராணுவ முகாமில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு எம். ஐ. 8 ரக ஹெலிகொப்டர்கள் எம்மால் முற்றாக நாசமாக்கப்பட்டன.

எமது தரப்பில் பதினெந்து விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

''செக்மேற்'' 1, 2, 3

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவா, நாங்களா, யார் துரோகிகள்?

## விடுதலைப் புலிகள் கேட்கிறார்கள்

யாழ்ப்பாணம், செப் 3

யார் துரோகிகள்? என்ற தலைப்பில் விடுதலைப் புலிகள் இயக்கம் பத்திரிகைகளுக்கு அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளது

அந்த அறிக்கை வருமாறு:-

யார் துரோகிகள்?

இந்தியப்பூகோள நலன்களுக்காக எமது போராட்டத்தை ஆதரித்து, எம்மை விடுதலைப் போராளிகள் என அழைத்து, பயிற்சிதந்து, இன்று தனது நலனுக்காக நாம் எமது மக்களின் நலனைவிலை பேச மறுத்துவிட்டோமென்பதற்காக எம்மீது போர்தொடுத்து எமது மக்களை அழித்து, கற்பழித்து -

யாரைப் போராளிகள், அகதிகள் என அரவணைத்தார்களோ அவர்களை தேசிய பந்தோபஸ்துசட்டத்தின் கீழ் ஒருவருடம் விசாரணை எதுவுமின்றி சிறையிலடைத்து -

தனது ஆதிக்க வெறி பாசிச ஜெயவர்த்தனவுக்கு மேலாக, தமிழீழப் படுகொலையை செய்து நிலைநாட்ட முயலும் இந்தியாவா?

அல்லது எமது மக்களின் சுதந்திரத்துக்காக எமது லட்சியத்தை தவிட்டுக் கொடுக்காத நாங்கள் துரோகிகளா?

ராஜீவ் - ஜே ஆர் ஒப்பந்தத்தை ஏற்று நாம் ஆயுதங்களை முற்றாகக் களையும் வரை போர் நிறுத்தம் இல்லையென இந்திய அரசு கூறியுள்ளது.

எமது மக்களின் நலனை பாதுகாக்காத எந்த ஒப்பந்தத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

கடந்த மாதத்தில் இந்திய இராணுவத்தினர் யாழ். மாவட்டத்தில் 23 பேரும், முல்லைத்தீவில் 19 பேரும். கிளிநொச்சியில் 7 பேரும், வவுனியாவில் 9 பேரும் மன்னாரில் 6 பேரும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுப் பகுதியில் தினசரி 2 மணி நேரம் ஊரடங்கு தளர்வு

கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச்சட்டம் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தினசரி 2 மணித்தியாலங்கள் தளர்த்தப்படுவதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

எனினும் நெடுங்கேணியின் கிழக்குப் பக்கமாக உள்ள தண்டுவானைச் சூழவுள்ள கிராமப்பகுதிகள், காட்டுப்புறங்கள், தண்ணீரூற்று, நித்திகாய்க் குளம் ஆகியவற்றைச்சூழவுள்ள கிராமங்கள், அடர்ந்த காடுகள் என்பவற்றில் தொடர்ச்சியாகத் தேடுதலும், மோதல்களும் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல கிரமங்களுக்கு மத்தியில் நடந்தும், சைக்கிளிலும், வாகனங்களிலுமாகவவுனியாவுக்குவந்து சேர்ந்துள்ளோர் தெரிவித்த தகவலின்படி முல்லைத்தீவு நகரப் பகுதியிலும் தேடுதல் உக்கிரமாக இடம்பெறும் பகுதிகளிலும் ஷெல்லடியும், துப்பாக்கிப் பிரயோகங்களும் தொடர்ந்து நடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-164)

### சுபநேரம்

03 - 09 - 88
சனிக்கிழமை
சுபநேரம்:
03 05 முதல் 04 35 வரை
ராகுகாலம்:
09 05 முதல் 10 35 வரை
ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி
அட்டமி நவமி

அமைதிப் படை வெளியேறி

## ஸ்ரீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு வழங்கக்கோரி சிங்களவர் சத்தியாக்கிரகம்

திருமலையிலுள்ள சிங்கள மக்கள் கடந்த வியாழனன்று ஹர்த்தாலும். சத்தியாக் கிரகமும் அனுஷ்டித்தனர்.

இந்திய கடற்படையினரால் சிங்கள மீனவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், இந்திய அமைதிப் படையினர் வெளியேறவேண்டுமென்றும். ஸ்ரீலங்கா இராணுவம் சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கோரியுமே இந்த ஹர்த்தாலும், சத்தியாக் கிரகமும் அனுஷ்டிக்கப் பட்டன.

இருநூறுக்கும் அதிகமான சிங்கள மக்கள் மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் கூடியிருந்து சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சத்தியாக்கிரகம் செய்தனர்.

இதனால் சிங்கள மக்களுக்குச் சொந்தமான கடைகள் யாவும் (மணிக்கூட்டுக்கோபுரத்தடியில்) மூடப்பட்டிருந்தன. சிங்களவரின் வாகனங்கள் எதுவும் ஓடவில்லை.

## நூல் அறிமுகம்

டாக்டர் சிவ. கிருஷ்ணராசா எழுதி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் (ரி. ஆர். ஆர். ஓ) பிரசுரிக்கப்பட்டுள்ள சுகாதார சேவையாளரின் கைநூல் அறிமுக வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

நாலாம் குறுக்குத் தெருவில் உள்ள ரி. ஆர். ஆர். ஓ. அலுவலகத்தில் பிற்பகல் 3 மணியளவில் இந்த வைபவம் நடைபெறும். (ஒ-5)

## 12ஆம் திகதியே ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம் செப் 3

தென்பகுதிப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் இந்த மாதம் 12 ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர்கள், அமைச்சர் ஹமீதை நேற்று சந்தித்தபோது இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(அ-5)

## திருமலையிலும் உண்ணாவிரதம்

திருகோணமலை செப் 3

பூஸா தடுப்பு முகாமில் இடம் பெற்று வரும் சாகும்வரை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்தும், தடுப்பு முகாம்களில் உள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரியும் கடந்த வியாழக்கிழமை திருகோணமலையில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது.

நூற்றுக் கணக்கான ஆண்கள், பெண்கள், பாடசாலைப் பிள்ளைகள், சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

டொக்யாட் வீதியில் நெல்சன் படமாளிகைக்கு முன்னாலுள்ள திறந்த வெளியில் காலை முதல் மாலை வரை உண்ணாவிரதம் இடம் பெற்றது.

## நாகேஸ்வரம் இரதோட்சவம்

யாழ்ப்பாணம், செப் 3

அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரம் கண்ணன் ஆலய இராதோற்சவம் இன்று நடைபெறுகிறது.

காலை 9 மணிக்குப் பெருமான் கோபுர வாசலில் எழுந்தருளி 10 மணியளவில் இரதத்தில் ஆரோகணித்துத் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும் (ஒ)

சிறப்பிதழ்
3ஆம் 4ஆம் பக்கங்களில்

யாழ். மாவட்ட
மினி சினிமா சங்கக் காரியாலய

திறப்பு விழா

நிகழும் விபவ வருஷம் ஆவணி மாதம் 20 ஆம் நாள் 05-09-1988 திங்கள் காலை பத்துமணியளவில் மணிக்கூட்டு வீதி 42/2, இலக்கத்தில் அமையப்பெற்றுள்ள கட்டிடத்தில் (குணம்வீடியோவுக்கு அருகில்)

திரு. சி. வி. கே. சிவஞானம்
(மாநகரசபை ஆணையாளர்)
அவர்களால் ஷெ காரியாலயம் திறந்து வைக்கப்பெறும்.
மங்கள விளக்கேற்றுபவர்-
செ. வசிகரநாதன்
(யாழ் மா. மி. சி. சங்கத் தலைவர்)

தொடர்ந்து மினி சினிமா உரிமையாளர்களுக்கான பொதுக் கூட்டமும் நடைபெறும்.

நன்றியுரை:- குவேந்திரன் (செயலாளர்)

மினி சினிமா உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா. மா. மினி சினிமா சங்கம்.
(C/6466)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda Re-Condition மோட்டார் சைக்கிள் விற்பனைக்குஉண்டு. C 90, Hao 2. C 50, CF 50 Charly, ST 50, MB 5 என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Cycle Centre, 148, (230) K K. S. Road, Jaffna. TP 23807 (6222)

பாவித்த வீட்டுத தளபாடங்கள் அலுமாரி சட்டில் மெத்தை Vono Spring சட்டில், கண்ணுடி மேசைகள், கடைச் சோக்கேஸ், சாப்பாட்டு மேசைகள், Show Case, காரியாலய மேசைகள், மற்றும் பித்தளை, கிளாஸ் வகைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக் குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியருகில். (6103)

18''-21'' அங்குல உயரமுடைய விநாயகர் நடேசர் விக்கிரகங்கள் உற்சவத்திற்கு ஏற்றவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (6216)

புதிய PL-4 சிறிய லேத்மெசின் தேவைப் படுவோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: பிள்ளையார், 259, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (6217)

கலனுக்கு 200 மைலுக்கு மேல் வேலைசெய்யக் கூடிய Honda CB 505 Recondition மோட்டார் சைக்கிளும், சிறந்த இன செங்கரும்பு முற்றிய நிலையில் மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: வை. பேரம்பலம், தலையாளி, கொக்குவில். (6115)

ஒரு நாள் கோழிக் குஞ்சு வேண்டிய நிறம், இனம். மிகவும் குறைந்த விலையில் ஒவ்வொரு செவ்வாய் வெள்ளியில் சத்திசம்பியன் ஒழுங்கை தாஸ் நாமகள் ஒழுங்கை [கொக்குவில் கிழக்கு] லக்ஷ்மி றேடர்ஸ் கொக்குவில் சந்தி, மணிமுச் கூல்பார் இனுவிலில் பெற்றுக்கொள்ளலாம். (6238)

நல்ல இன ஜேசிமாடு 2மாதக் கன்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் விலாசம்:, A. J. சுப்பிரமணியம், இல. 45, சொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (சந்தான மாதா கோயில் அருகாமை) (6111)

புதிய கண்ணுடி, அலுமினிய சோக்கேஸ் இரண்டும் (5½x 3½x 1½), மூன்று மரருக்கைகளும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் லக்கி சேவிஸ் ஸ்ரேசன், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (6110)

நல்ல நிலையிலுள்ள Hall Setee Set ம் குளிர் சாதனப் பெட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 21, 1-ம் குறுக்குவிதி, யாழ்ப்பாணம். (6239)

தூய இன பொமனேரியன் அழகிய பெண் நாய்க்குட்டி (4 மாதம்) ஒன்றும் அதே இனபெண் நாய் ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய், (6237)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நீதிமன்ற வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. மாதேவா, விற்பனைத் திணைக்களம். பருத்தித்துறை. (6223)

### வீடு விற்பனைக்கு

கரம்பொன் பாலக் காட்டுச் சந்தியில் எல்லா வசதிகளும் கொண்ட வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு செல்வா ஹாட்வெயர், (வெலிங்டன் சந்தி) 121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6231)

## தேவை

பிரபலமான அச்சகத்திலும் பத்திரிகை ஸ்தாபனத்திலும் முதலீடு செய்யப் பங்காளர்கள் தேவை. முழுமையான விபரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். தொடர்பு:- நம்நாடு இன் வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற், 192, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். (6219)

மெஷின் மைன்டர் (ஒட்லி சிலிண்டர்) அச்சுக் கோர்ப்போர்தேவை நேரில் வரவும். தொடர்பு:- நம் நாடு இன் வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற் 192, K.K.S. வீதி, சுன்னாகம். (6218)

இலுப்பம் விதை, வேப்பம் விதை தேவை. தொடர்பு கொள்ளவும் மில்க்வைற், யாழ்ப்பாணம். (C 12)

க. பொ. த. உயர்தர வகுப்பில் கணக்கியல், வர்த்தகம், அளவையியல், இந்துநாகரீகம் கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர்கள் இருவர் உடனடியாகத் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் வரவும். அதிபர் அருணோதயக் கல்லூரி, அளவெட்டி. (6285)

### வீடு வாடகைக்குத் தேவை

சுண்டிக்குளி சின்னக் கடைப் பகுதியில் இரு அறைகளுடன் தண்ணீர் வசதியுடைய வீடு வாடகைக்குத் தேவை. அத்துடன் 1 or 2 Sri காரும் உடன் தேவை. தொடர்பு: தவேந்திரன் தொழில் திணைக்களம், 250, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (6234)

### சிங்கப்பூருக்கு பணிப்பெண்கள் தேவை

சிங்கப்பூருக்கு பணிப்பெண்கள் உடனடியாகத் தேவை. முப்பத்தைந்து வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம். கல்வியறிவு அவசியமில்லை மிகக்குறைந்த செலவில், ஆறு கிழமைகளில் அனுப்பிவைக்கலாம். மேலதிக விபரங்களுக்கு துரைசிங்கம் 376 B, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்) அரியாலை, யாழ்ப்பாணம். [6213]

## மணமகள் தேவை

யாழ்சைவ வேளாள தாவர போசன செவ்வாய்க் குற்றமற்ற அரசாங்க Technical Officer ற்கு 25 வயதை அணுகும் பெண தேவை. பட்டதாரிகள் ஆசிரியைகட்கும் கவனம் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும் இல: 329 C/O உதயன் யாழ்ப்பாணம். (6227)

இந்து வேளாள 32 வயது 7ல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் டென்மார்க்கில் உள்ளார். பெண்/சகோதரர் டென்மார்க்கில் இருப்பின் நன்று. சாதகப்பிரதி இயலுமாயின் புகைப்படம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்க 351 C/o உதயன், யாழ்ப்பாணம். (6226)

## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நற்குணமுள்ள A/L ஆங்கில தட்டெழுத்து. சங்கீதத்தில் தராதரம் பெற்ற அழகான பெண்ணுக்கு Canada வில் பொறியியலாளரான சகோதரர் தகுதியான மணமகனை தேடுகின்ருர். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். கனடா செல்லும் வாய்ப்புண்டு. தொடர்பு: 352 C/o உதயன் யாழ்ப்பாணம். (6228)

யாழ். உயர் சைவ வேளாள சுத்தபோசன சிறப்பான குடும்பத்தில் வெள்ளைநிற(Rosy Red) மிக அழகிய (Paragon of beauty), A/L படித்த ஆங்கில அறிவுள்ள பெண், பிறப்பு 16-7-49 உத்திரட்டாதி முதல் கால், கடக லக்கின, 5' இளம் தோற்றமுள்ள பெண். 2, 4, 1 எண் உள்ள உயர்பதவி வகிக்கும் வரனுக்கு நல்ல சீதனம் கொடுக்கப்படும். குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: 186, C/o உதயன். (6114)

## சேவை

வாழ்க்கை வாகன காப்புறுதி (Insurance) தொடர்பான எந்தவிதமான பிரச்சனைகளையும் இலகுவில் தீர்த்துக் கொள்ள விரும்புபவர்கள் எம்முடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். No. 11, Brown Road, Station View, Kokuvil. (6232)

### தவறிவிட்டது

சத்திய பெருமான் செல்லத்துரை என்பவராகிய எனது இலங்கை பிரஜாவுரிமை வதிவிட அனுமதி அட்டையை சங்கானையில் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (6229)

பெரியசாமி கிருஷ்ணன் என்பவராகிய எனது அடையாள அட்டை இல. 422032584X அச்சுவேலியில் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அச்சுவேலி சந்தையிலிருக்கும் உதயன் பத்திரிகை வியாபாரியிடம் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்கின்றேன். (6230)

நடராஜா நாகேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை இல 277101309 V கோப்பாய் மினிவானில் செட்டித் தெரு சந்திக்கும் பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். இத்துடன் பேர்ஸும் தவறிவிட்டது. (6116)

திருமதி சிவபாக்கியம் துரைராஜா என்பவராகிய எனது அடையாள அட்டை இல: 277700921X-11A பெயாலயின் ரோட், டெகிவல என்னும் விலாசமுடையதை தவற விட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றேன். (6233)

### சிவா மெக்கானிக் வேக்

குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி, மோட்டார், மின் அடுப்பு, அயன் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சிவா மெக்கானிக் வேக், பிரதான வீதி, (அச்சுவேலி மாகாவித்தியாலயத்திற்கு அருகாமையில்) அச்சுவேலி. (6205)

## கல்வி

### கல்வி A/L 89, 90

பிரயோக கணித படிமுறைப் பயிற்சிநூல் 'காவியும் அதன் பிரயோகங்களும்' வெளிவந்து விட்டது. A/L நான்கு வினாக்களுக்குப் பயிற்சியளிக்கும் பூரண பயிற்சி நூல் பல புதிய வினாக்களுட்பட 125 வினாக்களைக் கொண்டது. யாழ் கொழும்பு, மட்டக்களப்பு நகர புத்தக விற்பனை, நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். ஆசிரியர்:- சி. துரையப்பா. (6208)

### WIN INN Ladies Academy

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம். விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புக்களும், கீழைத்தேயமேலைத்தேய இசை வகுப்புக்களாகிய வயலின், வீணை, கிற்ருர், ஓகன், வாய்ப்பாட்டு. பரதநாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் கற்பிக்கப் படுகின்றன. Shorthand Typing வகுப்புக்களும். இம் மாதம் ஆரம்பிக்கப் படும். விண்ணப்பங்கள் காலை 9—12 மணிவரை, 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (6112)

### German Language

வெளிநாட்டில் உயர் கல்விப் படிப்பைத் தொடருபவர்களுக்காக, வகுப்புக்கள் 16-9-88 இல் ஆரம்பமாகவுள்ளது இப் பாஷையுடன் சம்பந்தப்பட்ட மொழி பெயர்ப்புக்களும் மேற் கொள்ளப்படும். தொடர்பு: Mr. Sabanayagam, German Language (Teacher) 'Rudi Cot' 33, Kandy Road, Jaffna. (C/ 6426)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம். ஜாதகபலன் விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள். 'சக்தி சரவண' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6211)

### WANTED

Instructress in Shorthand Typing required. Good remuneration- Apply 353, C/o Uthayan, Jaffna. (C/21)


### சைவசமயப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 3 வருடாவருடம் கொழும்பு விவேகானந்த சபையினரால் நடத்தப்படும் சைவசமயப் பாடப்பரீட்சை இம்முறை 20-11-88 ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை சபையினரினல் ஏற்றுக்கொள்ளப்படும்.

உரிய அறிவித்தல்களும், விண்ணப்பப்படிவங்களும் எல்லாப்பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன [illegible] ளனர். (சி)

## நன்றி நவிலலும் நினைவஞ்சலியும்



### இளையதம்பி சபாலிங்கம்

அவர்கள்

தோற்றம்:- 04- 02- 1919 மறைவு:- 03- 08 1988

03. 08. 1988 புதன்கிழமை இங்கிலாந்தில் மறைந்த செய்தியறிந்து எமது இல்லத்திற்கு வருகைதந்து பிரிவுத் துன்பத்தில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும்; இங்கிலாந்து, மலேசியா, பாரேன் முதலியஇடங்களில் வாழும் அமரர் அவர்களின் மக்களுக்கும், எமக்கும், அனுதாபச் செய்திகளனுப்பி வைத்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சு நிறைந்த நன்றியைச் செலுத்துகின்ருேம்.

அவரது ஆத்மா சிவனடி சேர்ந்து, பேரின்பப் பெருவாழ்வு பெற இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்ருேம்.

அமரரின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் சார்பாகவும்,

இ. கனகலிங்கம்
சகோதரர்

98, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (C 5314)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05-03-1909

மறைவு: 15-09-1987

திதி: 03, 09. 1988

### அமரர் நா. வ. கனகசபை

அவர்கள்

(நயினை-கொழும்பு பிரபல புகையிலை வர்த்தகர்)


பண்பின் சிகரமாய்பாசத்தின் உறைவிடமாய் அன்பின் ஜோதியாய் நேர்மையின் அணிகலமாய் கடமையில் கண்ணியமாய் வாழ்ந்து எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்ருகின்ற போதும் உங்கள் நினைவு எங்கள் மனதை வாட்டிக் கொண்டேயிருக்கின்றது. உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5 A வட்டாரம்,
நயினாதீவு. [C/30]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் நே. வாமதேவா

மலர்வு: 09-09-1911 உதிர்வு: 05 06-1988

அன்னரின் அந்தியேட்டிக் கிரியை 2-9 88 வெள்ளிக்கிழமை நகுலேஸ்வரத் தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிரியைகள் இன்று 3-9-88 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள், யாபேரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்ருேம். நன்றி!

அன்னரது குடும்பத்தினர்.

557/1, கே. கே. எஸ். வீதி,
மதவடி லேன்,
யாழ்ப்பாணம். [C/22]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி புஸ்பகாந்தியம்மா நாகநாதர்

தோற்றம் : 08-07-1913 மறைவு ; 04-0_-1988

அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

அன்னரின் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும் இன்று 03-09-88 சனிக்கிழமை காலை நடைபெறும்.

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவு கேட்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக!

-பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். [6109]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரம் ஆலய ரதோற்சவ சிறப்பிதழ்


ஸ்ரீ நாகவரத நாராயணர்
சித்திரத்தேர் வருக!

**நியூ புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ்**

69, மின்சார நிலைய விதி,
யாழ்ப்பாணம்.

பொன்னுயர் திகிரி பொலிமலர் தண்டு
இன்னிசைச் சங்கம் ஏந்திய கிருஷ்ணு!
முன்னிய திருவாய் மொழிஎமக் குரைப்பாய்
மன்னவா நாக வரதநா ரணனே!

V

**கி. சிலுவைதாஸன் ஜே.பி.**

13, மத்திய கிழக்கு வீதி,
றெக்கிளமேஷன்,
யாழ்ப்பாணம்.

வந்தருள்வாய் மாதவனே வானில மேனியனே
தந்தருள்வாய் நின்கழலே தண்துளப மாலையனே
பாற்கடலிற் பள்ளி கொண்டு
படியளக்கும் திருவரங்கா
நாற்புரவித் தேரினிலே
நற்கிதை சொன்னவனே!

பலசரக்குப் பொருள்களை
மொத்தமாகவும்,
சில்லறைக்கும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்!

**குகன் ஸ்ரோர்ஸ்**

180 (380), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பாற்கடலிற் பள்ளிகொண்டு
படியளக்கும் திருவரங்கா!
நாற்புரவித் தேரினிலே
நற்கிதை சொன்னவனே
தங்கரதம் வாருமையா!

**லிங்கம் கூல் பார்**

52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தம்பிரான் தங்கரதமேறி இன்று
தந்திடுவான் திருக்கோலம்!
★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள உகந்த இடம்

**றெஜின் குளோப் பார்மஸி அன் குரோசறி**

12, சின்னக்கடை வீதி,
யாழ்ப்பாணம்.

வண்டுறையும் நின்பாத மலரிணையெம் தலைவைத்து
மகிழின்ப வாழ்வு தருவாய்
மன்னும் ஆவணிக் கிருஷ்ண ஜயந்திரத மேறிவரும்
மாதவ மகா தேவனே!

**சிற்றி ஏஜென்ஸி**

158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


## நாகமாக வந்த நாராயணர்

# இன்று தங்க ரதமேறி வருகிறார்!

"பந்தனையறுக்கும்
பராபர முதலே
சிந்தனைக் கடங்காத்
திரளொளி விளக்கே
சுந்தரப் பாதத்
துணையெமக் கருள்வாய்
மந்திர நாக வரதநா
ரணனே"

கண்ணன் என்று கண்ணனுக்குப் பெயர் கொடுத்தார் சிவபெருமான் சலந்தரனைக் கொன்ற தனது சக்கரப் படையைத் திரும்பப் பெறுவதற்காக திருவீழி மிழலையிலே தினமும் ஆயிரம் தாமரை மலரால் சிவனை அர்ச்சித்தார். ஒரு தினம் ஒருமலரைக் குறையும்படி செய்தான் இறைவன். திருமால் தனது ஒரு கண்ணைப் பெயர்த்து மலராக அர்ப்பணித்தார். கண்ணை மலராக அர்ச்சித்த படியால் கண்ணன் என்ற நாமம் சூட்டிச் சக்கரத்தையும் கொடுத்தார்.

இந்தக் கண்ணன் அடியார்களின் குறைகளைக் காண்கின்ற கண்ணன். நாம் செய்யும் நன்மை தீமைகளைப் பார்க்கும் கண்ணன், உலகில் நடக்கும் கொடுமைகளைப் பார்க்கும் கண்ணன், அவற்றைப் போக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்ற கண்ணன். அவன் நினைப்பாரின் உள்ளத்தில் நிற்கும் கண்ணன், தருமங்களைச் சொல்லுங் கண்ணன். தொண்டர்களுக்குத் துணை நிற்கும் கண்ணனாக உலகெங்கும் காட்சி தருகிறான். சிவனுடைய இன்னொரு வடிவமே நாராயணன். மகாவிஷ்ணு கிருஷ்ணன், கண்ணன் எனப் பல வேறு நாமத்துடன் விளங்குகின்றார்.

"நாரணன் காண் நான்முகன் காண் நால் வேதன் காண்"—என்பது அப்பர் தேவாரம்


"தீவடிவின் சிவனயனே போல்வார் மன்னு திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே"

என்பது திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி.

**மாயவன்**

மாயவனுகிய கண்ணன் மனிதருள் மனிதராய்த் தோன்றி மாயாமலமறுத்துப் பேரின்ப வீடு தருகிறான். ஆய வடிவு பதினாறாயிரம் எடுத்த போது தூய வருகிய சகாதேவன் மூலமாம் தோற்றமுணர்ந்து எவ்வுலகும் தாய அடியிணைகள் தன் கருத்தினுற் பிணித்தான் இந்தநெறியில் நாமும் ஆண்டவனின் திருவடி பிடிக்கவேண்டுமென்பதே வழிபாட்டின் நோக்கமாகும்

அடியார்களின் உடம்பாகிய குடத்திலே அன்பாகியபால் இருக்கும். கண்ணனை நினைக்க நினைக்க அன்புப்பால் ஆறு ஆதாரங்களுள் ஒன்றாகிய மூலாதாரத்தில் திரண்டு தயிராகிறது. அந்தத்தயிரை அறிவாகிய மத்தினாலே கடைய வேண்டும். கடைந்த வெண்ணெய் எம்முள் கொடிமரமாயிருக்கும் முள்ளந் தண்டு வழியாக சிரசிலேயிருக்கும் சகஸ்ரார மண்டலத்தை அடையும். அந்த வெண்ணெய்- ஞானப் பழமாகிய வெண்ணெய் ஆன்மாக்கள் தேடிய வெண்ணெய் வீண்போகக் கூடாதென்பதற்காக அந்தப்பச்சைக் கள்வன் தானே நாடிச் சென்று திருடிக்குறிப்பிட்ட பக்குவ ஆன்மாக்களுக்கே சேரச்செய்கின்றான். கண்ணன் செய்த புண்ணியத்தைத் தானே பெற்றுக்கொண்டு பின்பு புண்ணிய வீட்டில் கண்ணனைத் திறம்படச் சேர்த்த வண்ணமும் இதுவேயாகும். இம்மைச் செல்வமும் அம்மையில் வீடும் தருபவன் அந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளைக் கண்ணன்.



### சேணியடி நாகதம்பிரான்

ஆதிசேடன் கண்ணனின் அம்சம். ஆதிசேடனின் வம்சம் பாம்பினங்கள். சுமார் 250 ஆண்டுகளின் முன் செடிகளும் கொடிகளும் சிறுமரங்களும் செறிந்த பற்றைக் காடாகக் கிடந்த மேய்கால் நிலத்தில் ஒற்றையடிப்பாதையொன்று இருந்தது. அந்தப் பாதை வழியே சென்ற அன்பர்களுக்கு வாகை மரம், விளாமரம், நுணா மரம், இவற்றுக்கிடைப் பட்டபுற்றில் நாகங்கள் காட்சிகாட்டி மறைந்தன பின்பு பல முறை பற்பல அடியவர்க்கு நேர்க்காட்சியும் கனவுக்காட்சியும் காட்டின. பலர் அவ்விடத்தை வழிபடத் தொடங்கினர். சிலர் பால் வைத்தனர். சிலர் பொங்கலிட்டனர். சிலர் பலகாரமடையிட்டனர். இப்படியாகப் பல அடியார்கள் பூஜிக்கும்போது உ பாம்புகள் திடீரெனத் தோன்றி மறையும். நாகதம்பிரானெனப் பெயரிட்டுச் சிறு கோயிலாக்கினர். கண்ணனுகக் கனவில் காட்சி தந்த படியால் ஆவணி ரோகிணியில் விசேட பொங்கலிட்டு வந்தனர். இவ்வாறு காவல் தெய்வமாகிய பைரவரும் நாகதம்பிரானுகிய கண்ணனும் பூஜிக்கப்பட்டனர். ஆடு, மாடு தண்ணீர் குடிப்பதற்காக வெட்டப்பட்ட சேணியருகே இவ்வாலயம் அமைந்த படியால் இக்கோயில் "சேணியடி நாகதம்பிரான்" என அழைக்கப் பட்டு வந்தது. இத் தலமே இன்று நாம்- மகோற்சவம்- நிகழ்த்தும்- நாகேஸ்வர ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானமாகும்.

### அற்புதங்கள்

1953வரை ஒரு சிறு கோயிலாக இருந்தது. அன்படியார் முயற்சியால் வளரத் தொடங்கியது. இறந்தபாலன் உயிர் பெற்றமை, சந்தான கிருஷ்ணுக நின்று சந்தானச் செல்வம் வழங்கியமை, புற்றுரோகம் நீக்கியமை, கண்ணொளி கொடுத்தமை, ஊமையை வாய் பேசச் செய்தமை, விஷம் தீண்டியவனைப் பிழைக்கச் செய்தமை. இத்தகைய அற்புதங்களால் அடியாரின் கூட்டம் அதிகரித்தது. நாளொரு வண்ணமாக வளர்ந்த கோயில் 1979 ஆவணி ஓணத்தில் முதலாவது கும்பாபிஷேகமும் 1988 ஆனியில் இரண்டாவது கும்பாபிஷேகமும் நிகழ்ந்தன. ஆவணி கிருஷ்ண ஜெயந்தி தேர்த்திருவிழாவாக நடைபெறுகிறது. அடியார்கள் ஆண்டுதோறும் கண்ணனின் பாதபூஜை செய்யும் வாய்ப்பும். அவனது திருக்கல்யாணத்தைக் காண்கின்ற தவப்பேறும், மாதந்தோறும் ஏகாதசியில் பெருமானின் திருவடித் தீர்த்தமும்நடைபெறும். செல்வமும் இங்கேபெறக் கூடியதாக இருக்கிறது. அடியார்கள் எல்லாம் வல்ல எம்பெருமானை இன்று தேரில் கண்டு தரிசித்து காலாஷ்டம் நீங்கி, நாகதோஷம், கருடதோஷம் நீங்கி நலம் பெறுவார்களாக என்று பிரார்த்திக்கின்றேன்.

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**
(ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான பிரதம நிர்வாகஸ்தர்)

மலர் ஏற்பாடு:
**யோண் கிறிஸ்துராஜா**

தயாரிப்பு:
'உதயன்' செய்தியாளர்
**ரி. பி. லிங்கம்**


மந்திரக் கீதையின் வாய் மலர்ந்து
மணிரதம் ஓட்ட வேண்டி நிற்கும்!

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**

239, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அளவை அமர்ந்தருள் பாலிக்கும்
அண்ணல் நாராயணன் தேரூர்க!
✶
சிறுவர், சிறுமியர்க்கு றெடிமேட் ஆடைகள்
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்

**மகாராணி ரெக்ஸ்ரைல்**

50 பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

தேவர்க ளெல்லாம் யாதவர் ஆதக
தேவமா தர்களும் கோபிய ராகுக!

**தறூஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

எஸ். 2, நவீன சந்தை
சுன்னுகம்.

அளவையூர் ஸ்ரீ நாகவரத நாராயணர்
அகிலமெலாம் நாமம் வளர்வதாக!
✶

**ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனம்**

275, பீச் ரோட், யாழ்ப்பாணம்.

அல்லலில் கடலிடை அழுந்துகின்ற
அடியாரை யாட்கொளு மரங்கநாதன்!
நாககப் பொருள்கள், விளையாட்டுப்
பொருள்கள், அன்பளிப்புப்பொருள்கள்
யாவற்றுக்கும்

**பெஷன் ஹவுஸ்**

கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

காரிருள் சூழ்ந்ததால் கண்டிலோம்
காட்சிதந்து வையம் காருமையா!
ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்

**ரஞ்சனுஸ்**

17, 18, 18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

அமங்கல நாதங்கள் அமிழ்ந்திட
இகமதில் குழலோசை கேட்கட்டும்!
அன்பளிப்புப் பொருள்கள், கோல்ட்
கவறிங் நகைகள், விளையாட்டுப்
பொருள்களுக்கு

**அம்பிகாபதி பான்ஸிகுட்ஸ்**

66, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ நாகவரத நாராயணர்
சிறப்பிதழ் சிறக்க ஆசி!
வாசனைத் திரவியங்கள் பெறுவதற்கு
நாடுங்கள்.

**பெற்ரு எசன்ஸ்சப்ளையர்ஸ்**

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நானிலத்துப் பிணிகள் மடிந்திட
நாராயணர் அருள் வேண்டும்!
மீண்டும் சந்தையில் தாராளமாகக்
கிடைக்கிறது நாதன் ஸ்பெஷல் அப்பளம்!
50, உறைகளை சேகரித்து வழங்கினுல்
ஒரு சில்வர் குவளை இனம்!

**நாதன் ஸ்ரோர்ஸ்**

213, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பார்போற்றும் அளவை ஸ்ரீ நாகவரத
பகவான் வீதியுலா வருக வருகவே!
சாய்ப்புச்சாமான்கள், அன்பளிப்புப்
பொருள்கள், பிஸ்கட், ரொபி
வகைகளுக்கு சிறந்த இடம்

**நவவேலன்ஸ்**

22, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

அளவையூர் அருட்கவி நேசனே அன்பர்க்கு
கீதா (உ)பதேச தேரனே!
நவநாகரிக புடைவைத் தினிசுகளுக்கும்,
பட்டுவேட்டி, சால்வைகளுக்கும்

**சீமாட்டி**

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கோவிந்தா வைகுந்த வாசா – என்றன்
குறைகேட்டு திருவுள்ளம் இரங்குவாய்
போற்றி!

**சுந்தரன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**

30, கே.கே.எஸ்.வீதி,
சுன்னுகம்,

அகிலாண்ட கோடிபெற்றவனே பூமி
ஆற்றெணுத் துன்பத்தைத்
தீர்த்தருள்வாயே
பகவனே பாண்டுரங் கேசா – அன்று
பார்த்தனுக் குபதேசம் செய்தவா போற்றி!

**கி. யூட்ஸ் அன்ரனி**

20, கடற்கரை வீதி.
குருநகர்.
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரம் ஆலய ரதோற்சவ சிறப்பிதழ்


தொன்மைதரு மண்டலங்கள் துதிக்கநின்ற
துவாரகனே தண்டுளப மாலே சங்கும்
நன்மைதரு சக்கரமும் தண்டும் பூவும்
நான்குகரங் கொண்டகில சராசரங்கள்
புன்மைதரு நெறிநீங்கும் புனித மேலாம்
பொழிகருணை நலம்சிறக்கக் கோயில்கொண்டு
வன்மைதரு நாகேஸ் வரத்தில்மேவும்
வரதநா ராயணரே யாமருஞ்சல்!

V

## ஞே. ஞேமவாழ்தர்
(கெனடி)

பாக் ரோட் றெக்கிளமேஷன்,
குருநகர்.



கொடுமைகளைத் தீர்த்தருளும்
கோபாலா கோவிந்தா
படுதுயரம் தீர்ப்பவனே
பரந்தாமா பாண்டுரங்கா!

✶ ஆங்கில மருந்து வகைகள்
✶ பால்மா வகைகளுக்கு

## வசந்தா பார்மஸி
அன் குறோசறி
280, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரத்துச் சந்தி)
யாழ்ப்பாணம்.

மளிகைப் பொருள்களை மனம்போல்
வாங்குவதற்கு நாடுங்கள்

## வசந்தா ஸ்ரோர்ஸ்
150, பாங்ஷால் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



தேரூர்ந்து செகத்தைச் சிறப்பிக்க
வாருமையா கோகுலத்து வண்ணனே!

சகலவித அழகுசாதனப் பொருள்கள்,
சாய்ப்புச் சாமான்களைப் பெற

## அம்பிகாபதி பான்ஸி றேடர்ஸ்
9 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



காசினியில் சவலைகள் நிறைந்ததையா
காத்திடும் ஸ்ரீநாகவரத நாராயணரே!

நியாய விலையில் உங்கள் புடைவைத்
தேவைகளைப் பூர்த்தி செய்ய வாருங்கள்!

## விக்கினேஸ் ரெக்ஸ்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



தென்னளவை யூரில் திகழும்
நாகேஸ்வரம்வாழ்
முன்னவனே வேத முதல்வனே
- என்னுள்ளத்தில்
நீங்கா துணர்த்திடுவாய் நீலவண்ணா
நீ நடிக்கும்
பூங்கா வனத்தின் பொருள்!

மளிகைப் பொருட்களின் மாளிகை
உங்கள் தேவைக்கு நாடுங்கள்:

## விநாயகர் ஸ்ரோர்ஸ்
166, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.


# ஈழத்து வரதராஜர் ஆலயங்களும் கண்ணனின் பன்முகத்தோற்றங்களும்!

வல்லிபுரத்திலே ஆழ்வார் எனப் பெயர் பூண்டும் வண்ணார்பண்ணையில் பெருமாள் என வழங்கப்பட்டும் பொன்னாலயம் பதியில் வரதராஜப் பெருமாள் என நாமம் பூண்டும் எழுந்தருளியிருக்கும் கண்ண பரமாத்மா அளவையூரிலே, நாகேஸ்வரத்திலே நாகவரத நாராயணப் பெருமான் எனத் திருநாமம் பூண்டு நாடி வரும் அடியார்க்கெல்லாம் கஷ்டம் நீக்கி கருணைமழை பொழிந்து வருவதை நாளாந்தம் பக்தர் கூட்டம் கண்டு களித்து வருகிறது கண்கூடு.

விளா, வாகை, நுணா நிறைந்த பற்றைக் காட்டிலே நாகமாகத் தோன்றிய பெருமான் ''கோபாலன்'' என்று கூறிக் கோயில் கொண்டார் என்பது வரலாறு. குடி லாக இருந்த ஆலயம் எம்பெருமானின் அருளினால் நாளாந்தம் வளர்ந்து வருகிறது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக நாராயணப் பெருமான் கோயில் கொண்டருளியிருக்க அவர்தம் பக்கத்தே மருகர்களாகிய விக்கினேஸ் வரப் பெருமானும் கந்தவேளும் கோயில கொண்டிருக்கிறார்கள்.

''விநாயகனே வெவ்
வினையைவேரறுக்க
வல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான்
விநாயகனே விண்ணுக்
கும் மண்ணுக்கும்
நாதனுமாம்
தன்மையினால்
கண்ணிற் பணிமின்
கனிந்து''

என்ற பாடலுக்கு ஏற்ப தம்மை வணங்கும் அடியார்களின் பழவினைகளை அறுத்து அவர் தமக்கு நல்லருள் பாலிக்கின்றான் ஐங்கரன். முருகனும் சும்மை மனமுருகி வழிபடுவோர்க்கு துன்பம் நீக்கி இன்னருள் பாலிக்கின்றார். நாராயணனின் சகோதரியாகிய சக்தி இங்கு, சொர்ணமனோன் மணியம்மாவாக எழுந்தருளியிருந்து மெய்யடியார்களுக்கு அவர்தம் இடர் களைந்து அருள் சொரிந்து இரட்சிக்கின்றார். இங்கு ஓர் அற்புதக் காட்சியைக் காணலாம். ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதரை, காணக் கண்டு இன்புற வேண்டுமாயின் அவர் திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் அழகிய காட்சி, அற்புதமாக அமைக்கப் பட்டிருக்கிறது. இக்காட்சியைக் காணும் அடியார்களின் கண்களில் கண்ணீர்த்துளிகள் அரும்புவதைக் காணலாம்.

ஆயர்குலத்தில் வெண்ணெ திருடிய கண்ணன் நாகேஸ்வரத்தில் தம்மை நாடி வரும் அடியவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுவதைக் காணலாம்.

'முடிச்சோதியானது.
முகச்சோதி மலர்ந்
ததுவோ'
என்ற நம்

மாழ்வார் பாடலுக்கு ஏற்ப இங்கு நாராயணப் பெருமானின் முகவொளியைக் கண்டு பக்தகோடிகள் விம்முவதையும் கண்ணில் நீர் பனிப்பதையும் காணலாம். நோய் என்று வருவோர்க்கும் பேய்என்றுவருவோர்க்கும் வெண்ணீற்றால் அவையகற்றும் அருள் வள்ளல் அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்களின் இதயக் கமலத்தில் கமலக் கண்ணனும், மை வந்த கண்ணியும் கோயில் கொண்டிருப்பதைப் பக்த கோடிகள் பலர் அறிவர்.

இத்தகு அருள்வளம் மிக்க நாகேஸ்வரத்தில் 25.8.1988 வியாழக்கிழமை தொடக்கம் மஹோற்சவம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. 2.9 1988 வெள்ளிக்கிழமை சஞ்சீவி மலைத் திருவிழாவும் நடைபெற்றது. ஆவணி ரோகிணியில் கிருஷ்ணஜெயந்தியில் பொன்னாலை வரதராஜப் பெருமாளின் இரதோற்சவம் நடைபெறும் அதே தினமாகிய இன்று 3 9 88 சனிக்கிழமை ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானின் இரதோற்சவமும் நடைபெறுகிறது.

அங்கமெல்லாம் புல்லரிக்க, ஹரி கோவிந்தா ஒலி வானைப் பிளக்க, அடியார்களின் கண்களிலிருந்து ஆனந்த புஸ்பம்சொரிய, தேவர்கள் பூமாரிபொழியதேவதேவன் நாகவரத நாராயணன் அழகிய தங்கரதத்தில் எழுந்தருளி அடியார்க்கெல்லாம் அருள் பாலிப்பதைக் காணக் கண் கோடி வேண்டும்.



ஸ்ரீநாகவரத நாராயணர் விதியுலா எழுந்தருளும் காட்சி!
அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவரும் படத்தில் காணப்படுகிறார்.

**வி. ஏகாம்பரமூர்த்தி**
அதிபர்: யாழ். பிளவத்தை அமெரிக்க மிஷன் பாடசாலை, சித்தங்கேணி.

# தேவஸ்தான பிரதம குருக்களின் ஆசி!

தம்மடியார் வினை போக்க நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக காட்சி தந்து இன்று தங்கரதத்தில் ஆரோகணித்து 'தேரோட்டித் தேரேறி வருகின்றான்' கண்ணன். இத்திருக்கோயிலில் இன்று நடைபெறும் சங்காபிஷேகத் திருக்காட்சியும், ரதோற்சவமும், மகேஸ்வரபூசையும் கண்கொள்ளாக் காட்சியாகும். இதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற ''கண்ணன் வந்த வண்ணம்'' உறியடி நிகழ்ச்சியும், ஸ்ரீரங்கநாதன் பாத பூசையும், தீர்த்தோற்சவத் திருவிழாவும். திருக்கல்யாண, பூங்காவனத் திருவூஞ்சல் பள்ளி நிகழ்ச்சியும் ரம்மியமானவை.

உலகளந்த மாயன் சர்ப்பசயனத்தில் பள்ளி கொள்ளும் ஸ்ரீரங்கதரிசனமும் அசைந்தாடும் சர்ப்பத்தில் திருவீதியுலா வரும் அழகும் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நிற்கும் அடியார்களை மட்டுமல்ல பிறமதத்தவரையும், கருங்கல் மனமும் கரைந்து கண்கள் தொடு மணற்கேணியிற் சுரந்து நீர்பாய மெய் மயிர்ப் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி அன்பராகச் செய்யும்அத்தகு காட்சி. இதனினும் வேண்டுவார் வேண்டுவதை நல்கின்ற தன்மையையும் தன்னடி அடைந்தோர்க்கு அபயம் வழங்கும் தன்மையையும் என்னவென்று சொல்லலாம்

முன்பொருகால் இந்திரனை வேண்டி கோகுலப் பெண்கள் பொங்கற் பண்டிகை எடுத்தார்கள். கண்ணபிரான் வந்தான். பொங்கலைத் தம் மாட்டிற்கும் மலைக்கும், மறையவர்க்கும் தரும்படி கேட்டான். கோகுலப் பெண்களும் இசையவே அவ்வண...

ரன் சிற்றமுற்று எழுவகை மேகத்தை ஏவிப் பெருமழை பொழிந்தான். கோகுலத்தார் பயந்து மழையின் கொடுமை தாங்காது திகைத்து நின்றனர். தன்னை அடைந்த அடியார் இன்னல் தீர விண்ணை மறைத்து நிற்கும் கோவர்த்தன கிரியைத் தூக்கி குடையாகப் பிடித்தான் கண்ணன். மூவடி மண்கேட்டு ஈரடியால்- பூலோகத்தையே அளந்தவனல்லவா கண்ணன். அது மட்டுமா!

ஏழுகோடி மந்திரத்திற்கும் தமிழ்மறைக்கும் எட்டாத பரம்பொருள் திரௌபதை மானம் காக்க ஒருமுறை கண்ணா என எண்ணமுன் பன்னக சயனனாய் அஞ்சேல் என வந்தருள் புரிந்த உள்ளம் கவர் கள்வன் அப்பரம்பொருள் இன்று தங்கரதத்தில் பவனிவருகின்றான். அடியார்கள் அவனைத் தரிசித்து அவன் அடியாராகி அருட்காட்சி பெற்று இம்மையில் செம்மையும், செல்வமும் மறுமையில் மோட்சமும் பெற வேண்டும் என வேண்டுகின்றேன்.

★ சுபம் ★

**Dr கி. உருத்திரபுரேஸ்வரக்குருக்கள்**
(வீரசைவ குருமகாசன்னிதான
ஸ்ரீரேணுகாச்சிரம பட்டத்தரசு)

## பக்திப் பாடல்கள்
அடங்கிய
## ஒலிப்பதிவு நாடா வெளியீடு:

அருட்கவி அவர்களால் ஸ்ரீ நாகவரத நாராயணர் மீது பாடப்பட்ட பக்திப் பாடல்கள் கொண்ட நாடாக்கள் நேற்று (02-09-1988) வெள்ளிக்கிழமை தேவஸ்தானத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

திரு மு. வர்ணகுலசிங்கம் மேற்படி பாடல்களை இசையமைத்து வழங்கி இருந்தார்.

ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவத்தில் முக்கிய பங்கெடுத்த பிரமுகர்கள் விவரம் பின்வருமாறு:—

திருவாளர்கள்: எஸ். பாலசுப்பிரமணியம் (ரஞ்சனாஸ், நவீன சந்தை,யாழ்.), எஸ்.பாலகுமாரன் (நவசக்தி எலக்றிக்கல்ஸ், தெல்லிப்பழை), எஸ். சோதிநாதன் (சிமாட்டி, யாழ்நகர்), வி. ஏரம்பமூர்த்தி (ஆசிரியர், மூளாய்), யோ. கிறிஸ்துராஜா (றெஜின் பார்மஸி, சின்னக்கடை), கே. அன்ரன் (17, பாக் றோட், குருநகர்), எஸ். ஏ. என். (நாவாந்துறை), எஸ். சண்முகநாதன் (23, மணல்தறை லேன், கந்தர் மடம்), ...


அளவையூர் ஸ்ரீ நாகவரத நாராயணர்
அவனியதில் தங்கரதம் ஏறிவர
நாவாய்துறை மக்கள் சார்பில்
நற்செய்தி கூறி நிற்கிறோம்!

★

## எஸ். அன்ரன்
கடல் உணவு கொள்வனவு நிலையம்
கடற்கரை வீதி,
நாவாந்துறை.

கிளைகள்:
கடற்கரை வீதி, குருநகர்.
விடத்தல்தீவு, வங்காலை, மன்னார்.

## S. ANTHON
SEA FOOD PURCHASING CENTRE
Beach Road, NAVANTHURAI
Br nch:
BEACH ROAD, KURUNAGAR.



முத்தமிழ் நயக்கும் மூர்த்தியே தரும
தத்துவ நடனச் சரசகோ விந்தா
பத்தியா லுன்சீர் பாடிடப் பணியாய்
மத்தனை நாக வரதநா ரணனே!

## A.M.L.
## ஏ.எம்.எல். அன் எடிசன்
இறால் கொள்வனவு நிலையம்
26, சென். ஜேம்ஸ் கிழக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.



சொல்லறிஞர் சாற்றுமொரு தேவாபோற்றி
துளசியெழி னேசனெனத் தொண்டர்
பேணத்
தில்லைவெளி யாடுகின்ற பரமனுகிச்
சென்மங்க டறுகின்றநா தனுகி
அல்லலுறு பரமபதம் தருவாய் போற்றி
மதுரவெண்ணெய் வாயழகா அவலையுண்டு
நல்லகதி தருமன்னு நாடுமின்ப
நன்னுக வரதநா ரணனே போற்றி!

V

## கே. அந்தோனிப்பிள்ளை
(அன்ரன்)
17, பாக் ரோட்,
றெக்கிளமேஷன்,
குருநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 89 A/L

பகல் நேர வகுப்புக்கள்

ஆரம்பம் 05-09 88 திங்கள்

**ஆசிரியர் நாகரட்ணம் (B. Sc)**
Chemistry 6-30 a.m

**ஆசிரியர் மணியம் B. Sc (Hons)**
Physics 7-30 a.m

3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
C/9)



**ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்-**
**ஆனல் தவருகப் பேசி விடுவோமோ என்ற தயக்கம்-**

## இதுதானே உங்களது பிரச்சினே?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலையில் படித்தது

WRITTEN ENGLISH

ஆனல் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.
இதனை கருத்திற்கொண்டு

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினரால் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சிநெறியினை அறிமுகப்படுத்துகிருர்கள்.

**உளவியல் அடிப்படையில், மிக மிகப் புதுமையான முறையில்**

**SPOKEN ENGLISH**

**பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.**

விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்புகொள்க.

## BRIGHT TRAINING CENTRE

**P. O. Box 162, Colombo.**
(6264)



## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் ஆவணி மாதம் 22 ஆம் நாள் (07-09-88) புதன்கிழமை வரும்
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| எமது புத்திரன் **கனேசலிங்கம்** அவர்களுக்கும் | ★ ★ ★ | எமது புத்திரி **சோதிமலர்** அவர்களுக்கும் |
|---|---|---|

திருமணம் நடைபெறத் திருவருள் கூடி இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்.

திருமதி வைத்திலிங்கம் சற்பப்பிள்ளையார், கோயிலடி உடுவில் கிழக்கு.

திரு. திருமதி முருகர் லோட்டஸ் றோட், வண்ணார்பண்ணை.

(6261)



## முக்கிய அறிவித்தல்

**இலங்கை மின்சார சபை**

## மின் தடை

அநுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி மின்மார்க்கத் திருத்த வேலைகள் 1988-09-04 ஞாயிறு நடைபெற இருப்பதால், அன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5 00 மணி வரை யாழ்ப்பாணப் பொறியியலாளர் பிரதேசத்தினதும், கிளிநொச்சிப் பொறியியலாளர் பிரதேசத்தினதும் சகல மின் அத்தியட்சகர் பிரிவுகளினதும் மின் விநியோகம் தடை செய்யப்படும் என்பதை இத்தால் சகல மின்பாவனையாளருக்கும் அறியத் தருகின்றேன்.

இதனல் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**மின் பொறியியலாளர்.**
யாழ்ப்பாணப் பிரதேசம்.

இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.
1988-08-29 (C 6469)



## ENGLISH CLASSES

சகல தரத்தினருக்குமான விசேட ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

உங்கள் பதிவுகளுக்கு:

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane,
JAFFNA.
(C/6451)



## MEERA TRAVEL'S

**K. K. S. Road, Chunnakam**

* **Passport** (கடவுச் சீட்டு) விரைவில் பெற்றுத் தர
* **Indian Visa** (இந்தியா செல்ல - 3 மாத விசா)

**சகல பிரயாண ஒழுங்குகளுக்கும் எம்மை நாடவும்**

குறிப்பு: எம்மிடம் கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவமும் (Passport Forms) இந்திய விசா விண்ணப்பப் படிவமும் (Indian Visa Forms) பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்கட்கு:

இருபா வீடியோ சென்ரர்
K. K. S. வீதி, சுன்னுகம்,
(6262)



## A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு

## ORGANIC CHEMISTRY

**ஆரம்பம்: 04-09-1988**
SAT. & SUN. 4.00 — 5.00 p.m.

ஆசிரியர்.

## நாகரட்ணம்

**Manaltharai Lane,**
**KANDARMADAM.**
(C 7)


## பயிர்கள் கருகும் நிலையில்

கோப்பாய், செப், 3 புத்தூர் ஆவரங்கால் பகுதிகளில் விளைநிலங்களுக்குப் போதிய இறைப்பின்றிப் பயிர்கள் எரிந்து கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

விளைபொருள்களைக் கொள்வனவு செய்ய வியாபாரிகள் இப்பகுதிகளுக்கு வரத் தயக்கம் காட்டுவதினுல் உற்பத்திப் பொருள்களை விற்க முடியாதிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (இ-72)


யாழ், பல. நோ. கூ. சங்கம்
வரையறுக்கப்பட்டது

## வெற்றுச் சாக்கு

## கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 4764 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 5 - 9 - 88 ஆகும். கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்.**

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
1. 9. 88. (C/28)



University of Jaffna

## Certificate Course in Data Processing and BASIC Language Programming

**Batch II, 1987.**

The examination on the above course will commence on 24 September 1988. The students following the above course and repeat candidates are requested to complete and submit the examination entry forms before 15th September 1988.

The admission cards will be issued from 20th September 1988. The candidates are requested to collect their admission cards at the Computer Unit, University of Jaffna.

**Assistant Registrar**
Faculty of Science
University of Jaffna. (C-19)



**வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் மூத்த, முதன்மை நிவாரண புனர்வாழ்வு நிறுவனமான**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் (T. R. R. O.) மேலுமொரு சமூகப்பணி**

## ★ சமூக மருத்துவ நூல் அறிமுக வைபவம் ★

**சமூக மருத்துவ தொண்டர்கள், ஊழியர்கள், தாதியர், சுகாதாரம் பயிலும் உயர்நிலை மாணவர்கள் ஆகியோரின் நீண்டகாலத் தேவையைப் பூர்த்திசெய்யும் அதிகாரபூர்வமான எழுத்து.**

யாழ் பல்கலைக்கழக மருத்துவப்பீடப் போதனு வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கான அறிவுரை வைத்திய விற்பன்னர்களுள் ஒருவரான **டாக்டர் வே. கிருஷ்ணராஜா, M.B.B.S., F.R.C.S.**

எழுதி ரி. ஆர். ஆர். ஓ. பிரசுரிக்கும்

# 'சுகாதார சேவையாளரின் கைநூல்'

**3-9-88 சனிக்கிழமை (இன்று)** பிற்பகல் 3மணிக்கு யாழ்ப்பாணம், நாலாம் குறுக்குத்தெரு, 106ஆம் இலக்கத்திலுள்ள ரி.ஆர்.ஆர்.ஓ. அலுவலகத்தில் வெளியிடப்பெற்று அறிமுகம் செய்துவைக்கப்படும்.

நூல் அறிமுகம்:- **டாக்டர் என். சிவராசா**
(தலைவர் சமூகமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

சமூகசேவை நிறுவனங்களின் சார்பில் நூலாசிரியருக்கு நன்றிகூறல்— **திரு. எஸ். சோதிராசா**
(றெட்பானு செயற்திட்ட இணைப்பதிகாரி)

**"வேண்டுவார்க்கு உதவ வேண்டுவன தருக"**

(C/6467) **T.R.R.O.** ஆளுனர் சபையினர், அலுவலர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலை வரதராஜப் பெருமாள்
தேர்த்திருவிழாவில் (03 - 09 - 88)
மில்க்வைற் - யாழ்ப்பாணம்
மில்க்வைற் தயாரிப்புக்கள்
ரூபா 20/- க்கு வாங்குவோருக்குப் பொலித்தீன் பையில் அழகிய கிருஷ்ணர் ஸ்ரிக்கர் உட்பட கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.
மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

03- 09 - 1988 சனிக்கிழமை

நல்லூர்க் கந்தசாமி கோவில் வீதியில்
மில்க்வைற் சகாயம்
மில்க்வைற் தயாரிப்புக்கள்
இருபது ரூபாவுக்கு வாங்குவோருக்குப் பொலித்தீன் பையில் அழகிய முருகன் ஸ்ரிக்கர் உட்பட கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.
மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்
நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும் ''மில்க்வைற்''
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## கடந்த...

(1-ப்பக்கத் தொடர்ச்சி) என தொடர்வரிசையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல்களைத் தொடுத்துவரும் இந்திய ஆக்கிரமிப்புப்படை தமிழீழத்தில் தானடையும் தோல்விகளை மறைக்க பொய்யான வதந்திகளை கிளப்பி எமது இயக்கத்திற்கு மாசுகற்பித்துவருகிறது.

அண்மையில் இந்தியா, நாம் இந்திய நகரங்கள் மீது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடப்போவதாக மிரட்டியுள்ளதாகக் கூறி, அது குறித்து அறிக்கைமேல் அறிக்கை விட்டுவருகின்றது. இப்படியான ஓர் அறிக்கையை நாம் ஒருபோதும் வெளியிடவில்லை.

இதைத்தவிர மன்னார்க்கடலில் எமது படகை மூழ்கடித்து 32 போராளிகளைக் கொன்றதாகவும் கூறியது. இதை பி. பி. சி. செய்தித்தாபனம் நாம் ஊர்ஜிதம் செய்ததாகக் கூறியது, உண்மையில் அப்படி எதுவித சம்பவங்களும் நடைபெறவில்லை.

இந்திய மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுவதா? இது துரோகம் என இந்தியாவில் குரல்கள் எழுகின்றன.

இல்லாத, நாம் சொல்லாத, தாமே உருவாக்கிய அறிக்கைக்கு இவ்வளவு கூப்பாடு - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(அ-ஒ)

## யுத்த நிறுத்த....

அறியவந்தது.

நேற்றைய கலந்துரையாடலின்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளையும் சேர்ந்த பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், சமயப் பிரமுகர் ஒருவரும் உட்பட மொத்தம் 23 பேர் கலந்து கொண்டனர் என அறியவந்தது.

இந்தியத் தரப்பினர் யுத்தநிறுத்தம் செய்வது என்று தீர்க்கமாக முடிவு செய்யும் பட்சத்தில் —

அனேகமாக 72 மணி நேர ஒரு தலைப்பட்ட யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும்—

அதைத் தொடர்ந்து இந்திய அரசின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபடும் என்றும்—

வடக்கு - கிழக்கு மாகாணசபைத்தேர்தல் குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவிப்பதற்கு முன்னர்விடுதலைப் புலிகளுடன் ஒரு சமரசத்துக்கு வந்துவிட இந்தியா விரும்புவதாகவும்— அறியவருகிறது.

அனேகமாக அடுத்த ஒரு வாரத்தில் யுத்த நிறுத்த அறிவிப்பு வரலாம்எனப் பரவலாக நம்பிக்கை தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை எவ்விதத்திலும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

## இந்தியா வா.

(1ஆம்பக்க தொடர்ச்சி) உயிரிழந்தனர். திருகோணமலையில் 2 ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் உயிரிழந்தனர்.

இந்திய இராணுவத்தால் பதினொரு அப்பாவித் தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர் பதினைந்து அப்பாவித் தமிழ்மக்கள் கொலை செய்யப் பட்டுள்ளனர்.

எமது தரப்பில் லெப்டினல் சமுத்திரன், லெப்டினன் சோமேஸ் [நந்தகுமார்], 2ஆம் லெப்டினன் விக்டர் (விக்ரோறியல் நேசராசா), வரதன், ரமேஷ், குருசாமி, விஜேபா, சிறில், அருள், கோபு, ராபேட் ஆகியோர் வீரமரணமடைந்தனர். அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ஒ)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்லப்பா சின்னையா

தோற்றம்:- 05- 10- 1910 மறைவு:- 03- 09- 1987

அன்பின் தெய்வமே! இன்றுடன் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு மறைந்து விட்டாலும் உங்களின் நினைவு எங்களை விட்டு அகலவில்லை. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மடத்தடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி, (6258)

## இரண்டாம் ஆண்டு

வீரவணக்கமும் இதய அஞ்சலியும்



தாயக மண்ணில்: 1964-07-04 திரைகடலில்: 1986-09-03

திதி ;- 11-9-1988

(பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி, பழைய மாணவனும் / தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினருமான வீரவேங்கை)

லெப்ரினன்ட்

### இராஜரட்ணம் இரவீந்திரன் (குயிலன் / சிறைவாசன்)

இரவி,
எங்கள் அருமைக் குயிலே!
நீ எங்கள் பரம்பரையின் முகப்பினிலே
வீரத்தைப் பொறித்து விட்டு,
உன் உடல்
உயிரை,
தமிழீழ மண்ணுக்காய்
கடலலையில் கரைத்து விட்டாய்!
மூத்தவனே நீ, களம் நாடி
மான வீரன் சுட்டு விரல் திசை நாடி
பாய்ந்து வந்த இளம் வேங்கை நீ
''உடல்
பொருள்
ஆவி அனைத்தும்''
இரத்தப் பேழையில் அடைத்து
தாய் மண்ணிற் களித்தாலன்றி
தாயகத்து விடுதலை வெறும் வெற்றுறு
போலாச்சு
இது உனது தலைவனின் இலட்சியம்
ஈழம் கூடிய வீரம்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
இது வீரவேங்கைகளின் உயிர் மூச்சு
உன் இழப்பு எமக்கு பேரிழப்பு
உன் மூலம் மண் காக்க
மண் மீட்க
எமது பங்கு தரப்பட்டதில்
ஒரு திருப்தி
தலை நிமிர்ந்து நடக்கும் தந்தை!
வேங்கை குடிபோன குகையாக
தாய்வயிறு!
சிறகொடிந்த புறுவாக
தங்கை!
வலது கரமில்லாத
தம்பி!
ஒரு குடும்பம்
இம் மண்ணில் இன்றும் வாழ்வது
சுக போகம் காணவல்ல
நீ, காண நினைத்துக் களம் புகுந்தாயே!
அந்தத் தாயகமாம் தமிழீழம்
சுதந்திரமாக
நீ, மீளப் பிறந்து வந்து
குயிலாக
சுதந்திர கீதம் இசைக்க

**"நாம் உயிரோடிருந்து கேட்க இறைவன் அருள்வான் என்ற நம்பிக்கை எமக்கு"**
**இன்று உனது நினைவு நாளான 03.09.1988 ஆவது நினைவில் எமது இதயத்தைப் பிழிந்தூறி நிற்கின்றோம்.**

தம்பி, தங்கை, தந்தை, தாயார், உறவினர்

(குயிலனுடன் 03 09.1986 அன்று கடற்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த சுதர்சனுக்கும் எமது வீரவணக்கங்கள்.) (6106)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி சுபோதினி தேவராசா
(ஸ்ரீலங்கா அஸ்பெஸ்ரஸ் லிமிட்டெட் கொழும்பு)

உதிர்வு: 4 - 8 - 88

எம் அன்பின் சோதியே;
நீர் எம்மைத் தாங்கொணா
ஆழ்துயரத்தில் ஆழ்த்தலாமோ!
பெற்றோர், சகோதரர், உற்றோர்
உறவினர் யாவரையும் விட்டு
நீர் பறந்ததேனோ!
வஞ்சகனின் வஞ்சக்கூர்மைதனில்
வியந்து நின்று அவனது போலி
அன்பில் மோசம் கொண்டு
நீர் நீண்ட கனவு கண்டனையோ!
வஞ்சகனே காலனாகி உம்மை
வஞ்சத்தில் மாய்த்தானம்மா!

உமது ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திப்போமாக!

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட, உதவி செய்த அனைவருக்கும் எமது நன்றி.

- குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு. (6284)

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



ஆ- விக்னராஜா
[உதவி அரசாங்க அதிபர் சம்மாந்துறை]

மலர்வு: 11- 08- 1933 உதிர்வு:- 15- 09-1987

திதி:- 03- 09- 1988

கனவில் கூட உங்கள் கண்ணிடை
வாழும் எமக்கு
அப்பா என அழைத்திட இனி
யார் உள்ளார்?
ஈனமுள்ள ஒரு வெறியன் இயற்றி
வைத்த செய்கையால்
எங்கள் நெஞ்சம் ஓர் எல்லையின்றிக்
குமுறுகிறது அப்பா!
ஆண்டொன்று அல்ல; எங்கள் உயிர்
உள்ளவரை உங்கள்
நினைவும் பாசமும் எங்களை விட்டு
நீங்காது அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் கண்ணீர் பூக்களால் அஞ்சலி செலுத்தும்:

அன்பு மனைவி: விமலா,
பிள்ளைகள்: வித்தியானந்தன், வாசுகி, ஜனனி.

கோவில் வீதி,
நல்லூர். (6072)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நேசம்மா நடராசா

அராலி செட்டியாமடத்தைச் சேர்ந்தவரும், காலஞ் சென்ற திரு நடராசா செட்டியாரின் அன்பு மனைவியும், சபாநாதன் (பிரான்ஸ்) பத்மநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத்தாயாரும், ஜெபரஞ்சி, கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதரா, அரவிந்தன், பிரசாந்தன், அதிசய சொரூபி, நர்த்தனசொரூபன் ஆகியோரின் அருமைப்பேத்தியாரும், காலஞ் சென்ற சச்சிதானந்தம் செட்டியார், அரியதுரைச் செட்டியார், இளைப்பாறிய ஓவசியர் இராசரத்தினம், இளைப்பாறிய ஆசிரியை சின்னம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியாருமாகிய திருமதி நேசம்மா நடராசா 2-9-1988 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் 3-09-1988 சனியன்று காலை 7 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக 276, பருத்தித்துறை வீதி நல்லூரிலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும் இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**கௌரி பத்மநாதன்**
276 பருத்தித்துறை வீதி,
நல்லூர். (6113)

### திருமதி பொன்னுத்துரை இரத்தினம்மா

கோண்டாவில் மேற்கு சைவப்பாடசாலை ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை இரத்தினம்மா காலமானார். இவர் காலம் சென்ற செல்லப்பா பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், இரத்தினசிங்கம், திருமதி பத்மாதேவி நடராசா, பாலசிங்கம் (U S.A .) தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு செல்லப்பா நடராசா (பாராளுமன்ற சிரேஷ்ட அறிக்கையாளர்) திருமதி ஞானேஸ்வரி இரத்தினசிங்கம், திருமதி சாரதாதேவி பாலசிங்கம் (U S A) திருமதி நிர்மலாதேவி தனபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும் திருமதி சிவபாக்கியம் சின்னத்துரை திரு.சடாசிவம் கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதிபவானி விக்னேஸ்வரன், கல்யாணி (U. S. A) வாகீசன் (கனடா) தாரணி, நவயுகன், சுதர்சினி, நவநீதன், காயத்திரி (U. S A) கவாஸ்கர் (U. S. A) ஷயந்தி, ஷயந்தன், தர்ஷினி, டுஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரது பூதவுடல் (3- 9- 88) இன்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்

**பொ. இரத்தினசிங்கம்**
கோண்டாவில் மேற்கு (6291)

### Dr J. சந்திரசேகரம்

வவுனியா வயிரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த டாக்டர் J. சந்திரசேகரம் 31 ஆம் திகதி காலமானார். அன்னார் காலம் சென்ற திரு, திருமதி யோவான்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், காலம் சென்ற நெளுக்குளம் கந்தையா தம்பதிகளின் அருமை மருமகனும், அண்மையில் காலம் சென்ற பாக்கியம் சந்திரசேகரத்தின் அன்புக் கணவரும், டாக்டர் சந்திரகுமார், திருமதி சந்திரவதனி ஸ்ரீஸ்கந்தராஜா, சந்திராதேவி, தயாளினி (கச்சேரி - வவுனியா), இந்திரகுமார் (லண்டன்), சாந்தினி (யாழ். வளாகம்), நந்தினி, சுகந்தினி ஆகியோரின் அருமைத் தந்தையும், டாக்டர் ஸ்ரீஸ்கந்தராஜா (மாவட்ட வைத்திய அதிகாரி, மன்னார்), திருமதி லதா சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனருமாவார். தகனக்கிரியை பற்றிய விபரம் பின்னர் தெரிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
வயிரவப் புளியங்குளம்,
வவுனியா. (6122)

### திருமதி ஆபரணம் சலோமைப்பிள்ளை

திருமதி ஆபரணம் சலோமைப்பிள்ளை 1-9-88 ல் விண்ணகத்தந்தையிடம் சென்றார்.

அன்னார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலம் சென்ற அலேசுப்பிள்ளை ஆபரணத்தின் அன்பு மனைவியும், ஞானப்பிரகாசம் (முன்னாள் புகையிரதப் பகுதி ஊழியர்) அலேசுப்பிள்ளை (இளைப்பாறிய புகையிரதப் பகுதி ஓட்டசாலை, காங்கேசன்துறை), யோவான்பிள்ளை (புகையிரதப் பகுதி மேற்பார்வையாளர், வவுனியா), காலம் சென்ற அருளானந்தசாமி, அருட்செல்வி நினிற்றி (ஆரம்பப் பிரிவு அதிபர், திருக்குடும்பக் கன்னியர்மடம், இளவாலை), யோசவ் (புகையிரதக் கட்டடப் பகுதி, யாழ்ப்பாணம்), செல்வி பிலோமினா, அருட்தந்தை சிங்கராயர் (அ.ம.தி.) ஆகியோரின் அன்புத் தாயாரும், செபரத்தினம், அல்விறேற்றம்மா, ராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதி யாத்திரை இல:22/1 புனித சம்பத்திரிசியார் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து நாளை (4-9-88) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு நடைபெறும்.

குறிப்பு: மலர் வளையங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நன்கொடை வழங்க விரும்புவோர் அரியாலை, நாவலடியில் உள்ள அமல அன்னை அன்பகத்திற்கு (சிறுவர் இல்லம்) வழங்கவும்.

தகவல் **வண.ஆ. சிங்கராயர்.**
22/1 செல். பற்றிக்ஸ் வீதி, (அ. ம. தி)
யாழ்ப்பாணம். (C 35)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிடெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 3rd September 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road, Jaffna.

சஞ்சீவி
சஞ்சிகை
03-09-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

# அன்டார்க்டிக்காவில் கனிவளங்களை அகழ்வது அகிலத்துக்கே ஆபத்தாகலாம் என எச்சரிக்கை

நீங்கள் கன்யாகுமரியிலிருந்து நேர் தெற்காகக் கிளம்பி இந்துமாகடலைக் கடந்து சுமார் 7,000 கிலோ மீட்டர் சென்றால் அன்டார்ட்டிகா (Antarctica) கண்டத்தை அடைந்துவிடலாம். அக் கண்டம் ஐரோப்பாவை விடப் பெரியது. நிலப்பரப்பு சுமார் 8,000,000 சதுர கிலோ மீட்டர். ஆனால், ஒரு குக்கிராமம் கூட இல்லாதஒரே கண்டம் அது தான். தென் துருவப் பிராந்தியத்தில் அமைந்த அக்கண்டம் மனிதர் வாழ லாயக்கற்றது. ஒரு சில இடங்களைத் தவிர, அது ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை பால் போன்ற வெண்மையான பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கிறது. அதுவும்கொஞ்சநஞ்ச பனிக்கட்டியல்ல. சுமார் 2.4 கிலோ மீட்டர் உயரமும் பல ஆயிரம் கிலோமீட்டர் நீள அகலமும் கொண்ட பனிக்கட்டிப் பாளத்தைத் தூக்கிக் கொண்டு போய் வைத்தால் எப்படியிருக்குமோ, அந்த அளவு ஆழத்துக்கு அன்டார்ட்டிக் பிராந்தியத்தைப் பனிக்கட்டி மூடி நிற்கிறது. 2.4 கிலோ மீட்டர் என்பது சராசரி அளவே. சில இடங்களில் பனிக்கட்டியின் ஆழம் 4.3 கிலோ மீட்டர் அளவுக்குக் கூட உள்ளது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வானிலிருந்து மழைக்குப் பதில் பொடியாக உதிர்ந்த மாவுப்பனி (Snow) அடுக்கடுக்காகப் படிந்து இறுகி இவ்விதம் உறைபனிக் கட்டியாகியுள்ளது.

அன்டார்ட்டிக் கண்டத்தில் 6 மாத காலம் நீண்ட இரவு. அத்துடன் சதையைத் துளைக்கின்ற அளவுக்குக் கடும் குளிர். மீதி ஆறு மாத காலத்தில் அடிவானத்தில் சூரியன் வட்டமிடும். ஆனால், அப்போதும் கடுங்குளிர். இக்கண்டம் கிட்டத்தட்ட மனித சஞ்சாரமற்றதாக இருப்பதில் வியப்பில்லை. இக்கண்டத்தின் விளிம்புகளில் சில நாடுகள் அங்குமிங்குமாக அமைந்துள்ள ஆராய்ச்சி நிலையங்களின் கட்டுமானங்களைத் தவிர வேறு குடியிருப்புகள் இல்லை. இங்குள்ள ஆராய்ச்சி நிலையங்களில் இந்தியா நிறுவியுள்ள ஆராய்ச்சி நிலையமும் அடங்கும்.

பல்லாயிரக்கணக்கான பெங்குவின் பறவைகள்தான் இக் கண்டத்தில் உயிர்த்துடிப்புக்கு அடையாளமாக விளங்குகின்றன.


### அமைதி தவழும் கண்டம்

உலகில் பல லட்சம் ஆண்டுகளாக இயற்கைநிலை பாதிக்கப்படாமல் விளங்குகின்ற ஒரு கண்டம் உண்டென்றால் அது அன்டார்ட்டிக் கண்டமே.

கடந்த நூற்றாண்டின் மத்தியில்தான் அன்டார்ட்டிக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது: அதன்பிறகு அக்கண்டம் குறிப்பாக இந்த நூற்றாண்டின் மத்தியில் விரிவாக ஆராயப்பட்டது. நாடு பிடிக்கும் போட்டியானது இக்கண்டத்தையும் பாதித்தது. ஆர்ஜென்டீனா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், சிலி, நியூசிலாந்து, நோர்வே; பிரான்ஸ் ஆகிய நாடுகள் இக்கண்டத்தின் வெவ்வேறு பகுதிகள் தமக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடத் துவங்கின.

### [illegible] கனிவளம்

இதற்கிடையே அன்டார்ட்டிக் கண்டத்திலும் அதைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதிகளிலும் பெட்ரோலியக் கச்சா எண்ணெய், எரிவாயு, தங்கம், பிளாட்டினம், யுரேனியம், கோபால்ட் இரும்பு முதலியவை கிடைக்கலாம் என்று தெரியவந்தது. அக் கனிவளங்கள் மீது உலகின் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் (அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் போன்றவை) கண்வைத்து வந்துள்ளன என்பது தெளிவு.



அன்டார்ட்டிக்காவில் எங்கு எங்கு என்ன கனி வளங்கள் காணப்படுகின்றது என்பதை இவ்வரைபடம் காட்டுகிறது:

உலகில் சுற்றுச் சூழலைப் பாதிக்கின்ற எந்த நடவடிக்கையையும் தீவிரமாக எதிர்க்கும் கிரீன்பீஸ் இன்டர்நேஷனல் (Greenpeace International) என்னும் இயக்கத்தினர் இந்த முடிவைக் கடுமையாக எதிர்க்கின்றனர்: அன்டார்ட்டிக்காவில் கனிவளங்களை எடுக்க முற்பட்டால் அது அக்கண்டத்துக்கு மட்டுமன்றி உலகுக்கே ஆபத்தை உண்டாக்கும் என்று அன்டார்ட்டிக் – தென் கடல் கூட்டணி அமைப்பும் எதிர்க்கிறது.

அன்டார்ட்டிக்கா ''வெறும் பனி மூடிய'' பிராந்தியம் தான். அது உலகின் பிற கண்டங்களிலிருந்து மிகத் தொலைவில் தென்கோடியில் உள்ளது என்பதும் வாஸ்தவமே. ஆனால், உலகம் தழுவிய ரீதியான வானிலையை நிர்ணயிப்பதில் அன்டார்ட்டிக்கா முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாகச் சொல்வதானால், இந்தியாவில் வீசும் தென்மேற்கு பருவமழையுடன் அன்டார்ட்டிக்கா பிராந்தியம் நேரடியான தொடர்பு கொண்டுள்ளது. அன்டார்ட்டிக்காவைச் சுற்றிலும் உள்ள கடலில் (இது அன்டார்ட்டிக் கடல் என்றும் தென் கடல் என்றும் வருணிக்கப்படுகிறது) நிலவும் சூழ்நிலைகள் இதர கடல்களின் நீர் இயக்கத்துடன், குறிப்பாக இந்து மாக்கடலின் நீர் இயக்கத்துடன் தொடர்பு கொண்டவை.

### உலகப் பொதுச்சொத்து

அன்டார்ட்டிக்கா கண்டம் தங்களுக்குத்தான் சொந்தம் என்றுஒருசில நாடுகள் மட்டும் சொந்தம் கொண்டாட முடியாது. பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இது உலக மக்களின் பொதுச் சொத்து என்று கூறலாம்.

கனிவளங்களை எடுப்பது என்ற பெயரில் அன்டார்ட்டிக்காவில் கைவைத்தால் அதனால் உண்டாகும் விளைவுகள் இப்போதைய தலைமுறையினரைப் பாதிக்காவிட்டாலும் எதிர்காலச் சந்ததியினரை நிச்சயம் பாதிக்கும். ★

தி. மேனகன்

---

கருத்துக் கலசம்

## தமிழர் வரலாறு

வரலாறு என்பது ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின், ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் சரித்திரத்தைக் குறிப்பதாகும்.

ஒரு நாட்டின் அல்லது இனத்தின் சிறப்பையோ அல்லது வீழ்ச்சியையோ அறிவதற்கு வரலாறு முக்கியமானது. கால நிழ்வுகளின் பதிவுக் குறிப்பாகவும், வாழையடி வாழையாக, வழிவழியாக வரும் பாரம்பரியங்களின் தொகுப்பாகவும் விளங்குவது வரலாறே.

வரலாறு என்பது திரிபு படுத்தப்படாத ஒன்றாகவும், மாசுபடுத்தப்படாத ஒன்றாகவும் விளங்க வேண்டும். தற்காலத் தேவைக்கு ஏற்ற, தமது தேவைக்கு ஏற்ற விதத்தில் வரலாற்றை வளைத்து எடுக்கும் வழக்கம் ஆகாது. வரலாறு கடந்த காலத்தின் உண்மை நிகழ்வுகளைக் கொண்டதாக இருப்பதே சிறப்பு.

ஆனால் சில கட்டங்களில் வரலாற்று ஆசிரியர்கள் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப வரலாற்றைத் திரிபுபடுத்தி விடுவது உண்டு.

ஈழத் தமிழர்களின் வரலாற்றுக்கும் இதே கதி நேர்ந்திருக்கிறது.

ஆகையால் ஈழத் தமிழர் வரலாற்றை உரிய சரித்திரச் சான்றுகளுடன், ஆய்வு ஆராய்ச்சி ஆதாரங்களுடன் சொல்ல வல்ல வரலாற்று நூல் ஒன்று அவசியமாகிறது. அந்த நூல் ஒரு சார்புபட்டதாக இல்லாமல் ஏற்றமாயினும் சரி, தாழ்வாயினும் சரி, சிறப்பாயினும் சரி, அபகீர்த்தியாயினும் சரி உள்ளதை உள்ளவாறே சொல்லும் துணிவு செறிந்ததாக இருக்கவேண்டும்.

கடந்த கால வரலாற்றை எழுதுவது என்பது இலகுவான, இலேசுப்பட்ட காரியமல்ல. ஆதாரபூர்வமாக; எழுதப்பட வேண்டுமானால் தனி மனிதன் செய்யக்கூடியதும் அல்ல. ஆய்வாளர், அறிவாளர், வரலாற்று ஆசிரியர்கள் பலர் சேர்ந்த சபை ஒன்று இதற்கு அவசியம். அதற்கான நிதி வசதியும், தரவுகளைச் சேர்க்கவும், நிருபிக்கவும் கூடிய வசதியும் தேவை.

அரசாங்கம் போன்ற ஒரு அமைப்பே இதற்கான சபையை நிறுவி செயற்படுத்த முடியும். ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கென ஓர் அரசாங்கம் இன்னும் இல்லை.

ஆகையால்—

வரலாற்று நூல் எழுதும் அவையை மக்கள் ஆதரவுடன் ஆரம்பிப்பதே ஒரு மார்க்கம். இது விடயத்தில் மக்கள் நலனில் அக்கறை உடையவர்களும், அறிஞர்களும், ஆய்வாளர்களும் கவனம் செலுத்துவது நல்லது. ஒன்றுமே செய்யாமல் இருப்பதைவிடப் பிந்தியாவது ஒரு நல்ல காரியத்தைத் தொடங்குவது பரவாயில்லை. ★

---

# முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போன்

- பேராசிரியர் அ. சண்முகதாஸ் -

முருகன் ஒருவனையே பாடும் விரதம் பூண்டவர் அருணகிரிநாதர். அவர் பாடிய கந்தரலங்காரப் பாடல்கள் இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் பயப்பன. அந்நூலிலே ஓரிடத்தில் அருணகிரியார்:-

'மொய்தா ரணிகுழல்
வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமிங்கு வாழ
வைப்போன்
வெய்ய வாரணம்போல்
கைதா னிருபது முடையான்
தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே'

என்று பாடுகின்றார்.

இப்பாடலிலே முருகப்பெருமான் தன்னை முத்தமிழாலே வைதவரையும் வாழவைக்கும் கருணைத் தெய்வமென அருணகிரியார் கூறுகின்றார்.

இவ்வாறு அவர் கூறுவதன் காரணமென்ன?

இவருக்கு முன் வாழ்ந்த புலவர்கள் யாராவது முருகனை முத்தமிழாலே வைதார்களா?

அப்படி வைத அப்புலவர்கள் பெயர்கள் தமிழ் உலகிலே வாழ்கின்றனவா? இவ்விஞக்கள் யாவற்றுக்குமே 'ஆம்' என்றுதான் மறுமொழி கூற வேண்டும்.

இன்றும் தமிழுலகிலே வாழ்ந்து கொண்டிருக்கும் பெயர்களான காளமேகம், படிக்காசுத் தம்பிரான், இராமச்சந்திரக்கவிராயர் போன்றவற்றுக்குரியவர்கள் முருகனை நிந்தாஸ்துதியாகப் பாடியுள்ளவற்றை இங்கு மனங்கொள்ள வேண்டும்.

வசைக்கவி பாடுவதற்குத் தமிழுலகிலே தலைசிறந்த புலவராகக் காளமேகம் திகழ்ந்துள்ளார். 'வசைபாடக் காளமேகம்' என்று ஓர் செய்யுளிலே அவர் புகழப்பட்டுள்ளார். தனிமனிதர் பற்றியும் நிறுவனங்கள் பற்றியும் அவர் பாடிய வசைக் கவிகள் உண்மையில் வசைக் கவிகளே.

ஆனால், கடவுளரைப் பற்றிப் பாடிய அவருடைய வசைக்கவிகள், ஊன்றிக் கவனித்தால், அவை யாவும் நிந்தாஸ்துதிப் பாடல்களாயமைவதைக் காணலாம். ஆறுமுகப் பெருமானுடைய பெருமைகளைப் பற்றி ஒருவர் காளமேகத்திடம் கேட்டார். உடனே அவர்,

'அப்பன் இரந்துண்ணி;
ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி —
சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்;
ஆறுமுகத்தானுக்கு இங்கு
எண்ணும் பெருமை இவை'—

என்று பாடிவிட்டார்.

ஒருவருடைய பெருமைகளைப் பற்றிப் பல்வேறு விதமாகக் கூறலாம். அவருடைய தனிப்பட்ட வெற்றிகள், விருதுகள், நற்குணங்கள் ஆகியனவற்றைக் கூறலாம்.

அவருடைய குடும்பத்தினருடைய பெருமைகளை மாத்திரம் கூறுவதன் மூலம், அவருடைய பெருமைகளைப் புலப்படுத்துவது இன்னொரு விதம்.

இவ்விரண்டாவது வகையினையே காளமேகம் தேர்ந்தெடுத்துள்ளார். தந்தை, தாய், மாமன், தமையன் ஆகியோருடைய குணநலன்களைக் கூறுகிறார்.

முருகனின் தந்தை சிவபெருமான் பிச்சையெடுத்து உண்பவன்; தாய் பார்வதி மலையரசனால் பெற்றெடுக்கப் பெற்ற நீல நிறத்தையுடையவள்; மாமனான திருமால் இடைக்குலப் பெண்கள் உறிகளில் வைத்திருந்த வெண்ணெயைக் களவாடி உண்டவன்; சிறுத்த தடித்த கால்களையுடைய அண்ணன் [illegible] பெரிய வயிற்றை உடையவன் என்று குடும்ப அங்கத்தவர்கள் தன்மைகள் கூறி, இவைதான் ஆறுமுகப் பெருமானைப் பற்றிக்கருதக்கூடிய பெருமைகள் எனக் கூறப்பட்டுள்ளது.

'இரந்துண்ணி', 'மலை நீலி', 'உறி திருடி', 'பெருவயிறன்' ஆகிய தொடர்கள் யாவும் வசைப் பொருளுடையனவே. இத்தகைய இழிந்த தன்மைகள்தான் முருகப்பெருமானுடைய பெருமைகள் என்று எண்ணுமளவுக்கு வைவது போலப் பாடியுள்ளார் காளமேகம். ஆனால், அவையெல்லாம் வசைத்தொடர்களென நினைந்து காளமேகத்தாலே பாடப்படவில்லை.

படிக்காசுத் தம்பிரான் என்றொரு தமிழ்ப் புலவர் தமிழ் நாட்டிலே வாழ்ந்து புகழ்பெற்றார். அவருடைய பாடற் சிறப்பினைக் கூறவந்த இன்னொரு புலவரான பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் 'தேன் மிகுந்த சோலை சூழ்ந்த தென்களந்தை நகரில் தோன்றிய படிக்காசுப் புலவரின் செய்யுள்கள் எழுதப்பட்ட ஓலையை, பட்டுத் துணியாலே மூடினாலும் அதன் சிறப்பாகிய மணம் மூன்று உலகங்களிலும் மணக்கும்;

அன்புடன் அவ்வோலையைத் தொட்டாலே கை நறுமணம் வீசும்; அச்செய்யுளைச் சொல்லுகின்ற வாய் நறுமணம் வீசும்; அதனைத் தாய்மையான சேற்றிலே விதைத்து விட்டாலும் அப்பாட்டினுடைய நயம் தமிழ்ப் பயிராக விளைந்து பயனளிக்க வல்லது'' என்று

'மட்டாருந் தென்களந்தைப்
[illegible]
உரைத்த தமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும்
மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கை மணக்கும்
சொன்னாலும்
வாய் மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய்
விளைந்திடுமே
பாட்டினுறு நளினந்தானே'

என்ற பாடலாலே பாடியுள்ளார். இத்தகைய சிறப்பு வாய்ந்த படிக்காசுத் தம்பிரான் என்கின்ற புலவர் முருகப் பெருமானைச் சிறுவன் என்று வைது பாடுகின்றார்.

''திருச்செந்தூர் முருகப் பெருமானே! நீ குழந்தையாக இருந்தபோது உன்னுடைய தாய் உனக்குப் பாலூட்டி, விழிகளுக்கு மையிட்டு, சிந்துகின்ற மூக்கினைத் துடைத்து, கன்னத்தைக் கிள்ளி வளர்த்தாள்.

அத்தகைய சிறுவனாக இருந்த மாதிரி இப்பொழுதும் என்னைக் காத்தருளாமல் சிறுவனாக இருக்கிறாயே! அன்னத்தையும் மயிலையும் போன்ற தெய்வயானை வள்ளியம்மை என்ற இரு பெண்களையும் மணந்த ஆண்பிள்ளையல்லவா நீ? இன்னும் சின்னவன் என்று எண்ணிக்கொண்டிருக்கலாமோ?' எனப் பொருள்பட,

'முன்னநின் அன்னை
முலையூட்டி
மையிட்டு மூக்குச் சிந்தி
சன்னமும் கிள்ளிய நாளல்ல
வேயென்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும்
போலிரு
பெண்கொண்ட
ஆண்பிள்ளை நீ
இன்னமுஞ் சின்னவன்றனே
செந்தூரில் இருப்பவனே'

எனப் பாடுகின்றார். முன்னொரு காலத்திலே பாலன் என்று எண்ணியிருந்த சூரன், அப்பெருமானுடைய கோலத்தைக் கண்களாலே தெரியக் கண்டபோது,

'கோலமா மஞ்ஞைமீது
குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தேன்
அன்றைள்
மற்றப் பரிசிவை யறிந்தி
லேனால்
மாலயன் தனக்கும் மற்றும்
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரண னாய்நின்ற
மூர்த்தியிம் மூர்த்தியன்றே'

என்று மனத்திலே எண்ணி இறுதியிலே அப்பெருமானாலே ஆளப்பெற்றான். சேவலும் மயிலுமாக அந்தப் பெருமானுடனேயே அவன் வாழப் பெற்றான்.

இங்கு திருச்செந்தூர் முருகனைச் சிறுவன் என்று பாடிய படிக்காசுத்தம்பிரானையும் அம்முருகப்பெருமான் தமிழ்ப் பாவிலே வாழவைத்துள்ளான்.

பழனியிலே வீற்றிருக்கும் வேலவன் ஆண்டியாக இருக்கிறான், அவனிடம் தன்னுடைய பெண்ணை அனுப்ப யாராவது துணிவார்களோ?

அப்படி எண்ணுவதே அப்பழனியாண்டவனுக்கும் இழுக்கு, அவ்வாறெண்ணிய எமக்கும் இழுக்கு. ஆனால் இராமச்சந்திரக் கவிராயர் என்றொரு தமிழ்ப் புலவர் பழனியாண்டவருக்கு இவ்விழுக்கினை ஏற்றுதற்கு அஞ்சினாரில்லை

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? ''வயல்கள் சூழ்ந்த பழனியிலே வீற்றிருக்கும் வேலவனே! ஒரு குழந்தையின் வாயிலே வெண்ணெய்க் கட்டியையோ சர்க்கரையையோ இடுவது கஷ்டமல்ல. அப்படி இட்டுவிட்டால், அவ்வெண்ணெய்க் கட்டியோ சர்க்கரையோ உள்ளே செல்லாமல் குழந்தையின் தொண்டையிலே விக்கிக் கொண்டால் என்ன செய்யலாம்?

ஒரு பெண்ணை ஒருவனுக்கு மணஞ்செய்து கொடுக்கலாம். ஆனால் குழந்தை பெறுவது அவர்களுடைய கடமையல்லவோ!

இசை போன்ற இனிய சொல்லையுடைய என் பெண்ணும் உன் பள்ளியறைக்கு வந்தாளே! அவளைக் கண்ணைக் கட்டித் தழுவாமல் ஏன் விட்டீர்'' என்னும் பொருள்பட,

''வெண்ணெய்க் கட்டியும்
சீனியு மூட்டலாம்
விக்கிக் கொள்வதற்
கென்செய்யலாம்? ஒரு
பெண்ணைக் கட்டிக்
கொடுத்திடலாம்; பிள்ளை
பெறுவதற்கும் உடன்படு
வார்களோ?
பண்ணைய்க் கட்டிய
மென்மொழியாளுந் தம்
படுக்கை வீட்டில் வந்தாளே!
அவள்தனைக்
கண்ணைய்க் கட்டி யணையாமல்
ஏன்விட்டீர்?
கழனி சூழும் பழனியில்
வேலரே''

என்று பாடுகின்றார்.

இவ்வாறு தனக்கு முன் வாழ்ந்த பல புலவர்கள் தம் தமிழ்ப் பாட்டாலே முருகனை வைதபோதிலும், அப்பெருமானுடைய திருவருளாலே அவர்கள் அத்தமிழ்ப் பாட்டாலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் விந்தையைக் கண்ட அருணகிரிப்பெருமான் ''முத்தமிழால்வைதாரையும் இங்கு வாழவைப்போன்'' என்று முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடுகின்றார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கு ஏங்கும் இதயம்

சஞ்சீவி சிறுகதை

அ...... ம்...... மா! நாம் உணர்ந்து அதை உச்சரிக்கும் போது உள்ளமே சிலிர்க்கும். பிரணவத்தை சிவபாலன் சர்வேஸ்வரனுக்குஉபதேசித்த போது எத்தகைய உணர்வலைகள் தோன்றியதோ நான் அறியேன். ஆனால் அ...ம்...மா என்ற சொல் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை என்னுள் பொங்கிவரும் கங்கையென அன்பாய் பாய்ந்து பிரவாகிக்கிறது.

என் தாய், தந்தை இருவருமே அரசுவங்கிஒன்றில்உத்தியோகம் பார்ப்பவர்கள், உப்பிலிருந்து ஊறுகாய் வரை வாங்கித்தான் காலாட்சேபம் நடக்க வேண்டும் என்ற நிலை. இந்த இருபதாம் நூற்றுண்டில் அத்தியாவசியமாகிப் போன 'உத்தியோகத் தம்பதி' என்ற அடைமொழிக்குள் நின்ற பெற்றோருக்கு நான் மூத்த மகள்.

அரசு அலுவலகங்களுக்கே உரிய புளித்துப் போன "நிர்வாக நடைமுறை" காரணமாக தாய், தந்தை இருவரும் பற்பல சூழ்நிலைகளில் பல்வேறு இடங்களுக்கு பந்தாடப் பட்டு தாயும் குழந்தைகளும் ஒரு புறம்; தந்தை ஒருபுறம் என்ற சூழ்நிலையில் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் குடும்பம் சிரமமின்றி நடக்க வேண்டும் என்ற காரணத்தினால், பணியை விடமுடியாத அம்மா, நாளடைவில் ஒன்றன்பின் ஒன்றாக மூன்றுவாரிசுகளை உருவாக்கியதும் "குழந்தைகளின் எதிர்கால நலன்" என்ற கனவின் வலையங்களில் சிக்கி, தொடர்ந்து வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம்.

என்னைப் பெற்ற மூன்றுவது மாதமே சூழ்நிலையின் நிர்ப்பந்தம் காரணமாக என்னை "ஆயா" விடம் ஒப்படைத்துச் செல்வாள். தாயின் முகம் பார்க்கத் துடித்து, பசிக்கு அழுகுரல் கொடுக்கும் குழந்தைக்கு ஆயாவின் முகமும், ஒரு மணி நேர இடைவெளியில் ரபர் சூப்பான் வலையமுமே ஆதரவாக அமையும்.

முகம் பார்க்க முயலும் குழந்தையின் மேனியைத் தழுவ, முகட்டு வலையைப் பார்த்துச் சிரிப்பதை ரசித்து மகிழ, ஏதோ பேசிட வேண்டுமென்ற உந்துதலில்குழந்தை தன் அடித் தொண்டையில் எழுப்பும் 'கர்...புர்'என்ற சத்தத்தைப் புரிந்து மறுகுரல் கொடுக்க "இட்டாச்சு விளையாட்டுக்காட்ட' இனுங்கிய நேரத்தில் தோளில் சாய்த்து ஆதரவாக முதுகைத் தடவிக் கொடுக்க அம்மா அருகிலிருக்க மாட்டாள்.... எல்லாமே ஆயாதான்.

மாலையில் வேலை முடிந்து களைத்துச் சோர்ந்து வரும் அம்மா பாசமிகுதியால் என்னைத் தூக்க கை நீட்டினாலும் நான் ஆயாவின் கழுத்தையே கட்டிக்கொண்டு அடம்பிடிப்பேனும்.

என்னைத் தாயிடம் ஒப்படைத்து விட்டு 'ஆயா தன் வீட்டிற்குச் செல்ல வேண்டுமானால் எனக்குக் கண்ணை மூச்சி காட்டி விட்டுத்தான் ஓடி மறைவாளாம்.

தாயின் நேரடிப் பராமரிப்பில்லாமல் குழந்தை வளர்கிறதே என்று அனுதாபப் படும் அக்கம் பக்கத்தார்கள் கூட, அம்மாவின் தலை மறைந்ததும் ஆயாவிடம் சின்னச் சின்ன வேலைகளைச் செய்யச் சொல்வதும் அவள் இடுப்பை விட்டு இறங்க மறுக்கும் என்னைச் சுமந்து கொண்டே கடைதண்ணிக்குச் செல்வதும் காய்கறிக்கடையிலிருந்து கருவாட்டுமீன் கடை வரைநான் அவள்இடுப்பிலேயேபவனிவருவதும் வழக்கமானதொன்று.

சைவக்குழந்தையாகஇருந்த நான் விவரமறியாத பருவத்தில் சுவாசித்திராத மீன்வாடையே கிடையாது. காரணம் ஆயாவுக்குக் கிடைக்கும் "சம்திங்' தான்.

காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை என் தாய் அடக்கி வைத்திருந்த அன்பு இரவில் என் வாயில் அமுதமாகச் சுரக்கின்ற நேரத்தில் எனக்கு வயிற்றை நிரப்பிக் கொள்ளத்தான் முடிந்ததே தவிர சௌந்தர்ய தேவதையான என் தாயின் முகத்தைக் கண்களால் அளக்கவோ, எனக்கும் அவளுக்கும் மட்டுமே புரிகின்ற மொழியில் கொஞ்சி மகிழவோ அவள் நெற்றிப்பொட்டைக் கிள்ளிப் பூரிக்கவோ, இஷ்டம் போல கால்களால் அவள் மார்பில் உதைத்து விளையாடவோ, நேரமிருக்காதாம். அயர்ந்து உறங்கிப்போய் விடுவேனாம்;

மாதத்திற்கு ஒருமுறை வந்துபோகும் தந்தையிடம் அம்மா எவ்வளவுதான் வலுக்கட்டாயமாக என்னை ஒப்படைத்தாலும், திமிறிக்கொண்டு கீழே இறங்கி ஆயாவிடம் நான் ஓடிவிடுவேனேயன்றி என் தந்தையிடம் உரிய பாசப்பிணைப்போடு தோளிலும், மார்பிலும் துவண்டு விளையாடியது இல்லை.

எனக்கு இரண்டாவது தம்பி பிறந்தான். ஆயாவின் பொறுப்பு இருமடங்காகியது தம்பியை இடுப்பில் அவள் சுமக்கும் பொழுதெல்லாம் நான் அழுவேன். என்னையும் சேர்த்துத் தூக்க வேண்டுமென்று. இருவரையும் ஒரு சேரச்சுமக்க ஆயாவிற்குத் தெம்பிருக்காது விவரமறியாப் பருவத்தில் அன்புக்கு ஏங்கிய உள்ளத்தில் அது கிடைக்காமற் போகவே வீம்பும், வீறாப்பும் என்னிடம் ஆக்கிரமித்ததில் வியப்பில்லை.

அம்மா தம்பிப்பாப்பாவை அணைத்து உச்சி முகர்ந்தால் அவள் தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கன்னத்தில் கிள்ளுவேன். என் சேஷ்டைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு, சிரித்த முகத்துடன் அம்மா தம்பியைச் சமாதானப்படுத்திவிட்டு என்னை அருகிழுத்து அணைத்துக்கொள்வாள்.

அந்த அணைப்பில் - ஸ்பரிசத்தில் – எனக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சியில் 'நீ...... என்னம்மாதானே? நீ...என்... அம்மா...தானே...?' என்று திரும்பத் திரும்பக் கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளும் அளவிற்கு, சொல்லமுடியாத உணர்வுகள் என்னுள் கொப்பளித்து எழும்.

வழக்கம்போல் மாதம் ஒரு முறை வந்துபோகும் என் தந்தை எனக்காக ஆசை ஆசையாக என்னவெல்லாமோ வாங்கி வருவார். என்ன செய்தாலும் அவர் எனக்கு 'விருந்தாளி' யாகத்தான் தோற்றமளித்தாரே தவிர தந்தையாகப் புலப்படவில்லை. மாதம் முப்பது நாளும் ஆயாவின் கையிலும், இரவில் சிறிதுநேரம் விழிப்பு உள்ளவரை அம்மாவின் அரவணைப்பிலும் வளர்ந்துவந்த எனக்கு, ஏதோ ஒரு இரண்டாம் சனிக்கிழமை லீவை ஒட்டி வந்துபோகும் என் தந்தை விருந்தாளியாகத் தோன்றியதில் வியப்பில்லைத் தானே?

மேலும் இரண்டுவருடங்கள் இடைவெளி.

மூன்றுவது தம்பியை எனக்கு என்தாய் வழங்கினுள். அப்போது என் பெற்ருேரின் பார்வையில் நான் சற்று வளர்ந்தவளாகி விட்டேன். என்னை அருகேயுள்ள பாடசாலையில் சேர்த்துவிட்டார்கள்.

அந்தச் சின்னஞ்சிறு வயதில் காலை 7.30 மணிக்கே குளித்துத் தலை சீவி டிரஸ் செய்துகொண்டு, அம்மா கட்டாயப்படுத்தித் திணிக்கும் உணவைக் கோழி விழுங்குவதைப்போல் விழுங்கிவிட்டு, ஏதோ எதிர்காலத்தில் இந்த நாட்டையே ஆளப்போகிறவளாக, சுமக்கமுடியாமல் புத்தகப்பை, தண்ணிப்பம், லஞ்ச் பொக்ஸ் இத்தியாதியுடன் ஆயாவுடன் பள்ளிக்குப் புறப்பட்டுவிடுவேன்.

அம்மாவுக்கோ ஒரு மகத்தான கடமை முடிந்தாற் போலிருக்கும். ஆயாவிற்கோ பள்ளியில் என்னைவிட்டதும் மீதமுள்ள குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள நேரஞ் சரி.

மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து நான் திரும்பிவரும் போது அம்மா வந்திருக்க மாட்டா. ஆயா தயாரித்து வழங்கும் தேநீர் மோதகமோ அல்லது பிஸ்கட்டோ இத்துடன் சரி.

மாலை ஐந்துமணிக்கு [ஆமி செக்கிங் என்ருல் ஏழுமணி கூட ஆகும்] வந்துசேரும் அம்மாவிற்கோ நான் பள்ளிக்கூடம் சென்றதை, நான் படித்ததை அல்லது நான் வைத்திருக்கும் கோட்டுப் படங்களைப் பார்த்துமகிழவோ கேட்டு ரசிக்கவோ நேரமிருக்காது.

முப்பது வயதில், ஐம்பதின் சோர்வுடன், இரண்டு தம்பிகளையும் முறையாகக் கவனித்துவிட்டு, இரவுச் சமையலைக் கவனிக்கத் தயாராகி விடுவாள்.

'அம்மா...' என்று அவள் மடியில் விழுந்து புரள விரும்பினுலோ, கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்ச நினைத்தாலோ, அதற்கெல்லாம் நேரமின்றி 'போ...போ' என் கண்ணில்லையா! பாடம்படி... ஹோம் வேர்க்'எல்லாம் செய், என்று அட்வைஸ் செய்து அனுப்பிவிடுவாள்.

சுற்றுப்புறச் சூழ்நிலைகளை முழுமையாக நான் புரிந்து கொள்ளும் வயது.

என்அப்பா வருகின்ற நாட்களில் 'என் படிப்பைப்பற்றிக் கேட்பார். என்ரை'மாக்சைக்' கேட்டுவிட்டு 'வெரிகுட்' சொல்வார்.

விதம் விதமான சட்டைகள், நிறைய 'கண்டோஸ்' எல்லாம் வாங்கி வைத்துத் தருவார்.



ஆனால் என்னைக் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாண ரவுணுக்குப்போகவோ சுபாஸ் கபேக்குப் போகவோ அல்லது படம் பார்க்கப் போகவோ நேரமிருக்காது' போதிய உடல் உரமின்றி வளரும் இரண்டு தம்பிகளையும் மாறி மாறி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லவும், அம்மாவின் உடம்பை மேலும் சோதனைக்கு உள்ளாக்க மனமின்றிப் பத்திரமாகப் பாதுகாக்கவும், அதற்கான மருத்துவ ஆலோசனைகளைப் பெறவுமே அவருக்கு நேரம் சரியாக இருக்கும்.

எல்லாக் குடும்பங்களையும் போல வீட்டு முற்றத்தில் நான்கைந்து நாற்காலிகளை வட்டமாகப் போட்டுக் கொண்டு அம்மா அப்பா நாங்கள் சரிசமமாக அமர்ந்து சிரித்துப்பேசி, மகிழ்ந்து குலாவிய நாட்களே கிடையாது.

ஏன் எங்களால் மட்டும் அதுமுடியவில்லை? ஏக்கமாக நெஞ்சில் நிறைந்து இது வழியுமே தவிர காரணகாரியங்களைப் புரிந்து கொள்ளமுடியாத வயது. எனக்கு நினைவு தெரிந்துதான் எங்கள் வீட்டிற்கு ரி. வி. வந்தது. [ ] 'பிரிட்ஜ்' வந்தது. அப்பா, அம்மாவின் சிநேகிதர்கள் வந்தால் இருப்பதற்கு சோபாக்கள் வந்தன. ஆனல் எனக்கு என்னவந்தது? என் தம்பிகளுக்கு என்ன வந்தன? புரியவில்லை. புரிந்துகொள்ள முடியவுமில்லை.

அம்மாவும் அப்பாவும் இரவில் பேசுவார்கள்..., பேசுவார்கள்...... பேசிக்கொண்டேயிருப்பார்கள். எனக்கு தூக்கம் கண்களைச் சுழற்றும். அவர்கள் பேச்செல்லாம் நான் பெண்குழந்தையாய் இருப்பதைப்பற்றித்தான். எனக்காக வங்கியில்பணம்சேமித்துவைப்பதை என்னுடையபெயருக்கு காணி, பூமி வாங்குவதை இப்படி எதையெல்லாமோ பேசுவார்கள்.

இன்னும் பதினைந்து, இருபது வருடங்களுக்குப் பின் நடக்கப்போகிற சுபகாரியத்துக்கு எப்படிப் பணம் சேர்ப்பது பற்றிய சவலையும் ஆரம்பித்துவிடும். பிஞ்சுக் குழந்தைகளின் வறண்ட மனத்திற்கு அப்போதைக்கு என்ன தேவை என்பதை பாவம் அவர்களால் புரிந்து செயல்பட முடியவில்லை.

காலப் போக்கில் அம்மாவிற்கு வவுனியாவிற்கு மாற்றம், அப்பாவிற்கு கொழும்பிற்கு மாற்றம்.

என் படிப்பைக் குழப்பிக்க விரும்பாத பெற்ருேர் என்னை ஒரு பெண்கள் கல்லூரி ஹோஸ்டலில் சேர்த்துவிட்டார்கள். தம்பிமார் இருவரும் அம்மாவுடன் வவுனியாவில் தங்கியிருந்து பள்ளிக்கூடம் போகிருர்கள்.

எது எப்படியிருந்தாலும் மாதம் ஒருமுறை போட்டி போட்டுக்கொண்டு அப்பாவும், அம்மாவும் என்னைப் பார்க்க ஓடி வந்துவிடுவார்கள். 'ஹொஸ்டல் மிஸ்'ஸிடம் என்னைப்பற்றி விசாரிப்பார்கள். என்னைக் கூட்டிக்கொண்டு 'ஷொப்பிங்' செய்வார்கள்.

ஏதேனும் விடுமுறை நாட்களில் ஹொஸ்டலிலிருந்து வீட்டுக்குச் சென்ருல் அங்கே அம்மா இருக்கமாட்டார் வேலைக்குப் போயிருப்பார்.

இன்று நான் 'அட்வான்ஸ் லெவல்' படிக்கும் மாணவி. என் தாய் வவுனியா வங்கியில். மூத்ததம்பி ஆண்கள் கல்லூரி ஹொஸ்டலில், இளையவன் மட்டும் அம்மாவுடன். அப்பா கொழும்பில் 'ரூம்' வாழ்க்கை. எல்லாம் யாருக்காக?... எங்களுக்காக...! எங்கள் எதிர்காலத்திற்காக! இயந்திரமாக உழைக்கிருர்கள். ஓடாய்த் தேய்கிருர்கள்.

கை நிறையச் சம்பாதித்தும், வாய்க்குச் சுவையான சாப்பாட்டிற்கு வழியின்றி, ஆற்றாமை வெளிப்படுகின்ற நேரங்களில் அன்பாய் பேசி, ஆதரவாய், நொந்த மனதிற்கு ஒத்தடங் கொடுக்க வேண்டிய மனைவி அருகிலின்றி, விலங்கிடப்படாத கைதியாக அப்பா...

தன் குழந்தைகளிடம் இயந்திரத்தனமாக இல்லாமல், யதார்த்தமான அன்பைப் பொழிந்து கோழி தன் குஞ்சுகளை அடைகாப்பது போலக் காத்து வளர்க்க வேண்டிய அம்மா, எங்கோ ஒரு மேஜை நாற்காலியின் முன்பு, சுழலும் மின் விசிறியின் கீழ் எதை யெதையோ கூட்டிக்கழித்துக் கொண்டு......

அன்னியோன்யமான தாம்பத்தியந்தான்... என்பதை வெளி உலகிற்குப் பறைசாற்றப் பிறந்துள்ள மூன்று வாரிசுகளான எங்களுக்காக, எங்கள் வளமான எதிர்காலத்திற்காகப் பாடுபடும் இவர்களைக் கண்ணீர் மல்கப்பார்க்கிறேன். வைத்தகண் வாங்காமல் வெறித்துப் பார்க்கிறேன்.

பணமும்- பொருளும் நவீன வசதிகளும் இன்றைய கால கட்டத்தில் அத்தியாவசியந்தான். எனினும் இவற்றிற்கெல்லாம் மேலாக குழந்தைகளுக்கு ஓர் அடிப்படைத் தேவையென்று ஒன்றுண்டு. அதுதான் கிடைக்க முடியாத தாயன்பு. இதைத்தான் நானும் தேடிக்கொண்டிருக்கிறேன். ★

- காரை யோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை -

# நீங்கள் 'சாத்வீக குணத்தை' கடைப்பிடிப்பவரா?

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று ஒரு வாக்கியம் உள்ளது. மனமானது எதையெல்லாமோ விரும்பும். எதையெல்லாமோ செய்யச் சொல்லும். அதன்படி எல்லாவற்றையும் செய்துவிடக் கூடாது. அறிவு என்ற ஒன்றும் இருக்கிறதல்லவா! அதைக் கொண்டு சற்று சிந்தித்து எதனுல் நன்மையுண்டோ அதை மட்டும் செய்யவேண்டும். இதைத்தான் மனதைக்கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னுர்கள்.

மனிதன் சத்வ, ரஜோ, தமஸ் ஆகிய முக்குணங்களில் ஏதாவது ஒன்ருல் ஆக்கிரமிக்கப்படுகிருன். ரஜோ குணமென்பது முரட்டுத்தனமான பிடிவாத குணம். தமஸ் என்பது மட்டமான குணம். சத்வ குணம் என்பது சாந்தம் நிறைந்த நல்ல குணம். இந்த மாதிரியான வெவ்வேறு குணமுள்ளவர்கள் அதற்குத் தகுந்தபடிதான் நடந்து கொள்வார்கள். சத்வ குணம் பொருந்தியவர்கள் இயல்பாகவே நல்லவர்களுடன் சேர்ந்து, நல்லது, தீயது என்பதை அறிந்து கொண்டு, நற்கதியடையும் வழியயைத்தேடுவார்கள். நற்கதியும் பெறுவார்கள். மற்ற இரண்டு குணங்களும் உள்ளவர்கள் மனம் போன படியும், தங்கள் சுயநலத்துக்காகவும், தங்கள் இச்சைகள் பூர்த்தியாவதற்காகவும், என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து அந்த நேரம் திருப்தியடைவர். பின்னுல் ஏற்படக்கூடிய துக்கத்தையோ, துன்பத்தையோ எண்ணிப் பார்ப்பதில்லை. வேதனையை அனுபவிக்கும் போது தான் புத்தி வருகிறது.

சொறி பிடித்தவனுக்கு நமைச்சல் ஏற்படுகிறது. சொறிய ஆரம்பிக்கிருன். சுகமாக இருக்கிறது. மேலும் மேலும் சொறிந்து கொண்டே இருக்கிருன். அடடா! என்ன சுகம்! என்ன சுகம்! மேலும் மேலும் பிடில் வாசிப்பதைப் போல் வேக வேகமாகச் சொறிந்து விடுகிருன். சற்று நேரம் கழித்து அதன் பலன் தெரிகிறது. சொறிந்த இடத்தில் எரிச்சல் உண்டாகிறது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த எரிச்சல் அதிகமாகித் தாங்க முடியாத அளவுக்கு எரிச்சல்! ஐயோடா! அப்பாடா! தெரியாத்தனமாகச் சொறிந்து விட்டேனே! எரிச்சல் தாங்கலையே என்று துடிக்கிருன். தவிக்கிருன். அதன் மேலே எதையெல்லாமோ தடவிப் பார்க்கிருன். "ஊஹூம்! நான் போவேனு? என்கிறது அந்த எரிச்சல். அதன் வேகம் அடங்க அரை மணி, ஒரு மணி நேரமாகும். அப்பாடா என்று இவன் மூச்சுவிடுவான். சொறிந்த இட[illegible] டதம் கசிந்து கொண்டிருக்கும்! பாவம். இப்போதைக்கு இது சித்தமாகி விட்டாலும் மீண்டும் அந்த அரிப்பு வரத்தான் வரும். அவஸ்தையும் உண்டு!

அதுபோல ஒரு பாவத்தைச் செய்யும் போது ஆனந்தம்! ஆணவம்! பலனை அனுபவிக்கும் போது "ஐயோடா! அப்பாடா!" பாவத்தைச் செய்துவிட்டுப் பலனை அனுபவிக்காமல் போக முடியாது! அனுபவித்தே தீரவேண்டும். இது துக்கத்துக்கான மார்க்கம். நல்லது செய்து புண்ணியம் சேர்த்தால், அது சுகமான பலனைக் கொடுக்கும். எப்போது கொடுக்கும் என்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. என்றைக்காவது அது கிடைக்கும். "நல்ல காரியம் செய்தவன் ஒரு நாளும் கெட்டுப் போவதில்லை!' என்பது பகவான் வாக்கு! மனமும் செயலும் அந்தப் பக்கம் திரும்பவேண்டும். [illegible]

- வைரம் ராஜகோபால் -

யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணா அரசு வேலையில் சேராத காரணம் என்ன?

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. படித்து முடித்த பேரறிஞர் அண்ணா அரசுப்பணிகளில் நாட்டமின்றித் தாழ்ந்த தமிழம் தலை நிமிர பட்டி தொட்டி எங்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார்.

தம்குடும்பத்தின் ஏழ்மை நிலையைப் போக்க, ஏதாவது ஓர் அரசு உத்தியோகத்தில் அண்ணா அமர வேண்டும் என்று அவரின் வளர்ப்புத் தாய் சிற்றன்னை- பங்காரு அம்மையார் ஆசைப்பட்டார்.

காஞ்சியில் இருந்து பெரிய மனிதர் ஒருவரின் சிபாரிசுக் கடிதம் ஒன்றை வாங்கிக் கொண்டு அண்ணா சென்னை வந்தார்.

சென்னை உயர்நீதி மன்ற அதிகாரி ஒருவரைச் சந்திக்க அவரில்லம் சென்றார்.

அவரிடம் சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்து அரசு வேலை ஒன்றைப் பெறுவதே அண்ணாவின் நோக்கம்.

அண்ணாவைக் கண்ட அந்த அதிகாரி ஓடி வந்து அண்ணாவைக் கட்டித் தழுவினர்.

''மிஸ்டர் அண்ணாத்துரை உங்களைப் பார்க்க நானே வர



அண்ணாதுரை

லாமென்று இருந்தேன். மாவட்ட முன்சிப் பதவி காலியாக உள்ளது. சேர். ஏ. ராமசாமி முதலியார் மனது வைத்தால் என் முயற்சி வெற்றி பெறும். அவரை நன்றாக உங்களுக்குத் தெரியுமே! எப்படியாவது அவரிடம் சொல்லி அந்தப் பதவி எனக்கே கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்''- என்று அந்த அதிகாரி வேண்டினார்.

இந்த நிகழ்ச்சி அண்ணாவின் வாழ்வில் திருப்புமுனைக்கு காரணமானது.

''வேலை தேடி வந்த இடத்தில் நம்மையே பெரிசு செய்யச் சொல்லிக் கேட்கிறார் லே'' என்று [illegible] அண்ணா. ''அற்றின் அவசியம் செய்கிறேன்'' என்று சொல்லி விட்டு வெளியேறினார்.

அன்றோடு வேலை தேடும் படலத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு தந்தை பெரியாரோடு சேர்ந்து அரசியலில் புகுந்தார்.

## 8.8.88 இல் நடந்தது என்ன?

8 - 8 - 88 — இத்திகதியை சிங்கப்பூர் வாசிகள் ராசியான நாளாகக் கருதினார்கள்.

இதனால் இத்திகதியில் ஏற்பட்ட திருமணங்கள் நடந்தன.

ஒரு ஆண்டுக்கு முன்பு நடந்து இருக்க வேண்டிய திருமணங்களையும் ஒரு ஆண்டுக்குப் பின்பு நடக்க வேண்டிய திருமணங்களையும் கூட அதே திகதியில் வைத்தார்கள்.

இதே போல குழந்தையையும் அதே நாளில் பிறப்பது அதிஷ்டமாகக் கருதப்பட்டது

இதனால் பிரசவத்துக்கு 10 நாள் காத்திருக்க வேண்டிய பெண்களுக்குக்கூட செயற்கை முறையில் வலி வரவழைத்து குழந்தை பெற வைக்கப்பட்டது.

சில பெண்களுக்கு சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் குழந்தையை எடுத்தனர். ★

## இயற்கை மரணமடையாத தெற்கு ஆசியத் தலைவர்கள்!

இயற்கைக்கு மாறாக இறந்த தெற்கு ஆசிய தலைவர்கள் வரிசையில் பாகிஸ்தான் அதிபர் ஸியா பத்தாவது இடத்தைப் பெறுகிறார்.

இதுவரை மரணமடைந்த தலைவர்கள் வருமாறு;

1. மகாத்மா காந்தி: சுட்டுக் கொலை.
2. பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான்: சுட்டுக் கொலை.
3. இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா; சுட்டுக் கொலை.
4. பங்களாதேஷ் பிரதமர் முஜிபுர் ரஹ்மான்: சுட்டுக் கொலை.
5. ஆப்கன் அதிபர் தாவூத்: சுட்டுக் கொலை.
6. ஆப்கன் பிரதமர் தராகரி: இராணுவப் புரட்சியில் இறந்தார்.
7. ஆப்கன் பிரதமர் ஹாபிஜால் அமீன்: சோவியத் படைகள் நுழைந்ததும் கொல்லப்பட்டார்.
8. பாகிஸ்தான் பிரதமர் பூட்டோ; தூக்கில் போடப்பட்டார்
9. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி: சுட்டுக் கொலை.
10. பாக் அதிபர் ஸியா: விமான விபத்தில் பலி. ★

## ஆலயத்தில் பக்தர் கூட்டம் குறைய ஈ.வெ.ரா. சொன்ன யுக்தி

பெரியார் ஈ. வெ. ரா. மேடையில் பேசும்போது, தான் பேசுவதை வாய்மூடி மௌனிகளாய் அப்படியே இந்த மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்ப மாட்டார். எனவே இடை இடையே மக்களைப் பார்த்தே வினாக்களைத் தொடுப்பார்.

யாராவது தைரியமாக எழுந்து தனது ஐயங்களைக் கேட்டால் அதை வரவேற்பார்.

ஒரு சமயம் பெரியார் தனது சொற்பொழிவில் நாத்திக வாதத்தைத் தீவிரமாய்த் தொடர்ந்து கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தின் மத்தியில் இருந்து எழுந்த ஒருவர் மேடையை நோக்கிக் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

நீங்கள் எவ்வளவு தான் தீவிரமாக நாத்திக வாதம் செய்து கொண்டிருந்தாலும், நாளுக்கு நாள் கோவிலுக்குப் போகிற கூட்டம் பெருகிக் கொண்டே தான் போகிறது என்ற செய்தி உங்களுக்குத் தெரியுமா?

இது தான் அம்மனிதர் கேட்ட கேள்வி.

இதைக் கேட்டுப் பெரியார் சிறிதும் ஆத்திரப்படவில்லை. நிதானமாகத் தனக்கே உரிய பாணியில் அவர் பதிலளித்தார்.

'நாளுக்கு நாள் கோவிலிலே கூட்டம் பெருகிக் கொண்டே போகிறதாகச் சொல்லுகிறீர்களே. நாளையில் இருந்து ஆண்களுக்கு ஒரு நாள், பெண்களுக்கு ஒரு நாள் சுவாமி கும்பிட கோவில் நடைக்கதவைத் திறப்போம் என்று அறிவிக்கச்சொல். அப்புறம் கோவில் பக்கம் யாராவது வருகிறார்களா? என்று என்னிடம் வந்து சொல்'—

இப்படிப் பெரியார் கூறவே கூட்டத்தில் சிரிப்பொலி. வினா எழுப்பியவரும் சேர்ந்து சிரித்துக்கொண்டே அமர்ந்து கொண்டார்.

## புதிய கிரகம்

அமெரிக்காவைச் சேர்ந்த வான சாஸ்திர நிபுணர்கள் புதிய கிரகம் ஒன்றைக் கண்டு பிடித்து உள்ளனர்.

இது பூமியைப் போல் 30 ஆயிரம் மடங்கு பெரியதாக உள்ளது.

இதன் மேல் பகுதியில் கடுமையான வெப்பம் நிலவுவதால் இதில் உயிரினம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தக் கிரகம் ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.

ஒரு சுற்று சுற்ற 84 நாட்கள் ஆகிறது. ★

## மிருகங்களின் பாலின் பயன்

★ ஒட்டகப்பால் பசியைத் தூண்டும். வாதம், வயிற்று நோய்க்கு நல்லது.

★ செம்மறியாட்டுப் பால் வாத நோயைக் குணப்படுத்தும்.

★ யானைப் பால் உடலுறுதியைத் தரும். ★

## தாகூரின் புத்திமதி



தாகூர்

டாக்டர் ரவிந்திரநாத் தாகூரின் செயலாளர் திருவாளர் மாலிக் என்பவரிடம் ஒட்டோகிராப்பை நீட்டினார் சந்யேந்தரசிங் என்பவர்.

டாக்டர் மாலிக், 'உன்னை அறி [Know thyself]' என்று எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்தார்.

அடுத்து தாகூரின் அறைக்குள் நுழைந்த சிங், அவரிடம் ஒட்டோகிராப்பை நீட்டினார்.

தனது செயலாளர் எழுதிய குறிப்பினைப் படித்துப் புன்னகை புரிந்த தாகூர், அக்குறிப்புக்கு இணையாக தானும் ஒரு குறிப்பு எழுதிக்கையொப்பமிட்டார். 'தான் என்பதை மற' [Forget Thyself].

## தமா 'ஷா'

பெர்னாட்ஷா எழுதிய நாடகம் ஒன்றை மேடையில் நடித்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தினர் பலர் நாடகம் நன்றாக உள்ளது என்று கோஷம் போட்டார்கள்.

ஆனால், கூட்டத்திலிருந்த ஒருவர் மட்டும் நாடகம் சரியில்லை என்று ஆவேசமாகக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தார்.

அந்த நபருக்கு அருகே அமர்ந்திருந்த பெர்னாட்ஷா அந் நபரைப் பார்த்து, 'நாடகம் நல்லாயில்லை என்பது உனக்கும் எனக்கும் தான் தெரிகிறது. ஆனால் இவ்வளவு பெரிய கூட்டத்தில் நீயும் நானும் சக்தி என்னாகப் போகிறது...' என்று கூறி அந் நபரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ★

## பழைமையான ஜெபமாலை

சோவியத் யூனியனில் உள்ள மெட்சிமார் பகுதியில் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அங்கு பழங்காலத்தில் கிறிஸ்தவ ஆலயம் இருந்தது என்றும் நாளடைவில் புதையுண்டு போனது என்றும் கிடைத்த தகவலின் பேரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது அங்கு கடவுளின் உருவச்சிலை, களிமண்ணால் ஆன பலிபீடம், ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

ஜெபமாலை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

அது சுமார் 4 ஆண்டுகளுக்கு முந்தையது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். ★

# ஸியாவை அடையாளம் காண உதவிய பொய்ப்பற்கள்

மறைந்த பாகிஸ்தான் அதிபர் ஸியாவின் வாழ்க்கையிலும் புதன்கிழமை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஸியா எந்த ஒரு முக்கிய முடிவையும் புதன்கிழமை தான் எடுப்பார்.

முன்னாள் பிரதமர் பூட்டோ 10 - 4 - 1979 இல் தூக்கிலிடப்பட்டார்.

அன்று புதன்கிழமை.

ஸியாவும் நடுவானில் விமானம் வெடித்துச் சிதறி உயிரிழந்தார்.

அன்றும் புதன்கிழமையே.

அதிபர் ஸியா கடந்த 12 ஆம் திகதி தான் 65 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். ஆனால் 5 நாளில் அவரை மரணம் தழுவிக்கொண்டது.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த அவர் 1926 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் திகதி பிறந்தார்.

இஸ்லாத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர் ஸியா. முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆனை எப்போதும் வைத்திருப்பார். விமானப் பயணம் மேற்கொள்ளும் போதும் அதை எடுத்துச் செல்லத் தவறுவதில்லை.



ஸியா - உல் - ஹக்

விமானம் வெடித்துச் சிதறிக் கிடந்த இடத்தில் ஸியாவின் குர்ஆன் கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அது எவ்வித சேதமுமின்றிக் காணப்பட்டது.

ஸியாவின் உடலை பற்கள் மூலம் அடையாளம் கண்டு பிடித்தனர்.

ஸியாவுக்கு பல்வலி இருந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு முன்வரிசையில் உள்ள 4 பற்களை பிடுங்கி எடுத்துவிட்டு புதிதாக 4 பற்கள் பொருத்தப்பட்டன.

ஸியாவின் உடலை அடையாளங் கண்டுபிடிக்க அவரது பல் டாக்டர் அழைக்கப்பட்டார்.

முன் வரிசையில் உள்ள 4 வித்தியாசமான பற்களை வைத்து அவர் ஸியாவை அடையாளங் காட்டினார்.

மற்றவர்களுடைய உடல்கள் ரத்த பரிசோதனை செய்யப்பட்டு அடையாளம் கண்டனர். ★

## தேன்நிலவு: பெயர் வரக் காரணம்!

இங்கிலந்து நாட்டில் ஆங்கிலோ சாக்ஸன் காலத்தில் ஏற்பட்ட வழக்கம் இது.

ஷாம்பேன் என்ற விலையுயர்ந்த பானம் ஆல்பெர்ட் அரசரின் காலத்தில் கிடையாது.

அதற்கு பதிலாக தேனில் செய்யப்பட்ட 'மெட்' எனப்படும் பானம் வழக்கத்திலிருந்தது.

ஒரு பௌர்ணமி நிலவிலிருந்து மற்றொரு பௌர்ணமி வரை ஒரு மாதம் திருமணம் கொண்டாடப்படும்.

இந்த 30 நாட்களும் இரவு வந்ததும் கணவன், மனைவி இருவரும் ஒரே அறையில் பூட்டப்படுவார்கள்.

'மெட்' என்னும் தேனால் ஆன பானத்தைக் குடித்து முடித்து மயங்கி விடுவானாம் கணவன்.

அவனைத் தூக்கிப்படுக்கையில் படுக்க வைப்பது மனைவியின் வேலை.

ஒரு மாதம் நடக்கும் இந்த கூத்து. இது தான் தேன் நிலவு வந்த கதை. (பொது அறிவுக் களஞ்சியம் என்ற நூலிலிருந்தது)

இதே வேளை,

காஷ்மீர் மாநில சுற்றுலாத்துறை புதுமண தம்பதிகள் தேனிலவை அனுபவிக்க சொகுசு வீடுகள் கட்டியிருக்கிறது.

மரத்தால் ஆன இந்த வீடுகளுக்கு 'தேனலவு குகை' என்று பெயரிடப்பட்டுள்ளது.


இந்த வீட்டில் சகல வசதிகளும் கூடிய படுக்கை அறை ஒன்று உள்ளது. அதன் பக்கவாட்டிலும் மேல்பகுதியிலும் முகம் பார்க்கும் பெரிய கண்ணாடிகள் பதிக்கப்பட்டுள்ளன. அலுமாரியில் விதம் விதமான தாம்பத்ய உறவுப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டு உள்ளன.

அகலமான சொகுசு மெத்தைக்கட்டில் மீது இதயத்தை அம்பு துளைக்கும் படம் போட்ட விரிப்பு போர்த்தப்பட்டு இருக்கிறது. ★

## நேரு விருது பெறும் ஐ. நா. செயலாளர்

உலகில் சமாதானம் ஏற்படப் பாடுபடும் தலைவர்களுக்கு நேரு விருது 1965 முதல் இந்திய அரசால் வழங்கப்பட்டுவருகிறது.

விருதுபட்டயத்துடன் இந்தியப்பணமாக 15 லட்சம்



நேருஜி

ரூபாவும் வழங்கப்படுகிறது.

இதுவரை இவ்விருதுபெற்ற உலகத் தலைவர்கள் வருமாறு;

இந்திரா காந்தி, மார்ட்டின் லூதர் கிங், கான் அப்துல் கபார்கான், அன்னை திரேஸா, சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா, யூகோஸ்லாவியா அதிபர் மார்ஷல் டிட்டோ, தன்ஸானிய ஜனாதிபதி நைரேரே, சுவிடன் பிரதமர் பால்மே, தென் ஆபிரிக்க விடுதலைத்தலைவர் நெல்சன் மண்டேலா, ஐ. நா. முன்னாள் பொதுச் செயலாளர் ஊதாண்ட்.

1988 விருது தற்போதைய ஐ. நா. பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலருக்கு வழங்கப்படவிருக்கிறது.

குயிலருக்கு வயது 78. பெருநாட்டைச் சேர்ந்தவர். 1981 இல் முதல் தடவையாக பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அண்மையில் 2 ஆவது தடவையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வளைக்க முடியாத வளைகுடாப்போரை முடிவுக்குக் கொண்டுவர பெருமுயற்சி எடுத்ததற்காக வழங்கப்படும் நேரு விருதைப் பெற்றுக் கொள்ள இந்த ஆண்டு இறுதியில் குயிலர் புதுடில்லி வரவிருக்கின்றார்.

## சோவியத்தில் கறுப்புப் பணம் 40 ஆயிரம் கோடி

கறுப்புப் பணம் கம்யூனிஸ்ட் நாடான சோவியத் யூனியனையும் விட்டு வைக்கவில்லை.

அந்த நாட்டிலும் கறுப்புப் பண பொருளாதாரம் மூலம் பெரும் பணக்காரர் ஆனவர்கள் ஏராளம்.

சோவியத் கள்ளச் சந்தையில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் புழங்குகின்றது என முன்னணி பொருளாதார நிபுணர் தத்யனவ் தெரிவித்தார். இச் செய்தியை வஷிங்டன் போஸ்ட் வெளியிட்டிருக்கிறது. ★

பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

# புறாக்களை திசை மாறச் செய்யும் பூமியின் மின்காந்தப்புலம்!

ஜூலை முதல் தேதி விடியற்காலை 5.20 மணி.

பிரான்சில் வெவ்வேறான 3 இடங்களிலிருந்து 5000 புறாக்கள் வானில் பறக்க விடப்படுகின்றன.

அவை போட்டிகளில் பங்கு கொள்கிற பந்தயப் புறாக்கள்.

அப்புறாக்கள் அனைத்தும் பிரிட்டனில் உள்ள பந்தயப் புறாவளர்ப்போருக்குச்சொந்தமானவை.

எல்லாம் எதிர்பார்த்தபடி நடந்திருந்தால் பிரான்சிலிருந்து கிளம்பிய அப்புறாக்கள் 'இங்கிலீஷ் சனல்' (English Channel) எனப்படும் கடல் பகுதியைக் கடந்து மறுநாள் சனிக்கிழமையன்று இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும்.

முதலில் வந்து சேருகிற புறாவின் சொந்தக்காரருக்கு தங்கப்பதக்கம், ரொக்கப் பணம் இப்படியாகப் பரிசுகள் உண்டு.

ஆனால் பிரான்சில் பறக்க விடப்பட்ட 5000 பந்தயப் புறாக்களில் 283 புறாக்கள் மட்டுமே இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தன.

மீதி பந்தயப் புறாக்களின் சொந்தக்காரர்கள் கவலையுடன் வானைப் பார்த்து நின்றதுதான் மிச்சம்.

அவை சனிக்கிழமையும் வரவில்லை. அதன் பிறகும் வந்து சேரவில்லை. என்ன ஆயிற்று? வானிலை மோசமாக இருந்ததாகவும் கூறமுடியாது.

ஏனெனில், புறாப் பந்தயக்காரர்கள் வானிலை சரியாக இருக்குமா என்று ஊர்ஜிதப் படுத்திக்கொண்டுதான் போட்டியை நடத்துவது வழக்கம்.

வெள்ளியன்று அதிகாலை 4.30 மணிக்கு வானிலை இலாகா வெளியிட்ட அறிவிப்பில் வானிலை நன்றாக இருக்கும் என்றே தெரிவிக்கப்பட்டது. அதன்படியே வானிலை நன்றாகவே இருந்தது.

### காணாமல் போன புறாக்கள்

ஸ்பெயினுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து பறக்க விடப்பட்ட பல புறாக்கள் ஜெர்மன், ஹொலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குப் போய்ச் சேரவில்லை.

அவை என்ன ஆயிற்று என்பதும் தெரியவில்லை.

புறாக்கள் நன்கு திசையறிந்து பறந்து செல்லக்கூடியவை.

பல ஐரோப்பிய நாடுகளிலும் ஒரே சமயத்தில் பல ஆயிரம் புறாக்களுக்கு என்ன நேர்ந்தது?

புறாக்களைப் பாதிக்கிற வகையில் ஐரோப்பிய நாடுகளில் அப்போது எதுவும் நிகழவில்லை.

ஆனால், 9 கோடியே 30 லட்சம் [illegible] அதாவது சூரியனில் அப்போது ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அதாவது, சூரியனின் மேற்பரப்பில் சீற்றம் ஏற்பட்டு பிரமாண்டமான அளவுக்கு வாயு பீச்சிட்டது.

இது சுமார் 91 நிமிஷம் நீடித்தது.

இதன் விளைவாகப் பூமியின் காந்தப்புலம் பாதிக்கப்பட்டது.

புறாக்கள் வழியறிந்து செல்லும் முறைக்கும் பூமியின் காந்தப் புலத்துக்கும் தொடர்பு உள்ளதாகக்கருதப்படுகிறது.

புறாக்கள் திசையறிந்து செல்லப் பல வழிகளைக் கையாளுகின்றன என்று கூறிய பிரிட்டிஷ் பறவை ஆராய்ச்சி டிரஸ்ட் தலைவர் கிறிஸ் மீட் (Chris Mead) புறாக்கள் மின் காந்தப் புலத்தை வைத்து வழிபறிவதாகக் கூறுவதற்கு விஞ்ஞானபூர்வ ஆதாரங்கள் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

பூமியின் மின்காந்தப் புலத்தின் கோடுகள் பூமியின் உள்புறத்தை நோக்கியவாறு அமைந்துள்ளன. புறாக்கள் இக்கோடுகளால் அமையும் குறுங்கோணத்தைக் கண்டு பிடித்து அந்த அடிப்படையில் பறந்து செல்கின்றன.

ஆனால், சூரியனில் ஏற்படும் சீற்றத்தினால் பூமியின் காந்தப் புலம் தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, புறாக்கள் திசையறிவது இதனால் பாதிக்கட்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

புறாக்கள் கிளம்புகிற சமயத்தில் இப்படிப்பட்ட வகையில் கோளாறு ஏற்பட்டு ஆரம்பத்தில் வழி தவறினால், பின்னர் அவை தவிப்புக்குள்ளாகி படபடவென்று சிறகை அடித்துக்கொண்டு வளைய வளைய வந்துகொண்டிருக்கும். அல்லது அவை பிறபறவைகளுக்கு இரையாகிவிடலாம் அல்லது சோர்ந்து போய்க் கடலில் விழுந்து விடலாம் என்றும் அவர் சொன்னார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசர் நாய்க்கடி நோயில் இருந்து மனிதன் தப்பும் வழி என்ன?

- டாக்டர் ந. சிவராஜா -
(மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்)



### விசர் நாய்க்கடி நோய்: (RABIES)

இந்நோய் விலங்கு விசர், நாய் விசர், நீர் வெறுப்பு நோய் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

விலங்கு விசர் காட்டில் வாழும் நரி, ஓநாய், வௌவால், கீரி போன்ற மிருகங்களிடையே பொதுவாகப் பரவுகின்றது. இந்த மிருகங்களுக்கு விசர்வரும் காலத்தில் அவை ஊருக்குள் சென்று நாய், பூனை போன்ற வீட்டு மிருகங்களுக்குக் கடிப்பதால் வீட்டில் வளர்க்கப்படும் நாய், பூனை முதலியவற்றுக்கு இந்நோய்தொற்றுகின்றது. நோய் ஏற்பட்ட நாய் அல்லது பூனை இன்னுமொரு நாயையோ, பூனையையோ, மனிதனையோ கடித்தால் அவர்களுக்கும் இந்நோய் ஏற்படும்.

இதில் முக்கியம் என்னவென்றால் மிருகங்களிடையே தான் இந்நோய் பரவுகின்றது. ஆனால் ஒரு நோயுண்டான மனிதரில் இருந்து, இன்னுமொரு மனிதருக்கு இது பரவியதாக ஆதாரங்கள் இல்லை.

உலகத்தில் வெவ்வேறு பகுதிகளில் இந்நோய் குறிப்பிட்ட சில மிருகங்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. மத்திய அமெரிக்க நாடுகளிலே இது பெரும்பாலும் கீரிகளிடையே பரவும் நோயாக இருக்கின்றது. கிழக்காசிய நாடுகளிலே பெரும்பாலும் இந்நோய் ஓநாய், நரிகளிடையே காணப்படுகின்றது.

விசர் நாய்க்கடி நோய் பெரும்பாலும் நாயிலிருந்து தான் மனிதருக்குத் தொற்றுகின்றது. ஆனால் தங்களது தொழிலின் நிமித்தம் போகும் போது காட்டிலுள்ள நோயுற்ற மிருகங்களின் கடியினாலும் தொற்றலாம்.

### நோய்க்கிருமி

விசர்நாய்க்கடி நோய்க்குக் காரணியாக இருப்பது ஒரு வைரஸ் கிருமி. இது நோயுற்ற மிருகத்தின் உமிழ் நீரில் அதிகமாகக் காணப்படும். நோயுற்ற மிருகம் கடிக்கும்போது காயத்தினூடாக உடலினுள்போய்ச் சேரும்.

நாய் கடித்தவுடன் நன்றாகச் சவர்க்காரம் போட்டுக் காயத்தைக் கழுவவேண்டும். ஓடும் நீரில் நன்றாகக் கழுவுவதன்மூலம் உடலினுள் செல்லும் வைரஸ் கிருமிகளின் தொகையைக் குறைக்கலாம்.

உடலுக்குள் சென்ற வைரஸ் கிருமிகள் நரம்புகளின் வழியாக மூளையிலுள்ள நரை நிறச் சடலத்தைச் (Grey Matter) சென்றடைந்து நோய்க்கான அறிகுறிகளை உண்டாக்கும். நோய் அரும்பு காலம், 11 நாட்களில் இருந்து ஒரு வருடம் வரை செல்லலாம்.

### நோயின் பரவல்:

இலங்கையில் இந்நோய் கூடுதலாகக் காணப்படுகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் 1600 க்கும் மேற்பட்டவர்கள் இந்நோயின் காரணமாக இறந்துள்ளார்கள்.

இங்கிலாந்துடன் நாங்கள் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கிலாந்தில் 1946 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை 15 பேருக்கு மாத்திரமே இந்நோய் உண்டாகியுள்ளது. இவர்களும் வெளிநாடுகளில் தொற்றுதல் உண்டாகி இங்கிலாந்தில் இறந்துள்ளார்கள்.

நமது நாட்டில் 1973 ஆம் ஆண்டில் மட்டும் 377 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள்.

சில சமயங்களில் மேற்கூறிய அறிகுறிகள் எதுவுமின்றி ஓர் நாய்க்கு விசர் இருக்கலாம். இது ஊமை விசர் (Dumb Rabies) என்று அழைக்கப்படும்.

### நாய் கடித்தால் செய்ய வேண்டிய முதலுதவி

1. கடித்த பகுதியை (காயம் உட்பட) நன்றாகச் சவர்க்காரம் போட்டு உடனேயே கழுவுதல் வேண்டும். கழுவத் தாமதித்தால் காயத்தைச் சுற்றியுள்ள வைரஸ் கிருமிகள் காயத்தினுட் சென்று மூளையைச் சென்றடையும். வசதி இருந்தால் தண்ணீர் குழாயின் கீழே காயப்பட்ட பகுதியைப் பிடித்துக் காயத்தின் உள்ளேயும் நன்றாகக் கழுவுதல்வேண்டும். சிறிது குருதிப் பெருக்கம் இருந்தால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டியதில்லை.

2. கழுவிய காயத்தை சுத்தமான துணியினால் நன்றாக ஒத்தி எடுக்க வேண்டும்.

3. காயத்தைச் சுத்தமான துணியினால் கட்டி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லல் வேண்டும்.

4. கடிக்கும்போது நாய்க்கு விசர் என்று சந்தேகித்தால் அல்லது உரிமையாளர் இல்லாத நாயாக இருந்தால் உடனடியாக விசர் நாய்க்கடி ஊசி போடத் தொடங்க வேண்டும்.

5. கடித்த நாய்க்கு விசர் இல்லை என்று நினைத்தால் கடித்த நாயை 10 நாட்களுக்கு கட்டி வைத்து அவதானித்தல் வேண்டும். முன்னர் கூறிய விலங்கு விசரின் அறிகுறிகள் ஏதும் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று விசர் நாய்க்கடிக்கான சிகிச்சை பெறல் வேண்டும்.

6. காயம் சிறு கீறலாக இருந்தாலும் அசட்டையாக இராது மேற்குறிப்பிட்ட முதலுதவியைச் செய்யவேண்டும்.

இரண்டு வகையான விசர் நாய்க்கடி ஊசிகள் தற்போது இருக்கின்றன.

1. Anti Rabies Vaccine (ARV).

இது சாதாரணமாக அரசாங்க வைத்தியசாலைகளில் கிடைக்கும் தடுப்பூசி. இதைத் தொடர்ச்சியாக 14 நாட்களுக்குப் போடல் வேண்டும். பின்பு, இந்த

### நோய் ஏற்பட்ட நாயில் காணும் அறிகுறிகள்

இந்நாய்க்கான நோயரும்பு காலம் 5 நாட்களில் இருந்து 14 மாதங்கள் வரையிலானதாகும். அதாவது நோயுள்ள ஓர் நாய் இன்னொரு நாயைக் கடித்தால் கடிபட்ட நாய்க்கு விலங்கு விசரின் அறிகுறிகள் உண்டாவதற்கு 14 மாதங்கள் வரை செல்லலாம்.

விலங்கு விசரின் அறிகுறிகள் உண்டாகுவதற்கு 3 நாட்களுக்கு முன்னதாகவே அந்நாயின் உமிழ்நீரில் வைரஸ் கிருமிகள் இருக்கக் காணலாம்.

நாய்க்கு நோய் ஆரம்பிக்கும்போது அது பயந்த தன்மை உடையதாகவும், கலபத்தில் கோபம் கொள்ளும் தன்மை உடையதாகவும் காணப்படும். காரணமின்றி வறண்ட குரலுடன் குரைக்கும். இருண்ட இடங்களை நாடும்.

நோய் அதிகரிக்கும்போது, மரத்துண்டு, வைக்கோல் முதலிய ஜீரணிக்க முடியாத பொருள்களைக் கடிப்பதில் ஆர்வம் காட்டும். அதே சமயம் எதிர்ப்படும் எவரையும் கோபத்துடன் கடிக்கும்.

கடைசிக் கட்டத்தில் நாக்கை வெளியே தொங்க விட்டுக் கொண்டு வைரஸ் கிருமிகள் நிறைந்து உமிழ் நீர் வழியக் கண்டதைக் கடித்துக் கொண்டு தெருத் தெருவாக ஓடித்திரியும்.

கடைசியில் வாய் மூட முடியாது உடல் முழுவதும் சோர்வுற்று விழுந்து இறந்துவிடும். ஊசிகள் போட்டு முடிந்த 10 ஆவது, 30 ஆவது, 90 ஆவது நாட்களில் திரும்பவும் 3 ஊசிகள் போடல்வேண்டும்.

2 Human Diploid Cell Strain Vaccine (HDCSV)

இது கடித்த அன்றும்3 ஆவது, 7ஆவது, 14ஆவது 30ஆவது நாட்களிலும் போடப்படும் தடுப்பூசியாகும்.

இவற்றைத் தவிர கடித்த ஓரிரு நாட்களுக்குள் Ant Rabies Serum (ARS கொடுக்கலாம்.

நாய் கடித்தவர்களுக்கு ஏற்புத் தடை ஊசி கொடுப்பதும் உகந்தது. ஏனெனில் நாயின் வாயில் ஏற்புக் கிருமிகளும் அதிகமாகக் காணப்படுகின்றது.

மிருகங்களோடு கூடுதலாகப் பழகுபவர்கள் HDCSV தடை ஊசியை இரண்டு முறை போட்டு, பிறகு வருடா வருடம் ஒவ்வோர் தடுப்பூசி போட்டு வந்தால் விசர் நாய் கடித்தாலும் நோய் வராது. ஆனால் ஓர் ஊசியின் விலை ஏறக்குறைய 600 ரூபாவாக இருக்கின்றது.

### நோய்த்தடை:

விசர் நாய்க்கடி நோய் ஏற்பட்டால் அதற்கு மருந்து கிடையாது. இந்நோய் ஏற்பட்டு உலகத்தில் யாரும் உயிர் தப்பியதில்லை. ஆகவே இந்நோய் வராது தடுத்தல் மிக மிக அவசியம். நோய் பரவாது தடுப்பதற்குக் கீழ்க் கண்ட முறைகளைக் கையாள வேண்டும்.

1. வீடுகளில் வளர்க்கும் சகல நாய்களுக்கும் தடுப்பூசி போடுதல் வேண்டும். இது தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளிலும் இலவசமாக நாய்களுக்கான தடை ஊசி போடப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீடுகளில் வளர்க்கும் சகல நாய்களுக்கும் தடை ஊசிகள் போடப்படல் வேண்டும்.

2. தடை ஊசி போட முடியாத, உரிமையாளர்கள் இல்லாத சகல நாய்களும் அழிக்கப்படல் வேண்டும்.

3. நாய் கடித்தால், சிறு கீறலாக இருந்தாலும் கூட மேற்குறிப்பிட்ட முதலுதவி முறைகளைக் கையாள வேண்டும். ★

---

# பழி சொல்வோரை புன்னகையால் கொல்வோம்!

எல்லாக் கவலைகளையும், வேதனைகளையும், புதைத்து விட்டு மெல்லிய புன்னகையுடன் சதா வளைய வரும் மனைவி; சிடுசிடுப்பும் கோபமும் இன்றி சிரித்த முகத்துடன் குழந்தைகளைப் பராமரிக்கும் தாய்! சந்தோஷப் பூக்களைப் புன்னகையாக முகத்தில் மலரவிட்டுத் திரியும் மகள்; இவர்கள் எல்லோரும் பெண் இனத்தின் பெருமைக்குரியவர்கள்.

மனதின் கபடின்மையையும், வெள்ளைமனதையும், எண்ணங்களின் தூய்மையையும் காட்டுவதே சிரிப்பு! அதே சமயம், காதலைக் காட்டுவதும் காமத்தை ஊட்டுவதும் இந்தச் சிரிப்பே! இதனால் தானோ பெண்களின் சிரிப்பைச் சிலர் தரக்குறைவாக எடை போடுகின்றனர். அதெல்லாம் அவரவர் செயல்களையும், எடுக்கும் விதத்தையும் பொறுத்தது.

ஓர் நல்ல பெண்ணின் கருணைச் சிரிப்புக்கும், தெய்வீகச் சிரிப்புக்கும் மேலானது என்ன தான் வேறு இருக்க முடியும்?

பெண்கள் நகை கேட்டால் ''எதற்கு உனக்குப் பொன்னகை? புன்னகை ஒன்றே போதாதா...'' என்று கூறுபவர்களும், பெண்களின் சிரிப்பையும், புன்னகையையும் பல வித உவமை, உவமானங்களுடன் அழகு தமிழில் கவி வர்ணிப்புகள் செய்பவர்களும்... எதற்கு வார்த்தைக்கு வார்த்தை வரிக்கு வரி பெண்கள் புன்னகையைப்பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டும்? பிறகு ஏன் மேற்கூறிய பழமொழியைக் கூறிப் பழிக்கவேண்டும்?

சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் பெண்களை மந்தமாக்க - தம் வசம் வைத்திருக்கும் இந்த வெட்டித்தனமான வார்த்தைகளுக்குப் பெண்கள் மசியக்கூடாது!

சிரிப்பு முகத்திற்கு அழகையும் - உடலுக்கு சக்தியையும் மனதிற்கு மகிழ்வையும் அளிக்கின்றது. சிரிப்பே நோய்க்குச் சிறந்த மருந்து. புன்னகையில் இந்த உலகை வெல்லலாம்—பகைவரை அடிபணியவைக்கலாம். 'One smile earns Thousand Smiles' ...என்பது ஆங்கிலப் பழமொழி புன்னகைப்பதால் எவ்வித கஷ்டமோ -நஷ்டமோ இல்லை.

இன்றைய முன்னணிப் பெண்களின் வெற்றிக்கு மூலதனமே இந்த அன்பான புன்னகையே... மற்றவர்கள் நம்மைப் பார்த்து... ஒரே அழுமூஞ்சி முகம், அழுது வடிகின்ற தோற்றம்... ஒரே சிடுசிடுப்பு...''என்று சொல்வதைவிட என்ன மலர்ந்த முகம். சிரித்த செந்தளிப்பான தோற்றம்'' என்று போற்றுவதே நம்முன்னேற்றத்துக்கும் வாழ்வுக்கும் உறுதுணை.

துன்பங்கள் நிறைந்த உலகம் என்றாலும் சிரிப்பாலே யாவும் வென்று நிற்போம்! சிரிப்பை மட்டும் சிந்தி நிற்காமல் சிந்திக்கும் திறன் பெற்றுச்சிரித்து நிற்போம்! எம்மைச் சிரிக்காதே என்று சொல்ல எவர்க்கும் உரிமையில்லை. புன்னகை புரியாதே என்று சொல்லத் தடையும் இல்லை.

பழி சொல்வோரைப் புன்னகையாலே கொன்றொழிப்போம்! சிரிப்புக்கு மட்டுமே வேற்றுமையில்லை. சிந்தும் புன்னகைக்குத்தான் என்றும் மாற்றமில்லை! பெண்களின் சிறப்புக்கும் - தனித்தன்மைகளுக்கும் இந்தச் சிரிப்பே கை கொடுக்கும்! இன்பத்திலும், துன்பத்திலும் சிரித்திரு மகளே! ★

- ஊரெழு தர்ஷினி

# பெண்ணின் சிரிப்பு தென்றலாக இருக்கட்டும்

மனித குலத்தின் சிறப்புச் சலுகையான சிரிப்பு பெண்ணுக்கு மட்டும் ஏன் அது மறுக்கப்படுகிறது? என்ற தலைப்பில் ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதிய கட்டுரை ஜூலை 27 சஞ்சீவியில் நங்கை பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.



இக்கருத்தை ஒட்டியும் வெட்டியும் வாசகிகள் கருத்துக்களை அனுப்பலாம் என்று கேட்டிருந்தோம்.

வாசகிகள் சிலர் எழுதிய கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.

சிரிப்பு! மனித சமுதாயத்தில் எல்லோருக்குமே பயன்படும் ஓர் அரிய பொக்கிஷம் தான். சிரிப்பதால் மனிதர்களுக்கு அழகும், ஆரோக்கியமும் நீடித்திருக்கும் என்பதும் உண்மைதான். ஆனால் நாலு வீடு கேட்கும்படி பலமாகச் சிரிக்கவேண்டுமா?

அதுவும் பெண்கள் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று தான் வள்ளுவர் சொன்னாரே தவிர அசட்டுச் சிரிப்பு சிரிங்க என்று சொல்லவில்லையே. 'பொம்பிளை சிரிச்சாப்போச்சு! புகையிலை விரிச்சாப் போச்சு!' இது பழமொழி. புகையிலை ஓரறிவுத் தாவரம்; அத்தாவரத்தின் இலைகள் குருத்தாகி, இலையாகி, முற்றி விளைந்தவுடன் பாகம் பண்ணப்படுகிறது. அப்படிப் பாகம்பண்ணிய புகையிலையை, அடிக்கடி தேவையின்றி விரித்தால் அதன் தன்மை, மணம், குணம் கெட்டு விடுகிறது. அதே போலத்தான் பெண்ணும்.

அச்சம், மடம், நாணம். பயிர்ப்பு இவை நான்கும் இணைந்தவர்களாகத்தான் பெண் இருக்கவேண்டும். கண்டகண்ட சினிமாக்களில் வரும் கதாநாயகிகளைப்போல் தங்களையும் கற்பனைபண்ணிக் கொண்டு நடுவீதியிலும் நாலு பேர் கூடியிருக்கும் இடங்களிலும் சத்தம்போட்டுச் சிரிப்பது அநாகரிகமானதும் அவலட்சணமானதும்கூட.

இதில் ஆணையும் பெண்ணையும் ஒப்பிட்டுப்பேசுதல் தவறாகும்.

பட்டங்கள் ஆள்வதிலும் பதவிகள் வகிப்பதிலும் ஆணுடன் சரிநிகர் சமானமாகப் போட்டியிடலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் போட்டியிட முடியுமா?

சிரிப்பும், அழகையும் ஆணுக்குவேறு, பெண்ணிற்கு வேறல்ல... ஆனால் பெண் மென்மையானவள். பூப்போன்றவள். பூவிற்கு உள்ள அழகும் கவர்ச்சியும் மரத்திற்கில்லை. அதேபோல்தான் ஆண் ஆண்மைக்கும், வீரத்திற்கும் உரியவன். வாய்விட்டுச் சிரிக்கலாம், சிரிக்காமலும் இருக்கலாம்.

தென்றலாக வீசும்போது மனதுக்கு இதமூட்டும் காற்று, அது புயலாக மாறும்போது மகிழ்ச்சியைக் கொடுக்கிறதா? அதுபோல், பெண்களின் சிரிப்பும் தென்றலாக வீச வேண்டுமே தவிர புயலாக ஒருநாளும் மாறக்கூடாது.

- ந. மஞ்சுளா

# தென்னம்பாளை பிளந்தது போல
## நலுங்காமல் குலுங்காமல் சிரியுங்கள்

“பெண் சிரித்தால் போச்சு—புகையிலை விரித்தால் போச்சு'' என்ற பழமொழி-எதுகை மோனைக்கு அமைய கூறப்பட்ட அர்த்தமற்ற ஒரு சொற்றொடர் என்று நாம் கருதிவிட முடியாது—

புகையிலையை (ஓர் அளவு முறுகிய புகையிலையை) விரித்தால் என்ன நடக்கும்? தாறுமாறாகக் கிழிந்து - அதன் சிறப்பை இழந்துவிடும் - சில சமயங்களில் உபயோகம் அற்றதாகவும் ஆகிவிடும்.

அதேபோல் தான் பெண்ணும் - பெண்ணின் அதி முக்கிய 'பிளஸ்பொயின்ற்'தான். அவள் சிந்தும் புன்னகையே அதை அனாவசியமாகப் பிரயோகிக்க முற்பட்டால் அதற்குரிய மதிப்பையும் மரியாதையையும் வீண் அடித்துக் கொள்ள நேரிடும்.

பெண்கள் அறவே சிரிக்கக் கூடாது என்று நான் கூறவில்லை. அவர்கள் நிச்சயம் சிரிக்கத்தான் வேண்டும்- ஆனால் எல்லா வேளைகளிலும் அல்ல, இடம், பொருள், ஏவல் அறிந்து உரிய முறையில் பெண்ணிற்குரிய அடக்க, ஒடுக்கத்திற்கு சிறிதளவேனும் பங்கம்விளைவிக்காமல் - சிரிக்க வேண்டும்—

அத்திபூத்தாற்போல் வெகு அரிதாகச் சிரிக்க வேண்டும்—மற்றவர்களைச் சிரிக்க வைத்து நாமும் சிரிக்க வேண்டும்—மேற்கூறிய விதத்தில் சிரிக்கும் பொழுது அச்சிரிப்பு எப்படி இருக்க வேண்டும் என்றால் முத்துப் பற்கள் தெரிய தென்னம்பாளை பிளந்ததுபோல், நலுங்காமல் குலுங்காமல் சிரிக்கவேண்டும்.

இயற்கையைவிட ஆணை உருவ அமைப்பில் ஒரு விதமாகவும் பெண்ணை ஒரு விதமாகவும் (மென்மையாகவும்) சிருஷ்டித்திருக்கிறதே...? அப்படியிருக்க, ஆண்கள் செய்வதெல்லாம் பெண்களும் செய்ய வேண்டும், ஆண்களுக்கு இருக்கும் சுதந்திரம் போல பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்று வாதிப்பது விதண்டாவாதமாகும்.

உதாரணத்துக்கு ஒன்று கேட்கிறேன். ஆண்கள் உஷ்ணம் தாங்காமல் தங்கள் மேலங்கிகள் இல்லாமல் திரிந்தால், ஏன் நாமும் மேலங்கி இல்லாமல் இருக்கக் கூடாது...? என்று பெண்களும் செயலில் இறங்கிவிட்டால் நடப்பது என்னவாகும்...?... கற்பனை செய்து பார்க்கவே பயமாக இருக்கிறதல்லவா...?

- திருமதி றெனி குணசிங்கம்

நங்கை

# அலெக்ஸாண்டரின் வாழ்வில்....




உலகம் போற்றும் பேரரசன் அலெக்சாண்டர் ஒரு முறை வெப்பம் மிகுந்த ஆபிரிக்காக்கண்டத்திற்குச் செல்ல நேரிட்டது.

அவனும் அவனது வீரர்களும் தங்குவதற்கு தக்கதோர் இடமும், பசிக்கு உணவு தேடியும் அங்கும் இங்கும் அலைந்தனர்,

அடர்ந்த நிழல் தரும் ஒரு பெரிய மரமாவது தென்படுமா என்று அல்லலுற்றனர். அப்போது அவர்கள் எதிரில் ஒரு சிவப்பு இந்தியன் விரைந்து வந்தான்.

தன்னைப் பின் தொடர்ந்து வருமாறு அவன் அவர்களைக் கேட்டுக் கொண்டான். பின் தொடர்ந்த அவர்களைத் தன் தலைவனிடம் அழைத்துச் சென்றான்.

அவனது தலைவனும் கூட்டத்தாரும், கறுப்பு நிறமும் அழகற்ற தோற்றமும் பெற்றவர்களாக இருந்தனர்.

அலெக்சாண்டரையும் அவனது வீரர்களையும் அன்போடு வரவேற்றான் அந்தத் தலைவன்.

அண்மையில் ஒரு பெரிய வாழைத்தோட்டம் இருக்கிறது. நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் அங்கு தங்கிக் கொள்ளலாம். என்னுடைய ஆட்கள் உங்களுக்குத் தேவையானவற்றைக் கவனித்துச் செய்வார்கள்' என்று நட்புரிமையோடு கூறினான்.

மறுநாள் சிவப்பிந்தியத் தலைவன் அலெக்சாண்டரைக் கௌரவிக்க, ஒரு பெரும் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான்.

அலெக்சாண்டர் முன் ஒரு தங்கப்பாளம் வைக்கப்பட்டது. அதில் இடம்பெற்ற பழங்களும் தங்கத்தால் ஆனவையே...!

'மாபெரும் வீரரே அருந்துங்கள்'

அலெக்சாண்டருக்குத் தங்கத்தினால் ஆன பழங்களை எப்படி அருந்துவது என்று மலைப்பு. மெதுவா,

'நீங்கள் இங்கு தங்கப் பழங்கள்தான் உண்பீர்களா...?'

வியப்பை அடைந்தவனாகக் கேட்டான்.

'இல்லை இல்லை நாங்கள் புத்தம் புதிதாகப் பறித்த பழங்கள் தான் சாப்பிடுவோம், அது மட்டுமல்ல பால், தேன், மாவு, தானியங்கள் எல்லாமே புதிதாக விளைந்தனவற்றைத் தான் அருந்துவோம், ஆனால் தாங்கள் ஒரு மாபெரும் வெற்றி வீரர், தங்கள் கருத்தெல்லாம் பொன் சேகரிப்பதிலேயே உள்ளது. அதனால் தங்களுக்குப் பொன்னாலான பழங்களையே அருந்தத் தந்தோம்' என்றான் அந்த சிவப்பிந்தியத் தலைவன். அவனது பேச்சில் எத்துணை ஆழமான கருத்துப் பொதிந்துள்ளது என்பதை அறிந்து வியந்தான் அலெக்சாண்டர். அதனால் பணிவோடு,

'ஐயா...! நான் இங்கு பொன் சேகரிக்க வரவில்லை. ஆபிரிக்க மக்களிடம் பழகி அவர்கள் பழக்கவழக்கங்களை, நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளவும்தான் நான் வந்துள்ளேன்'—

என்று கூறினான் அலெக்சாண்டர். ஓ...! அப்படியா தாங்கள் அச்சமற்று இங்கு தங்கலாம். உங்களை எங்கள் விருந்தினராகப் பெற நாங்கள் மிகவும் மகிழ்கிறோம்' என மகிழ்ந்துரைத்தான் ஆபிரிக்கத் தலைவன். ★

## போலிகள்

தூர நின்று
பார்த்த போது
கோட்டும் சூட்டும்
போட்டு உலவும்
பெரிய மனிதன்
நெருங்கி வந்து
பார்த்த போது
இரவும் பகலும்
நின்ற படியே
தோட்டம் காக்கும்
பொம்மை மனிதன்.

—நுணாவில் நாகராஜா

## ட்யூப்லைட் சிரிப்பு வேண்டாமே!

இடம், பொருள், காலம் அறிந்து ஒரு பெண் சிரிக்க வேண்டும்.

நான்கு பேர் மத்தியிலோ, சபையிலோ தம்மை மறந்து கல கல என்று பெண்கள் அட்டகாசமாகச் சிரிக்கக் கூடாது.

குடும்பத்தின் குத்துவிளக்காகத் திகழ்வது பெண். இல்லறம் சிறப்பது அவளின் புன்னகையால்.

சிரிக்கும் போது புன்னகை மலர வேண்டுமே. தவிர 'டியூப்லைட்'போட்டமாதிரி சிரிக்ககூடாது.

நாம் அளவாகச் சிரித்து வாழ வேண்டுமே தவிர, பிறர் சிரிக்க வாழக் கூடாது.

—செல்வி சற்குணவதி சண்முகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சினிமா - வெள்ளிவிழா ஆண்டு

முதன்முதலாக சினிமா என்கிற அபூர்வக் கலை எப்போது இந்தியாவிற்கு வந்தது?

இந்தக் கேள்விக்கு சரியான பதில் கூறுவது கடினம்.

1907 ஆம் ஆண்டு ஜே. எம். மதன் என்பவர்தான் முதன் முறையாக சினிமாவை இந்தியாவுக்குக் கொண்டு வந்தார் என்பது சிலரது கூற்று.

சிலர் 1908 இல் தான் சினிமா இந்தியாவுக்கு வந்தது என்கிறார்கள். பம்பாய் ஆல்பிரட் டிராமாட்டிக் கம்பெனிக் கொட்டகையில் காட்டப்பட்ட 'WEDDING NIGHT' (கல்யாண இரவு) படம்தான் அது என்கிறார்கள்.

என்றாலும் 1896 ஆம் ஆண்டே அமெரிக்காவில் தயாரான ஊமைப் படங்கள் பம்பாயில் உள்ள வாட்சன்ஸ் உணவு விடுதியில் காட்டப்பட்டதாக அ. ம. சாமி தனது 'தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சினிமா எழுத்தாளரான காலம்சென்ற 'குண்டூசி' பி. ஆர். எஸ். கோபால் எழுதிய கட்டுரையில் '1908-1909 ஆம் ஆண்டுகளில் பம்பாய் எஸ்ப்ளனேட் மைதானத்தில் கூடாரங்கள் அமைத்து மேல்நாட்டு மௌனப் படங்களை வரவழைத்துக் காட்டத் தொடங்கினார்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த முறையில் அமைக்கப்பட்ட முதல் கொட்டகைகள் எச்சல்சியர் பாரிஸ் இந்தியா' போனிக்ஸ் இவைதான் என்றும் குறிப்பிடுகிறார்.

பிறகு சினிமா காட்டுவதற்கென முதன்முதலாக அமெரிக்கன் இந்தியா என்கிற தியேட்டர் கட்டப்பட்டது. இதையே 'பயாஸ் கோப்' எனவும் அழைத்தனர். இதற்கு 'கினட்டோஸ்கோப்' என்கிற மற்றொரு பெயரும் வழங்கலாயிற்று. இந்தக் கருவியைக் கண்டுபிடித்தவர் எடிசன்.

பேதி, யு. எப். ஏ. இத்தகைய படங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. எட்டி போலா போன்ற பெயர்கள் சினிமா ரசிகர்களை ஈர்த்ததாகவும் 'குண்டூசி' தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

### முதல் படம்

இந்தியாவைச் சேர்ந்த டி. ஜி. பால்கே... இத்தொழில் நுட்பங்களைக் கண்டறிய இங்கிலாந்து சென்று வந்தார். திரும்பியதும் நாசிக்கில் இந்துஸ்தான் பிலிம் கம்பெனியைத் துவக்கி 1913 இல் முதன்முதலாக 'ராஜா ஹரிச்சந்திரா' என்கிற மௌனப் படத்தைத் தயாரித்தார். இந்தியாவில் தயாரான முதல் ஊமைப்படம் இதுதான். இப்படம் வெளியான மாதம் மே. திகதி மூன்று.

பம்பாய் கார்னேஷன் டாக்கீஸில் இப்படம் வெளிவந்து பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. பலரும் படித்த புராணக்கதை என்பதால் ஜனங்கள் இப் படத்தை வெகுவாக ரசித்துப் பார்த்தார்கள்.

அதன் பிறகு ஏராளமான பேர் படங்களைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள். படப்பிடிப்புக்குப் பிரமாதமான சாதனங்களைத் தேடி அலையாமல் பங்களா சுவர்களையும் சூரிய வெளிச்சங்களையும் நம்பியே படமெடுத்தனர். விலை மலிவான காமிராக்கள் பயன்படுத்தப்பட்டன. செட் இல்லாமல் வெறும் துணிகளுக்கு

**வெள்ளித் திரையில்!**

வர்ணம் பூசிப் படுதா கட்டிப் படம் எடுத்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாகப் புராணப்படங்களுக்கு இருந்த செல்வாக்குக் குறைய ஆரம்பிக்க வீரம் நிறைந்த ராஜாக் கதைகளைப் படமாக்கத் தொடங்கினர். பிறகு துப்பறியும் கதைகளைப் படமாக்கத் தொடங்கினர்.

மௌனப்படக் காலங்களில் நடிகை மிஸ் சுலோசனா புகழ் பெற்று விளங்கினார். 'டெலிபோன் கேர்ல்ஸ்', 'பம்பாய் காட்டுப் பூனை' போன்ற படங்களில் இவர் நடித்தார்.

இயற்கை வெளிச்சத்தையே நம்பி வந்த தயாரிப்பாளர்கள் செயற்கை வெளிச்சத்தில், செயற்கை அரங்குகளில் படங்களைத் தயாரிக்க முயன்றது 1920 இல் தான்.

1925 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் மௌனப்படம் 'ஆசியாவின் ஜோதி' மேல்நாட்டில் காட்டப்பட்டது. புத்தரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இப்படம் லாகூர் கிரேட் ஈஸ்டர்ன் பிலிம் கார்ப்பரேஷனும் மெல்கோ என்கிற ஜெர்மனி பிலிம் கம்பெனியும் இணைந்து தயாரித்த படமாகும். இதைத் தொடர்ந்து 'மொகலாய அரசனின் காதல்' என்கிற மௌனப்படம் இங்கிலாந்தில் காட்டப்பட்டது. ஜஹாங்கீர், அனார்கலி போன்றவர்களின் காதலை விளக்கும் படம் இது.

பம்பாயைத் தொடர்ந்து 1919 இல் வங்காளமும் படங்களைத் தயாரிக்கத் தொடங்கியது. மதன் தியேட்டர்ஸ் தயாரித்த 'நளதமயந்தி' வெற்றிப்படமாகத் திகழ்ந்தது. இப்படத்தில் ஒரு இத்தாலியப் பெண் கதாநாயகியாக நடித்தார்.

சுலோசனா, மதுரி, சபிதா தேவி போன்ற ஆங்கிலோ இந்தியப் பெண்கள் இக்காலத்தில் சிறந்த நடிகைகளாகக் கருதப்பட்டனர்.

### சென்னையில் ஊமைப்படம்

படித்த வங்காளிகளான கவி தாகூர், சரத்சந்திர சட்டர்ஜி, பண்டித சுதர்சன் போன்ற பிரபல எழுத்தாளர்களின் கதைகளை எல்லாம் சோலாப்பூரில் பிரசாத் பிலிம் கம்பெனி, வங்காளத்தில் நியூ தியேட்டர்ஸ், ஈஸ்ட் இந்தியா போன்ற ஸ்டூடியோக்கள் ஸ்தாபிக்கப்பட்டு சிறந்த கதைகளை, உயர்ந்த முறையில் படமாக்கத் துவங்கினர்.

இத்தொழிலுக்கு சென்னையில் அஸ்திவாரமிட்டவர் நடராஜ முதலியாராவார். 1916 இல் இவர் 'கீசகவதம்' என்கிற ஊமைப் படத்தைத் தயாரித்தார்.

இவருக்குப் பிறகு இத்தொழிலில் பிரவேசித்தவர் ஆர். வெங்கய்யா. அன்றைக்கு கெயிட்டி, கிரௌன், குளோப் ஆகிய மூன்று தியேட்டர்களை நடத்தி வந்தார்.

பிறகு இவருடைய பிள்ளையான டைரக்டர் ஆர். பிரகாஷ், ஸ்டார் ஆஃப் ஈஸ்ட் பிலிம்ஸ் என்கிற கம்பெனியை நிறுவினார். தற்போதுள்ள கிரௌன் ஸ்டூடியோவுக்குப் பின்புறம் ஒரு சிறிய ஸ்டூடியோவை நிறுவி 'கஜேந்திர மோக்ஷம்', 'நந்தனார்' போன்ற படங்களைத் தயாரித்தார்.

பலரால் பிறகு 'மச்சாவதாரம்', 'ராமதாஸ்' கே. டி. ருக்மணி நடித்த 'விப்ர நாராயணா' போன்ற படங்கள் தயாராகின.

வெளிநாடு சென்று திரும்பிய டைரக்டர் ஏ. நாராயணன் ஜெனரல் பிலிம் கார்ப்பரேஷன் என்கிற கம்பெனியை நிறுவினார். இவரது ஸ்டூடியோ திருவொற்றியூர் ஹைரோட்டில் செல்லப்பள்ளி பங்களாவில் இருந்தது. இங்குதான் நிறைய ஊமைப்படங்கள் தயாராயின. இந்த ஸ்டூடியோவில்தான் இன்றைய லட்சுமியின் அப்பா வை. வி. ராவ், பி. வி. ராவ், ராஜா சந்திரசேகர், ஆர். பிரகாஷ், ஜித்தன்பானர்ஜி, டி. பி. ராஜலட்சுமி ஆகியோர் உருவானார்கள்.

தர்மபத்தினி, ஞானசௌந்தரி, கோவலன், கருடகர்வ பங்கம் போன்ற 18 படங்கள் இங்கு தயாராயின. அப்போ

### சினிமாவினால் நாடகக்கலை பாதிப்பு

கே. வெங்கட்ராமையாவின் பல படங்களை பி. கே. ராஜா சாண்டோவும் கே. சுப்பிரமணியமும் இயக்க டி. பி. ராஜலட்சுமி, பாட்லிங்மணி, லீலா, பி. வி. ராவ், கே. டி. ருக்மணி முதலானோர் நடித்தனர். 'பேயும் பெண்மணியும்' போன்ற தலைப்புள்ள படங்களை இக்கம்பெனி தயாரித்தது.

எச். ஆர். தேசாய் பெங்களூரில் சூர்யா பிலிம் கம்பெனியைத் துவக்கி 'ராஜனின் இருதயம்' 'கிஷோல', ராதேஷ் யாம், 'ராஜாதிராஜ ஹோப்லா' என்கிற கரடு முரடான பெயர்களில் படங்களைத் தயாரித்தனர்.

1920 முதல் 1929 வரை படத் தயாரிப்பாளர்கள் மிகுந்த லாபம் அடைந்தனர். இந்தக் காலத்தில் தான் சினிமா வரவால் நாடகத் தொழில் நசுங்கத் தொடங்கியது. பொழுது போக்குச் சாதனங்களில் சினிமா முன் நின்றது.

ஒரு சோதனையும் கூடவே எழுந்தது. மனிதர்கள் நகருவதையும், அவர்களது செய்கைகளையும் புரிந்து கொண்ட மக்களுக்குக் கதையை முழுமையாகப் புரிந்து கொள்ளும் ஆர்வம் எழுந்தது.

அதற்காகக் காட்சி திரையில் ஓடும்போது சம்பவங்களை எழுத்துக்கள் மூலம் எழுதி விளக்க ஆரம்பித்தனர். இதைப் படித்தவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் படிக்காதவர்களும் புரிந்து கொள்ள வேறொரு முறையைப் பின்பற்றலாயினர். அது—

படம் திரையில் ஓட ஓடப் பக்கவாட்டில் ஒருவர் நின்று கொண்டு கதைப் போக்கை

**சென்னையிலிருந்து தி. மேனகன்**

உரத்த குரலில் சொல்லிக் கொண்டே வருவார். பாமர மக்களுக்கு இந்த முறை தேவைப்பட்டாலும் படித்தவர்களுக்கு இம்முறை இடையூறாகவே இருந்தது: இந்த நிலையில்தான் பேசும்படம் தேவைப்பட்டது.

அந்த முயற்சியில் வெற்றி கண்டவர்கள் தான் பம்பாய் இம்பீரியல் பிலிம் கம்பெனியார். 1931 ம் வருஷம் மார்ச் மாதம் 14 ஆம் திகதி பம்பாய் மெஜஸ்டிக சினிமாவில் ''ஆலம் ஆரா'' என்கிற இந்திப் பேசும்படத்தைப் போட்டுக் காட்டினர். இப்படத்தில் விட்டல், சுபேதா, எல். வி. பிரசாத் ஆகியோர் நடித்தனர். தொடர்ந்து லைலா மஜ்னு, ஷிலன் பர்ஹாத் போன்ற படங்கள் தயாராகி மௌனப்பட சகாப்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தன.

பேசும்பட வளர்ச்சிக்கு முதல் வித்திட்ட படம் இது. அதே வளர்ச்சி பேசாத படமான 'பேசும் படம்' வெளிவந்த இந்தக் காலம் வரை தொடர்ந்து 'பவள விழா' கொண்டாடும் நிலையில் சினிமாவை வளர்த்துள்ளது.

மௌனப் படக்கால தயாரிப்பாளர்களுக்கும் அன்றைய ரசிகர்களுக்கும் இன்றைய தயாரிப்பாளர்களும், நட்சத்திரங்களும், ரசிகர்களும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களன்றோ? ★

இந்திய சினிமா வெள்ளிவிழா கொண்டாடுகிறது. ஆண்டு தோறும் எண்ணூற்றுக்கும் அதிகமான படங்கள் 23 மொழிகளில் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

சினிமாப்படத் தயாரிப்பில் உலகில் முதலாவது இடத்தை இந்தியா பெற்றுள்ளது.

இரண்டாவது இடம் ஜப்பானுக்கும் மூன்றாவது இடம் அமெரிக்காவுக்கும் கிடைத்துள்ளது.

ஜப்பான் 350 படங்களையும் அமெரிக்கா 250 படங்களையும் ஆண்டுதோறும் தயாரிக்கிறது.

இந்தியாவில் தினமும் 75 லட்சம் பேர் சராசரியாகப் படம் பார்க்கிறார்கள். 12 ஆயிரத்துக்கு அதிகமான படமாளிகைகள் உள்ளன. 30 லட்சத்துக்கு அதிகமானோருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் சினிமாப்படத் தயாரிப்பில் பம்பாய் முதலிடம் வகிக்கிறது. இரண்டாவது இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

இதுபற்றியகண்ணோட்டம் இங்கு பிரசுரமாகின்றது.

### துணுக்கு

மார்க்கெட் இல்லாது இருந்த பல நடிகைகளுக்கு மறுவாழ்வு கிடைத்துருகிறது.

'செந்தூரப்பூவே' யில் ஸ்ரீபிரியாவும் பூந்தோட்டக் காவல்காரன் மூலம் வாணி விஸ்வநாத்தும் வாழ்வு பெற்றார்கள்.

இப்போது பிரபு படம் மூலம் ரேவதியும், 'கொடி பறக்குது'. மூலம் சுஜாதாவும் மீண்டும் தலை எடுத்திருக்கிறார்கள்.

★ ★ ★

சத்யராஜ், படத்துக்கு 12 லட்சம் ரூபா (இந்தியப்பணத்தில்) வாங்குவதாக பம்பாய்ப் பத்திரிகைச் செய்தி ஒன்று வெளியிட்டது.

இச் செய்தி கேட்டு ராமராஜன் மிரண்டு போனாராம்.

இவருக்குப் போய் 12 லட்சமா? என்று ஏளனமாகக் கூறினாராம்.

''சத்யராஜ் சிறந்த நடிகராயிற்றே, அவருக்கு 12 என்ன அதை விடக் கூட கொடுக்கலாமே''– என்று விவரம் தெரிந்த ஸ்டூடியோ ஊழியர் ஒருவர் சொன்ன போது ராமராஜன் நழுவிவிட்டார்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி நூல் வரிசை

"நண்பர்களே......

'இது ஒரு இனப்பிரச்சினை. இந்நாட்டின் இரு தேசிய இனங்களுக்கு இடையிலான பிரச்சினை. இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய தேவை முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இன்று எழுந்துள்ளது. ஒரு தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும். விடை பெறுகிறேம்'—

லங்காராணியின் முதல அத்தியாயம் இப்படித்தான் ஆரம்பிக்கிறது.

குமார் என்ற பாத்திரத்தின் கூற்றுக மேற்குறித்த கூற்று அமைந்துள்ளது. தமிழ் இனத்தின் ஒருமித்த எண்ணமாகவும் வெளிப்பட்ட இந்தச் சுயப்பிரக்ஞையின் வெளிப்பாடுதான் 'லங்காராணி'

ஈழத் தமிழர்களின் சுயப் பிரக்ஞை ஒரு புதிய கட்டத்தை லங்காராணியின் காங்கேசன்துறை நோக்கிய பயணம் சுட்டிநிற்கிறது. இந்தச் சுயபிரக்ஞையின் அரசியல் வெளிப்பாடுதான் ஈழ விடுதலைப் போராட்டமாக வெடித்தது.

'லங்காராணி' ஒரு வரலாற்று நாவல். அது சமகால வரலாற்றைப் பொருளாகக் கொண்டது.

இந்திய விடுதலைப் போராட்டம் எரிமலையாக வெடித்த போது சமகால அரசியல் வரலாற்றைப் பொருளாகக் கொண்ட பல நாவல்கள் எழுந்தன.

வங்காள மொழியின் முன்னேடி நாவல்களில் ஒன்றுன 'ஆனந்தமடம்' இத்தகைய ஒன்றே. இது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. 'வந்தே மாதரம்' என்ற விடுதலைக் கோஷத்தை இந்திய தேசியவாதிகள் இந்த நாவலில் இருந்துதான் பெற்றனர்.

எமது நாடு என்ற தாயை வணங்குவோம் என்ற பொருளையுடைய இக்கூற்றை பாரதியும் தமது பாடலில் 'வந்தேமாதரம் என்போம். எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்' என்று பாடியுள்ளார்.

கே. ஏ. அப்பாஸ் எழுதிய 'இன்குலாப்' என்ற நாவலும் சமகால அரசியல் வரலாற்று நிகழ்வுகளை மையமாக வைத்துப் பின்னப்பட்ட அரசியல் நாவலாகும். இதுவும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த ஆரோக்கியமான இலக்கிய நெறியைச் சார்ந்த முன்னேடி நாவல் தான் 'லங்காராணி' பின்வந்த கலை இலக்கிய முயற்சிகளுக்கு இது வழிகாட்டியாக அமைந்தது.

லங்காராணியில் வழமையான கதை என்று ஒன்றும் கிடையாது, நாவலை வாசித்த பின் இதன் கதைச்சுருக்கத்தை எழுதுதல் சற்று கடினமான தொன்றுகவே இருக்கும். ஒரு கதாபாத்திரத்தை வைத்துப் பின்னப்பட்ட கதையல்ல, லங்காராணி.

லங்காராணி என்ற கப்பலில் சுமார் ஆயிரத்தி இருநூறு அகதிகள் அடைக்கலம் புகுகின்றனர். கொழும்பில் இருந்து தென்பகுதி ஊடாகவும் பின்னர் கிழக்குக் கடல் ஊடாகவும் அதன் அறுநூறு மைல் பிரயாணம் தொடர்கிறது. குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள், பெண்கள், நோயாளிகள் எனப் பல தரப்பட்டவர்களால் கப்பல் நிரம்பிவழிகிறது. எல்லோர் முகத்திலும் களைப்பு, பசி, சோகம்; சரவணன், குமார், டாக்டர் நற்குணம், ராணி, இப்படிச் சில கதாபாத்திரங்களின் செயல்கள், பேச்சுக்கள், நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு கதையை இயக்கிச் செல்கிருர் ஆசிரியர்.

அகதிக்கப்பல் 'லங்காராணி' நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ்ச் சமூகத்தின்

> நூல் : லங்காராணி
> ஆக்கம்: அருளர்
> கிடைக்குமிடம்: 89, கோவில் வீதி,
> நல்லூர், யாழ்ப்பாணம்
> விலை: ரூபா 20/-
> விமர்சனம் : இந்திரஜித்

உருவகம் லங்காராணியின் பயணத்தின் முடிவுடன் கதை முடிகிறது.

தமிழ்ச் சமூகத்தின் அரை நூற்றுண்டு வரலாற்றை இந்தப் பயணத்தோடு பிணைத்துச் சொல்லிவிடுகிருர் ஆசிரியர்.

அவலம் நிறைந்த இந்த வரலாறு நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆனல், அலுப்புத்தட்டாமல் விறுவிறுப்பாக ஆற்றெழுக்குப் போல் கதை செல்கிறது. நமது சமூகத்தை நாம் வாழ்ந்த வாழ்க்கையை எமக்குப் புறத்தே நிறுத்தி எம்மைப் பார்க்க வைக்கிருர் ஆசிரியர். குறிப்பாக 70 களின் முதல் ஏழு ஆண்டுகளின் அரசியல் சமூக வாழ்க்கை எம் முன் நிறுத்தப்படுகிறது. அது நாம் வாழ்ந்த வாழ்க்கை தான். அதன் சோகத்தை அவலத்தை, அருவருப்பை நாம் தரிசிக்கிறேம். ஒரு பிறத்தியான் வெளியில் நின்று பார்ப்பது போல் பார்க்கும் இந்தத் தரிசனம் ஒரு புதிய அனுபவம் தான். நாம் நின்று நிதானித்து இந்த அவலத்தை முன்னர் தரிசித்ததில்லை.

நாவலின் முக்கிய சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நாம் ஒவ்வொருவரும் ஏதோ வகையில் சந்தித்தவர்கள் தாம். அப்போதெல்லாம் இச்சம்பவங்களுக்கு நாம் எப்படித் துலங்கல் செய்தோம்? பல சம்பவங்கள் தனிப்பட்ட ஒவ்வொருவரையும் பாதித்திருக்கும். சில உலுப்பியிருக்கும். இந்தத் தற்காலிக பாதிப்புக்கள், உலுப்பல்களில் இருந்து எம்மை விடுவித்துக் கொண்டு எமது பாட்டைப் பார்ப்போம் என்ற மனேபாவத்தோடு அநேகமானேர் சம்பவங்களின் கோரப்பிடிகளில் இருந்து தப்பி ஓடினேம் எம்மைவிட்டால் போதும் என்று ஓடினேம் ஆனல் எம்மால் தப்பிக்கொள்ள முடிந்ததா?

எம்மவன் ஒருவன்......... தம்பி, மகன், மருமகன் இப்படி எவனே ஒருவன் இந்தக் கோரச் சம்பவங்களுக்குள் அகப்படவே நேர்ந்தது. அப்போது நாமும் அழுதோம் அரற்றினேம். மற்றும் வேலைகளில் கும்பலுக்கிடையே ஒருவராக நின்று 'என்ன நடந்தது......? என்ன விடயம்? என்று விசாரித்துவிட்டு ஓடினேம். இந்தத் துயர்மிகு சம்வங்கள் யாவற்றையும் எமக்குப் புறத்தே வைத்து ஒரு படம்போல் காட்டுகிறது 'லங்காராணி'.

ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டிய நாவல் இது. இலக்கிய கர்த்தாக்களும் கலைஞர்களும் தமது ஆதர்சமாகவும் வழிகாட்டியாகவும் கொள்ள வேண்டிய படைப்பு.

இதை ஒரு அற்புதமான கலைப்படைப்பு என்று நான் சொல்ல வரவில்லை. லங்காராணியில் கலாரீதியான குறைபாடுகள் பல உள்ளன.

ஒரு கலைஞன் என்ன சொல்கிருன் என்பதல்ல முக்கியம். எப்படிச் சொல்கிருன்? என்பதே முக்கியம். சுத்த கலைவாதிகளின் தரக்கோல் இதுவே. ஆனல் இத்தகைய தர அளவீடு ஒன்றை உதாசீனம் செய்து மன்றென்றிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் இலக்கியத்தின் நோக்கமே பாழாகிறது.

கலைஞன் என்ன சொல்கிருன்? எமது எழுத்தாளர்களின் பார்வை எப்பக்கம் செல்ல வேண்டும்? அவர்கள் எமது சமூகத்தின் மனச்சாட்சியாகச் செயற்படும் அடிப்படையான கடப்பாட்டிற்கு விசுவாசம் உடையவர்களாக இருக்கிருர்களா? இத்தகைய சிந்தனைகளை அருளரின் 'லங்காராணி' தூண்டிவிடுமாயின் அது ஈழத்தமிழ் இலக்கிய உலகில் நிலையான ஒரு பங்களிப்பைச் செய்துவிடும் என்று கூறலாம். ★

# கண்ணனுக்குப் பிடித்த பக்தனுக மாற என்ன செய்யவேண்டும்?

"அறம் அழிந்து பெய் மறம் மேலெழுகிற போதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்"

"நல்லவரைக் காப்பதற்கும், கெட்டவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்."

பகவத்கீதை வாயிலாக அவதாரங்களின் நோக்கம் பற்றி முன் கண்டவாறு கூறும் கண்ணன்; எத்தகையவன் கடவுளுக்குப் பிரியமான பக்தனுகிறுன் என்பதைப் "பக்தி யோகம்" என்ற 12 ஆம் அத்தியாயத்தில் மிக அழகாக உபதேசித்திருக்கிருர்.

— எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக வெறுப்பின்றி, நட்பும் கருணையும் உடையவனுய், இன்பதுன்பங்களைச் சமமாகக் கருதிப் பொறுமை படைத்து, எப்போதும் சந்தோஷமாக இருப்பவன், அகங்காரம், மமகாரம் அற்று யோகியாய், தன்னடக்கம் உடையவனுய், திடநிச்சயம் உள்ளவனுய் என்னிடத்தில் (இறைவனிடத்தில்) மனப்புத்தியை சமர்ப்பித்தவனுய் யார் என் பக்தனுகிருனே அவன் எனக்குப் பிரியமானவன்.



இன்று
கிருஷ்ண ஜெயந்தி

—மமகாரம் என்றுல் பிறரிடத்தில் கருணை காட்டுவதால் தன் பொருள்களுக்கே நஷ்டம் வருவதைப் பொருட்படுத்தாத நிலை மமகாரம்.

உடல் அபிமானம் அகங்காரம் ஆகும்.

— யார் இடத்தில் இருந்து உலகுக்கு இடர் (துன்பம்) இல்லையோ, யார் உலகத்தினின்று இடர்படுவதில்லையோ, யார் களிப்பு, கோபம், அச்சம், கலக்கம் இவைகளினின்று விடுபட்டவனே அவன் எனக்குப் பிரியமானவன்.

— இந்திரியங்களின் வாயிலாக வரும் இன்பங்களில் ஆசையற்றவன் தூயவனுகின்றுன். மனம், மொழி, மெய் மூன்றும் மாசற்று இருப்பதால் செயலில் சாமர்த்தியம் உண்டாகிறது.

— தூயவனுய் திறமையுடையவனுய், ஒரு பக்கம் சாராதவனுய், நடுநிலை நின்று நேர்மையாக நடப்பதால் துன்பம் உண்டாவதில்லை, அவனுக்குக் கவலையும் கிடையாது.

— துயரமற்றவனுய், காமிய கர்மங்களைத் துறந்தவனுய் என்னிடத்தில் பக்தி பண்ணுகிறவன் எனக்கினியவன் ஆகிருன்.

— மகிழ்தலும் வெறுத்தலும், துன்புறுதலும் அவாவுறுதலும்; இன்றி நன்மை தீமைகளைத் துறந்த பக்தனே எனக்குப் பிரியமானவன் ஆகிருன்.

— எல்லோரும் இறைவனின் குழந்தைகள். இறைவனின் வடிவங்களைப் பகையென்றும், நட்பென்றும் பிரிப்பது பொருந்தாது.

— பகையையும், நட்பையும், மானத்தையும், அவமானத்தையும், குளிர் வெப்பம், இன்பதுன்பம், இகழ்ச்சி புகழ்ச்சி, இவைகளைச் சமமாகக் கருதிய பகற்றமற்ற மௌனி கிடைத்ததில் திருப்தி அடைபவன், இருக்க இடம் தேடாதவன், உறுதியான உள்ளம் உடையவன் பக்திமான். அத்தகைய மனிதன் எனக்குப் பிரியமானவன்.

— எல்லாவித சாதனைகளுக்கும் சிரத்தை, முயற்சி இன்றியமையாதது. ஆதலால் பக்தியோடு அமிர்தம் போன்ற இந்தத் தர்மத்தை உறுதியாக கண்டுரைத்தபடி யார் கடைப்பிடிக்கிருர்களோ அவர்களே எனக்கும் மிகவும் பிரியமானவர்கள்.

— இவ்வாறு கண்ணன் கூறும் வழி நடப்பதன் மூலம் நாமும் இறைவனுக்குப் பிடித்த பக்தனுக மாற முயற்சிப்போமாக. ★

— சாயிப்ரியா


# இன்முகம் தோன்றட்டுமே!

1. அன்பனே ஆசித்திடு - எம்மை
அதுவும்நற் கருணைகொண்டு
ஆண்டவா எம்மவரை - கீழே
ஆழ்ந்துநீ பார்க்கும்போது
இன்பத்தின் கிற்றுக்களாய் - உனது
இன்முகம் தோன்றட்டுமே
2 ஈண்டிங்கு உலகமதைக் - காக்கும்
ஈசா! உன் வல்லமையை
உலகுக்கு நித்தியமாய் - உன்னல்
உருவான திட்டங்களை
ஊர்வலச் சேதியாக - உலகில்
ஊர்ந்திடச் செய்திடுவாய்
3. எல்லோரும் போற்றி செய்வர் - உன்னை
எத்தனை யோமுறைகள்
4. ஏழும் மன்னனுக - அவர்க்கு
ஏந்தலே நீ உள்ளதால்
ஐக்கிய மாய்ப்பெரிய - இன்பம்
ஐயனே தாமடைய
ஒருமித்துப் பாடுகிருர் - இனிய
ஒலியினல் மாநிலத்தார்
'ஓகை'என் றேஉணர்த்தும் - அந்த
ஓர் அரும் சந்தோஷத்தை
ஓம்என்று மக்கள் ஏற்க - இன்னும்
ஓர் உண்மை தானுமுண்டு.
ஔடத நீதியினை - இங்கு
ஔவுதல் தாம்செய்திட
அருமையாய்த் தருவாயென்று
- நினைத்தும்
அகிலத்தார் மகிழுகின்றுர்
5. ஆதலால் மாநிலமே - அந்த
ஆண்டவர் தம்மைவாழ்த்து
இப்புவி மக்களெல்லாம் - இனிமேல்
இறைதுதி பாடட்டுமே
6. ஈங்கிந்தப் பூமியது - நன்கு
ஈந்திட்ட அறுவடையோ
உண்மையில் எக்ச்சக்கம் - நல்ல
உறுதியாய் இறைவன் எம்மை
ஊக்கமாய் ஆசிப்பாராம் - 7 உலகின்
ஊர்களில் ஒவ்வோர் ஆளும்
எத்தேச வாசிகளும் - நித்தம்
எம்இறை யைத்துதிப்பர்
ஏனெனில் இறையவனும் - அந்த
ஏகன் ஆசிர்வதிப்பார்.

வேதாகமம் சங்கீதம் 67 - கவிதைவடிவம்
**நவாலியூர் சி. என். செல்லத்துரை**

# சொற்சிலம்பம்

போட்டி இல. 86



சொற்சிலம்பம் இல: 86
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 7-9-1988**

**இடமிருந்து வலம்**

1. காலிலிருந்து தலை 6. மறைப்பது 7. மனைவியின் இறுதியைக் காணவில்லை 8. பெண் அல்லன் 9. குரங்கு 10. மறி 11. இழை 12. கொடை வள்ளல் 14. ஒரு மாதம் 16. கவனியாமல் விடுதல் 19. ஆண்பால் பெயர் விகுதி 20. பொருந்தும் 21. உபகாரம் 22. பலவின் பால் சுட்டுப்பெயர் 23. திரட்சியாகக் காணப்படும் நெருப்பின் வடிவம்.

**மேலிருந்து கீழ்**

1. அரைவாசி 2. நீர் வார்த்து ஒப்படைத்து விடு 3. ஓர் இராசம் 4. பூவைச் சேர்த்துக் கட்ட வருவது 5. பறக்கும் பூச்சி இனம் 8. உபசாரம் செய் 11. 24 நிமிடம் கொண்ட ஒரு கால அளவை 12. நீர்த்தன்மையான இடத்தில் வளரும் 13. சிறியது. காரம் பெரியது 14. விஷ்ணு 15. கால் நடைகளுள் ஒன்று 17. கணவனை இழந்தவள் 18. வயதில் சிறியவன் 19. அடைக்கும் தாழ் இல்லாதது 21. 'நாம்' வேற்றுமையுருபு ஏற்கும் போது வருவது.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| **முதலாம் பரிசு:** | **100 ரூபா** |
| **இரண்டாம் பரிசு:** | **50 ரூபா** |
| **மூன்றாம் பரிசு:** | **25 ரூபா** |

# வீட்டுக்கு வீடு 'ஹெக்டே'

இரவு ஏழு மணிக்கு சாம்பிராணித் தட்டுடன் சாமியறைக்குப் போனராசாத்தியை நடு ஹோலில் இருந்த ஏகாம்பரம் கவனித்து விட்டு எழும்பி முகம் கழுவப் போனுர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறுது ஊதுபத்தி கொளுத்தி சாம்பிராணிப் புகை சாமிப் படத்திற்குக் காட்டிய பின்புதான் இரவு சமயலறை வேலைகளைக் கவனிப்பாள் ராசாத்தி.

சாம்பிராணித் தட்டுடன் சாமியறைக்குள் போனதும் அவள் கவனத்தை அடுத்த வீட்டில் இருந்து வந்த பேச்சுக்குரல் ஈர்த்தது. தட்டை அப்படியே வைத்துவிட்டு யன்னலோரம் போய்க் காதைக் கொடுத்தாள்.

அப்போதுதான் புதிய பாடல் கொண்ட காஸட் ஒன்றைக் கொண்டுவந்த சுதாகர் உடனே அதைப் போட்டுக் கேட்டான். "ராசாத்தி மனசிலே" என்ற அந்தப் பாடலைக் கேட்ட உமா ஓடி வந்து தாளம் போட்டாள்.

ராசாத்திக்கு அடுத்த வீட்டுச் சம்பாஷணை ஒன்றும் கேட்கவில்லை. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "கண்டறியாத ரேடியோவை நிப்பாட்டிப் போட்டுப் படியுங்கோ" என்று சத்தம் போட்டாள்.

முகம் கழுவிப் போட்டு வந்த ஏகாம்பரம் "அம்மா தியானம் பண்ணுறு, குழப்பாதையடா" என்று சொல்லிவிட்டு மெதுவாக சாமியறையை எட்டிப் பார்த்தார். ராசாத்தி அடுத்த வீட்டுச் சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

**- பசுபதிராஜா -**

பேப்பரைக் கையிலெடுத்துப் படிக்க ஆரம்பித்தார் ஏகாம்பரம். ராசாத்தி பரபரப்புடன் சாமியறையில் இருந்து வந்தாள்.

"நடேசற்றை மூத்ததுக்கு கல்யாணம் பொருந்திட்டுது. கனடா மாப்பிளை. நீங்க குத்துக்கல்லாட்டம் பேப்பரும் கையுமா இருங்கோ. வீட்டிலை குமர் இருக்கிற நினைப்பே இல்லை" ராசாத்தி பொரிந்து தள்ளினுள்.

"எப்படியம்மா இந்தப்புதினம் உனக்குத் தெரியும். சாமி கும்பிட்டியே முருகன் சொன்னுரா?" என்று கேட்டான் சுதாகர்.

'அம்மா எங்கேடா சாமி கும்பிட்டா. அவ அடுத்தவீட்டுக்கதையை ஒட்டுக் கேட்டுக் கொண்டல்லவா இருந்தா' என்றுர் அப்பா.

அப்போது கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்த மாமா 'யார் பேச்சை யார் ஒட்டுக்கேட்டார்' என்று கேட்டபடி கதிரையில் அமர்ந்தார்.

'வேறயார் உன்ரை அக்கா தான்'.

'அப்படியா? முதல் மந்திரி, ஜனதிபதி, பிரதமமந்திரி எல்லாரும் ஒட்டுக் கேக்கிருங்க. அக்கா கேட்டா என்னவாம்' என்றுர்.

'என்ன மாமா [illegible] விடுறீங்க' என்றுள் உமா.

'கர்நாடக மந்திரி ஹெக்டே ரெலிபோன் ஒட்டுக் கேட்டுப் பதவி விலகினுர். ஜனதிபதி நிக்சன் ஒட்டுக்கேட்டுப் பதவி துறந்தார். ராஜீவ் காந்தியும் ஒட்டுக்கேட்கிருராம்'என்றுர்.

'அப்போ அம்மாவுக்கு பெரிய பதவி வகிக்கிற தகைமை இருக்கு மாமா' என்றுள்உமா.

ராசாத்திக்குச் சினம் மூண்டது. 'நடேசர் பெஞ்சாதி காதும் காதும் வைச்சாப்

## கடுகுக் கதை

போலெபெட்டைக்குச் சடங்கு பேசி முடிச்சிட்டா. எல்லாம் இரகசியம். அடுத்த வீட்டுக்காரி எனக்கே சொல்லேல்லை, என்றுள்.

'அந்த [illegible] தான் இப்பவந்ததுஇன். உமா [illegible]

திருக்கு துபாயிலே நல்லவேலை. சாதகம் நல்ல பொருத்தம். ஆவணியிலேயே செய்திடலாம்' என்றுர்.

ராசாத்தி வாயெல்லாம் பல்லாக 'தம்பி நீ அக்கறை எடுக்காட்டி நடக்காதடா. தாலிகட்டும்வரை இரகசியமாய் இருக்கட்டும்' என்றுள்.

அடுத்தநாள் காலை பேப்பர் இரவல் வாங்கவந்த நடேசர் பெஞ்சாதி 'என்ன உமாவுக்கும் கல்யாணம் பொருந்திட்டுதுபோலை. துபாயிலை மாப்பிளையாக்கும்' என்றுள்.

மலைத்துப் போனுள் ராசாத்தி. 'உனக்காரப்பா சொன்னது' என்று கேட்டாள் வியப்பு மேலிட.

'நேற்று இரா பேப்பருக்கு வந்தனுன், உன்ரை தம்பி கதைத்துக்கொண்டிருந்தார். குழப்பவிரும்பாமல் திரும்பிப் போட்டன்' என்றுள்.

'வீட்டுக்கு வீடு ஹெக்டே இருக்கிருர்'என்றுன் சுதாகர்.

'ஒட்டுக் கேட்பதும் ஒரு [illegible] கலை' என்றுள் உமா. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜெயலலிதா


ஜானகி

### தமிழக அரசியலில் ஏற்பட்டு வரும் திருப்பங்கள்

# இந்திரா காங்கிரஸ் - ஜானகி அணி ஒருபுறம்; தி. மு. க - ஜெயலலிதா அணி மறுபுறமா?

ஜனாதிபதி வெங்கடராமன் 4 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சடந்த வாரம் சென்னை வந்தார்.

பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்தார் என்று கூறப்பட்டாலும் அவரின் விஜயத்தின் பின்னால் அரசியலும் கலந்திருந்தது என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெயலலிதா தலைமையை ஏற்காமல் வெளியேறிய 'நால்வரை' (நாவலர், பண்ருட்டி, திருநாவுக்கரசு, அரங்கநாயகம்) மீண்டும் ஜானகி அணியில் சேர வைப்பது, அந்த ஜானகி அணியுடன் இந்திரா காங்கிரஸ் கூட்டுச் சேர்வது - இம் முயற்சியில் ஜனாதிபதி வெங்கடராமன் இறங்கியிருக்கிறார் என்று அச்செய்தி தெரிவிக்கிறது.

இந்த முன்னணியில் தி. மு. க. வும் ஒன்று. தி. மு. க. தனது பலத்தைக் காட்டுவதற்கு இந்தத் தொடக்க விழாவைப் பயன்படுத்தப் போகிறது.

அண்ணாவின் பிறந்தநாள் கொண்டாட்டம் தொடக்க விழாவுக்கு முதல்நாள் இடம் பெறவிருக்கின்றது.

மக்கள் முன்னணி பற்றி பேட்டி அளித்தார்.

## கருணாநிதி பேட்டி

பேட்டி வருமாறு:

கேள்வி: தேசிய முன்னணி தொடக்க விழா 15 ஆம் திகதியா? 16 ஆம் திகதியா?

பதில்: செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி அண்ணா பிறந்த நாள் விழா. இது அண்ணா அறிவாலயத்தில் நடக்கின்றது. செப்டம்பர் மாதம் 16 ஆம் நாள் தேசிய முன்னணியின் தொடக்க விழா சென்னையில் நடைபெறுகின்றது: அதனையொட்டி பேரணியும், சென்னை கடற்கரையில் பொதுக் கூட்டமும் நடைபெறும். இந்த விழாவிற்கு தேசிய முன்னணியின் தலைமைக் குழுவிலே உள்ள முக்கிய தலைவர்கள் வருகின்றனர். தொடக்க விழாவினை தி. மு. க. கழகம் நடத்துகின்றது.

கேள்வி: முன்னணிக்கான குறைந்த பட்ச பொதுக் கொள்கைகள் உறுதியாக்கப் பட்டு விட்டதா?

பதில்: பெரும்பாலான கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு விட்டன. இன்னும் ஒன்றிரண்டு மீதம் இருக்கின்றது. அது முடிவானவுடன் ஒன்றிரண்டு நாட்களில் அது வெளியிடப்படும்.

கேள்வி: ஒரே சின்னம், ஒரே கொடி தான் இந்தத் தேசிய முன்னணிக்கு என்று

**தமிழகத்திலிருந்து தி. மேனகன்**

கூறப்படுவது பற்றி என்ன முடிவெடுக்கப்பட்டது?

பதில்: தேசிய முன்னணிக்கு என்று ஒரு கொடி உண்டு. அதைத் தவிர அந்தந்தக் கட்சிகளுக்கு என்று தனித்தனிக் கொடிகள் இப்போது உள்ளபடி அப்படியே இருக்கும். அதைப் போலவே ஒரே சின்னம் தான் என்பதும் கிடையாது. அந்தந்தக் கட்சிகளுக்கு இப்போதுள்ள சின்னம் நீடிக்கும்.

கேள்வி: தேர்தலின் போது தேசிய முன்னணி சார்பில் தான் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்களா?

பதில்: ஆந்திராவில் தெலுங்கு தேசக் கட்சியும், தமிழ்நாட்டில் தி. மு. கழகமும், அசாமில் அசாம் கண பரிஷத் கட்சியும் அந்தந்த மாநிலத்தில் கூட்டணிக்கான முயற்சிகளை எடுக்கவும், அது பற்றி முடிவுகளை மேற்கொள்ளவும் உரிமையுடைய கட்சிகளாகும்.

கேள்வி: தமிழகத்தில் ஜனதா கட்சி உங்கள் அணியில் இல்லாமல் இருந்ததே?

பதில்: விவரம் இப்போது சொல்வதற்கில்லை. கூட்டணி பற்றி தி. மு. கழகம் தான் தமிழ்நாட்டில் முடிவெடுக்க உரிமை உடையது என்று இந்த முன்னணியில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி: இந்த முன்னணியில் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்ன?

பதில்: இப்போது இந்த தேசிய முன்னணியில் இல்லாத சில கட்சிகள் தொகுதி உடன்பாடு செய்து கொள்ளக்கூடும்.

கேள்வி: தமிழகத்தில் முஸ்லிம் லீக் உங்களுடன்தானே இருக்கும்?

பதில்; அதிலென்ன சந்தேகம்? எங்களுடன்தான் இருப்பார்கள்.

கேள்வி: இந்த முன்னணி வெற்றி பெற்று மத்திய அளவில் ஆட்சி அமைத்தால் தி. மு. கழகம் அமைச்சரவையில் பங்கேற்குமா?

பதில்: மத்தியில் உள்ள அமைச்சரவையில் அங்கம் வகிக்க வேண்டும் என்ற ஆசை தி. மு. கழகத்திற்கு இல்லை. எந்த ஆட்சி அங்கே அமைந்தாலும் பொதுவாக ஜனநாயகத்திற்காகவும் இந்திய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் மாநில சுயாட்சிக்காகவும் பிறமொழி ஆதிக்கம் தமிழர்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கக்கூடாது என்பதற்காகவும் கழகத்திற்கு உள்ள தனித்தன்மைகளை என்றைக்கும் நாங்கள் இழக்க மாட்டோம்.

இப்படி ஒரு தேசிய முன்னணி உருவாவதற்கு ஆரம்ப காலம் முதல் முயற்சிகள் எடுத்து வெற்றி கண்டவர் ஆந்திர முதல்வர் என். டி. ராமராவ். அவருக்குத் துணை நின்று முன்னணி உருவாக ஒத்துழைத்தவர்கள் அரியானா முதல்வர் தேவிலால், வி. பி. சிங் போன்றவர்கள். இந்த முன்னணியினுடைய அமைப்புக்காகப் பாடுபட்டவர்களை தி. மு. க. வின் சார்பில் நான் பாராட்டுகின்றேன்.

இந்த முன்னணியில் சேர்ந்து இந்தியாவில் காங்கிரஸுக்கு எதிரான ஒரு பெரும் அமைப்பை உருவாக்கவும், புறக்கணிக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை சரியான முறையில் அணுகவும், நேர்மையான முறையில் வழிநடத்திச் செல்லவும் உதவிகரமாக இருந்த எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள நாட்டு மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.

கேள்வி: அண்மையில் பிரதமர் தமிழகத்திற்கு வந்த போது விடுதலைப் புலிகள் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றவில்லை என்று சொல்லியிருக்கிறரே?

பதில்: சொன்ன வார்த்தையை விடுதலைப் புலிகள் காப்பாற்றவில்லை என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் ஓராண்டு காலத்திற்கு முன் ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ள ஷரத்துக்களையே மீறி ஒப்பந்தத்தையே காப்பாற்றாத ஜெயவர்த்தன அரசைப் பற்றி ராஜீவ் காந்தி என்ன சொல்லப் போகிறார்?

கேள்வி: இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உங்கள் தேசிய முன்னணியில் உள்ள கட்சியினர் ஒருமித்த கருத்து உடையவர்களாக இருக்கிறார்களா? தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே?

பதில்: இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேசிய முன்னணிக் கூட்டத்தில் நான் முன்மொழிந்தேன். அதற்கு யாரும் மறுப்புச் சொல்லாமல் ஏகமனதாக அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்:

இவ்வாறு கருணாநிதி கூறினார். (எ-4)

### மதுகர் தாது

ஜானகி அணியை உடைக்க ஜெயலலிதாவை Encourage செய்தது தவறு என்பதைப் பிரதமர் ராஜீவ் ஒப்புக்கொண்டு விட்டாராம் என்று ஒரு தகவல்.

இதனிடையில் முன்னாள் அமைச்சர் விரப்பனின் மருமகன் தியாகராஜன், ஜெயலலிதாவின் 'கிச்சன் காபினட்' நடராஜனைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இந்த நடராஜன் தான் 'ஜெ' அணியில் இருந்து 'நால்வர் குழு' வெளியேறக் காரணமானவர்.

நண்பர்களாகத்தான் சந்தித்தோம் என்று தியாகராஜன் கூறினாலும், விரப்பனின் அரசியல் தூதராக இச் சந்திப்பு இடம் பெற்றதாகச் சொல்லப் படுகிறது.

அதே வேளை, தி. மு. க. வுடன் கூட்டணி அமைக்க உதவத் தயார் என்று ஜெயலலிதாவுக்கு அவரின் 'கிச்சன் கபினட்' நடராஜன் கூறியிருக்கிறார்.

நடராசனும் தி. மு. க. தலைவர் கருணாநிதியின் மருகரான முரசொலி மாறனும் நெருங்கிய நண்பர்கள். தமிழ் முன்னேற்ற அணித்தலைவர் சிவாஜியும் ஜானகியைச்சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இதனிடையில் ஏழு எதிர்க் கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள தேசிய மக்கள் முன்னணியின் தொடக்கவிழா இம் மாதம் 17 இல் சென்னையில் நடைபெறவுள்ளது.

## "மகள்போல" என்று குறிப்பிட்டது ஏன்?

### நெடுஞ்செழியன் விளக்கம்

'ஜெயலலிதாவை என் மகள்போலக் கருதுகிறேன்' எனக் குறிப்பிட்டது ஏன் என்பதற்கு திரு. நெடுஞ்செழியன் விளக்கம் அளித்துள்ளார்.

அ. தி. மு. க. (ஜெ) கோஷ்டித் தலைவர்களில் ஒருவரான நெடுஞ்செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது;

தென்றல் வீசிக் கொண்டிருந்த பழம் உதிர் பசுஞ்சோலையாக இருந்த அ. தி. மு. க. வில் ஜெயலலிதா உருவில் சர்வாதிகாரப் புழுதிப் புயற்காற்று வீசத்தொடங்கியது.

புழுதிப் புயற்காற்று பசுஞ்சோலைக்குள் புகுந்துவிட்டால், சோலைக்குப் பெருங்கேடு விளையக்கூடும் என்று, உரிய நேரத்தில் நான் எச்சரித்துக்கூடப் பார்த்தேன்.

1988 ஜனவரி முதல் வாரத்தில் கட்சி உடைக்கப்படும் சூழ்நிலையும், ஆட்சி சீர்குலைக்கப்படும் சூழ்நிலையும் உருவான நேரத்தில் முக்கிய பொறுப்பு வாய்ந்த நண்பர்கள், கட்சியை எப்படியேனும் ஈடேற்ற வேண்டும் என்னும் கருத்தின் அடிப்படையில், ஜெயலலிதாவிடம், பொதுச் செயலாளர் பொறுப்பை ஒப்படைக்க முன்வந்தனர்.

கவர்ச்சிவழி அரசியலுக்கு வந்தோர் அந்த முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். நான் அந்த ஏற்பாட்டை முதலில் ஏற்றுக்கொள்ளத் தயங்கினேன் என்றாலும், சூழ்நிலைகளின் வற்புறுத்தலுக்கு நானும் இணங்கிப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது.

கட்சியை ஒரு குடும்பமாகக் கருதவேண்டும் என்ற தத்துவத்தை நிலைநாட்டி வெற்றி கண்டவர் அண்ணா. தன் குடும்பத்தைக் கழகமாகக் கருத வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தி, அதன்மூலம் நாளுக்குநாள் எதிர்ப்புக்களையும், ஏளனங்களையும், இழிமொழிகளையும், பழிச்சொற்களையும், தோல்விகளையும் கண்டுகொண்டு வருபவர் ஜெயலலிதா.

அண்ணா கற்றுக் கொடுத்த பண்பின் அடிப்படையில்தான், தந்தை, அண்ணன், உடன்பிறப்பு, தம்பி, அண்ணியார் என்றெல்லாம் அடைமொழியோடு அன்போடும், மரியாதையோடும் அழைப்பது மரபாயிற்று.

அதே பண்பாட்டின் அடிப்படையில் தான், ஜெயலலிதாவை நான், என் மகள் போல கருதுகிறேன் என்றேன். ஜெயலலிதாவை 'மகள் போல' என்று குறிப்பிட்டதைக் கேலிக்குரியதாகவும், கிண்டலுக்குரியதாகவும் யாரேனும் ஆக்குகிறார்கள் என்றால் அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள அத்தனை அன்பு உறவுமுறைகளையும் கேலிக்குரியனவாகவும், கிண்டலுக்குரியனவாகவும் ஆக்குகிறார்கள் என்று தான் பொருள்படும்.


# கையிலே கமரா ஏந்தி

## காரிகை இவள் கண் சிமிட்டுவது ஏன்...?



கமராவைக் கையில் பிடித்து எவரும் படம் எடுக்கலாம்...

.... ஆனால் கலையம்சத்துடன் தரமான படம் பிடிப்பது என்பது ஒரு கலை. எல்லோராலும் அது முடியாது.

அது போலவே...

படச்சுருள்களைக் கழுவுதல், பிரதி செய்தல் என்பனவற்றையும் எல்லோராலும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும், தரமாகவும் செய்து தர முடியாது.

- ✶ உயர்ந்த தொழில் நுட்பத்துடனும், நுணுக்கத்துடனும் படச்சுருள்களை நவீன கம்பியூட்டர் மூலம், நேரில் பார்ப்பது போன்று மின்னும் தெளிவான கலர் போட்டோ பிரதிகளாக்கித் தருவதற்கும்-
- ✶ படச்சுருள்களை முற்றிலும் இலவசமாகக் கழுவுவதற்கும்-
- ✶ ஒரு பிரதிக்கு ரூபா 4-75 மட்டுமே செலுத்தி -
- ✶ மூன்று முதல் ஐந்து நாட்களில் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம்:

'ஷப்ரு' 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா நாட்களிலும் படச்சுருள்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் &பிளவ்ஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி சஞ்சிகை

03-09-1988 சனிக்கிழமை

நவநாகரிகத்திற்கேற்ப
★ பிறிடைம் ★ பாட்லி
★ றிமோட் கொன்ரோல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# அங்கோலாவில் 13 வருட உள்நாட்டு யுத்தத்துக்கும் நமீபியாவில் தென்ஆபிரிக்க ஆதிக்கத்துக்கும் முடிவு

சர்வதேச அரங்கில் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியில் மற்றொரு நிலைக்களனாக இருந்து வந்த நாடு அங்கோலா.

அங்கோலாவின் மார்க்சிய அரசுக்கு ஆதரவாக கியூபா 40 ஆயிரம் துருப்புகளை வைத்திருக்கிறது.

அத்துடன் இந்த மார்க்சிய அரசாங்கத்துக்குச் சவாலாக இருந்துவரும் ''யூனிட்டா'' இயக்கக் கெரில்லாக்களுக்கு (National Union for the Total Independence of Angola) எதிரான சண்டையில் கியூபாத் துருப்புக்கள் கடந்த 13 வருடகாலமாக ஈடுபட்டு வந்தன.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தென் ஆபிரிக்கப் படைகள் அங்கோலாவுக்குள் நுழைந்ததை அடுத்து அங்கோலா, உள்நாட்டு யுத்தம் புதிய திருப்பத்தை அடைந்திருந்தது.

**தென் ஆபிரிக்க தலையீடு**

தென் ஆபிரிக்கப் படைகளின் இராணுவத் தலையீடு காரணமாக இந்த உள்நாட்டு யுத்தம் சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்தது.

அங்கோலாவின் தென் கிழக்கே 'யூனிட்டா' கெரில்லாக்களின் பலமான கோட்டையாக விளங்கிய நகரம் ஒன்றின் மீது கியூபா — அங்கோலா கூட்டுப்படைகள் மாபெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்த சமயம் தென் ஆபிரிக்கப்படைகளின் இராணுவத் தலையீடு இடம்பெற்றது.

அதி சக்தி வாய்ந்த 155. எம். எம். பீரங்கிகள் ஜீ. 5, ஜீ. 6 கனரக துப்பாக்கிகள் சகிதம் கடந்த அக்டோபர் முதல் கடந்த முதலாம் திகதி வரை தென் ஆபிரிக்கப் படைகள் அங்கோலாவின் தென் பகுதியில் நிலைகொண்டிருந்தன.

**ஜெனீவா மாநாடு**

அமெரிக்கா, அங்கோலா, கியூபா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த ஆகஸ்ட் 2 ஆம் திகதிக்கும் 5 ஆம் திகதிக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சுக்கள் நடைபெற்றன.

தென் ஆபிரிக்காவுக்கும், கியூபாவுக்கும், அங்கோலாவுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இந்த மாநாடே வழி வகுத்தது.

இந்த ஒப்பந்தத்துக்கு இணங்க தென் ஆபிரிக்கா தனது படைகளை கடந்த முதலாம் திகதியுடன் அதாவது கடந்த வியாழக்கிழமையுடன் அங்கோலாவில் இருந்து முற்றாக விலக்கிக் கொண்டுள்ளது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் கியூபாப் படைகளின் வாபஸ் பற்றிய கால அட்டவணை இனி வகுக்கப்பட இருக்கிறது.

**போர்த்துக்கல் காலனி**

நீண்டகால சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் அங்கோலாவும் மொஸாம்பிக்கும் போர்த்துக்களின் ஆதிக்கத்தில் இருந்து 1975 ஆம் ஆண்டு விடுதலை பெற்றன.

சுதந்திரத்தின் பின்னர் இரு நாடுகளிலும் மார்க்சிய அரசுகளே பதவிக்கு வந்தன.

ரொடீஷியாவில் (தற்போது ஸிம்பாப்பே) இயன் ஸ்மித்தின் வெள்ளியர் சிறுபான்மை அரசு 15 வருடகால ஆட்சியின் பின்பு வீழ்ச்சி அடைந்த சமயம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற இரு கெரில்லா இயக்

## ஆப்கன் ஒப்பந்த பாணியில் ஏற்பட்டுள்ள மற்றொரு சமரசம்

கங்களும் இடதுசாரி இயக்கங்கள்.

ஒன்று தற்போதைய ஜனாதிபதி முகாபே தலைமையிலானது. மற்றது என்கோடா தலைமையிலானது.

ஆனால் அங்கோலா சுதந்திரம் அடைந்ததும் அமெரிக்க ஆதரவு வலதுசாரி இயக்கத்துக்கும் சோவியத் ஆதரவு இடதுசாரி இயக்கத்துக்கும் இடையில் அதிகாரப் போட்டி ஏற்பட்டது.

இதில் வலதுசாரிகள் தோல்வி அடையவே சர்வதேசப் பிரச்சினையாக இது படிப்படியாக உருவெடுக்க ஆரம்பித்தது.

அங்கோலாவில் ஏற்பட்ட மார்க்சிய அரசைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்க ஆதரவுச் சக்திகள் முயன்றபோது அந்த அரசு கியூபாவின் இராணுவ உதவியை நாடியது.

கடந்த 25 வருடகாலமாக ஆட்சியில் இருந்து வரும் கியூபாவின் காஸ்ட்ரோ அரசு வெளிநாட்டு அரசு ஒன்றுக்கு முட்டுக்கொடுப்பதற்காகப் படை அனுப்பிய முதலாவது சம்பவம் இது ஆகும்.

ஆப்கானிஸ்தானின் மார்க்சிய அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்க சோவியத் யூனியன் எப்படிப் படைகளை அனுப்பியதோ அதே பாணியிலேயே சோவியத் யூனியனின் ஆசியுடன் கியூபா படைகளை அனுப்பி இருந்தது.

அங்கோலாவில் சோவிய யூனியனின் நேரடித் தலையீடு இல்லாததால் ஆப்கன் பிரச்சினை போன்று அங்கோலாப் பிரச்சினை சோவியத்யூனியனுக்கு பெரும் தலையிடி எதையும் கொடுக்கவில்லை.

**2 லட்சம் மக்கள் கொலை**

அமெரிக்க ஆதரவைப் பெற்ற 'யூனிட்டா' கெரில்லா இயக்கத்துடன் கடந்த 13 வருடகாலமாக நடைபெற்ற சண்டையில் ஆயிரக்கணக்கான கியூபா துருப்பினர் கொல்லப்பட்டிருந்தனர்.

கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 2 லட்சம்.

'யூனிட்டா' கெரில்லாக்களை முறியடிப்பதற்காக 50 கோடி டாலர்களை சோவியத் யூனியன் அங்கோலாவுக்கு வருமா வருடம் வழங்கி வந்தது.

அத்துடன் 'மிக்-23' ரக சண்டை விமானங்கள், நவீன ராடர்கள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் ஆகியவற்றையும் சோவியத் யூனியன் வழங்கி வந்தது.

இத்தனைக்கும் மத்தியில் 'யூனிட்டா' கெரில்லாக்கள் அங்கோலாவின் தென்கிழக்குப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

தென்ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் உதவியே இதற்குக் காரணம்.

**நமீபியா**

ஆப்கன் யுத்த நிறுத்தப் பாணியில் தற்போது அங்கோலாவில் ஏற்பட்ட யுத்த நிறுத்தம் - நமீபியா என்று அழைக்கப்படும் தென்மேற்கு ஆபிரிக்காவையும் உள்ளடக்குகின்றது.

முதலாவது உலகமகாயுத்தம் முடிவடைந்த நாள் முதல் நமீபியாவைத் தென் ஆபிரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது.

கடந்த 22 வருடகாலமாக சுவாபோ இயக்கத்தினர் (The South West Africa People's Organisation) தென் ஆபிரிக்கப் படைகளுக்கு எதிராகத் தாக்குதலைநமீபியாவில் நடத்தி வந்தனர்.

சுவாப்போ கெரில்லாக்களின் பிரதான முகாம்கள் தென் அங்கோலாவின் எல்லையிலேயே இயங்கி வந்தன.

தென்ஆபிரிக்கா - நமீபியா அங்கோலா ஆகியவை அருகருகே எல்லைகளைக்கொண்ட நாடுகள் ஆகும்.

கடந்த ஆகஸ்ட்டில் செய்து கொள்ளப்பட்ட ஜெனீவா ஒப்பந்தத்தின் பிரகாரம் நமீபியாவின் சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்றது. சுவாபோ இயக்கமும் தனது தாக்குதலை நிறுத்தி உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி ஐ. நா. பொதுச்செயலாளர் பெரேஸ்டி கியூலர் நமீபியா தொடர்பான பேச்சுவார்த்தை நடத்த தென் ஆபிரிக்கா வருமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

நமீபியா தொடர்பான ஐ. நா. பாதுகாப்புச்சபையின் 435 ஆவது தீர்மானத்தை அமுல் செய்வதை மையமாகக் கொண்டு இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருக்கிறது.

நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கக்கோரி 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா.பாதுகாப்புச்சபை நிறைவேற்றிய தீர்மானம்தான் இந்த 435 ஆவது தீர்மானம்.

முன்பு ஜெர்மன் காலனியாக இருந்துவந்த நாடு நமீபியா.

கனிப்பொருள் வளம் நிரம்பிய நாடு இது. இந்த நாடு தனது பாதுகாப்புக்கு அவசியமானது என்று தென் ஆபிரிக்கா கருதிவருகிறது:

ஐ. நாவின் 435 ஆவது தீர்மானத்தின்படி நமீபியாவில் ஒருவருட காலத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும். தென்ஆபிரிக்க ஆதிக்கம் முற்றுப்பெறவேண்டும்.

**அமெரிக்க நிர்ப்பந்தம்**

அங்கோலாவில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறவும் நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கவும் தென் ஆபிரிக்காவில் பி. டபிள்யூ போத்தா அரசாங்கம் இணங்கியதுக்கு அமெரிக்க நிர்ப்பந்தமே முக்கியகாரணம் என்று நம்பப்படுகிறது.

ஏற்கனவே அமெரிக்க அதிபர் ரொனல்ட் றேகன் தென் ஆபிரிக்க அரசாங்கத்துக்கு எதிராகப் பல பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தார்.

அவையாவன:-

★ தென் ஆபிரிக்காவில் அமெரிக்காவின் புதிய முதலீடுகளுக்குத்தடை.
★ புதிய வங்கிக் கடன்கள் வழங்குவதை நிறுத்துவது.
★ எண்ணெய், ஆயுத ஏற்றுமதியைத் தடுப்பது.
★ கம்பியூட்டர் சாதனங்கள், யூரேனியம் ஆகியவற்றின் கொள்ளவுக்கு கட்டுப்பாடு விதிப்பது.

மேற்கண்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக தென் ஆபிரிக்காவில் இருந்த 160 அமெரிக்க நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.


தென் ஆபிரிக்கா தொடர்ந்து அமெரிக்காவிடமிருந்து பல நிர்ப்பந்தங்களை எதிர்நோக்கி வந்தது.

அத்துடன் இந்தவருட இறுதிப் பகுதியில் அமெரிக்காவில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் எந்தக்கட்சி வெற்றி பெற்றாலும் அது போத்தாவின் இனவெறி அரசுக்கு எதிராகக் கடுமையான போக்கையே கடைப்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் மைக்கல் டுக்காகிஸ் ஆகிய இருவருமே தற்போதைய அதிபர் ரொனல்ட் றேகனைவிட தீவிர இனவெறி எதிர்ப்பாளர்கள்.

ஆப்கான் கெரில்லாக்கள் போன்று 'யூனிட்டா' கெரில்லாக்களும் தற்போது அங்கோலா யுத்தநிறுத்தத்தை ஏற்கமறுத்துவருகின்றனர்.

எனினும் அமெரிக்க ஆயுத உதவி நிறுத்தம், தென் ஆபிரிக்க படை வாபஸ் ஆகியவை காரணமாக யூனிட்டா கெரில்லாக்களினால் தொடர்ந்து நின்றுபிடிக்க முடியாது என்று கருதப்படுகிறது. ★



தென் அங்கோலாவின் அடர்ந்த புதர்களில் அமெரிக்க ஆதரவு ''யூனிட்டா'' கெரில்லாக்கள்.

## உலக உலா

## பொது அறிவுப்போட்டி இல. 12

1. பூச்சிகொல்லிகளில் இதுவும் ஒன்று? ... ... ... ... டி.டி.ரி / வேப்பம் இலை
2. காதல் தேவதை யார்? ... ... ... ... ... ... ... வீனஸ் / மோகினி
3. உடலுக்கு உருவத்தைக் கொடுப்பது எது? ... ... ... ... தசை / எலும்பு
4. அருள் இல்லாருக்கு எது இல்லை? ... ... ... ... அவ்வுலகம் / இவ்வுலகம்
5. ரோஜாவின் ராஜா என்று யாரை அழைப்பர்? ... ... நேருஜி / சென்னடி
6. எதைவிட்டால் துயரம் இல்லை? ... ... ... ... ... ... கோபம் / ஆசை
7. இராமபக்தர்களில் சிறந்தவர் யார்? ... ... ... அனுமான் / இராமதாஸர்
8. ஓவியங்களுக்கு பேர்போன குகை எது? ... ... ... அஜந்தா / சிகிரியா
9. தேவிக்குரிய மந்திரம் எது? ... ... ... ... ... ... ... காயத்ரி / தாரகம்
10. அக்பர் அரியணையில் ஏறியதும் என்ன செய்தார்? உட்கார்ந்தார் / ஆணையிட்டார்
11. உலகின் முதலாவது பெண்பிரதமர் யார்?... ... இந்திராகாந்தி / சிறிமாவோ பண்டார நாயக்கா?
12. மரங்களுக்கும் இதுவேண்டும் என்பர் விஞ்ஞானிகள்? ... அன்பு / தண்ணீர்

பெயர்:- ..................
விலாசம்:- ........................
...............

பொது அறிவுப்போட்டி இல: 12
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——————— இங்கே வெட்டுக ———————

**பொது அறிவுப்போட்டி இல: 11 விடைகள்**

1. ஒட்டகச்சிவிங்கி, 2. வெட்டுக்கிளி, 3. மண்புழு, 4. பாரதியார், 5. ரஜனீஸ் சுவாமி, 6. பலாப்பழம், 7. கற்றகல்வி, 8. மானிடப்பிறவி, 9. சோல், 10. சரோஜாதேவி, 11. பூ, 12. எகிப்து.

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 14. 9. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

## ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற குருவாயூரப்பனை நம்பியுள்ள உஷா

உலகப் புகழ்பெற்ற கேரள ஓட்ட வீராங்கனை பி. டி. உஷா கடந்த ஒலிம்பிக் போட்டியில் 100இல் ஒரு பங்கு நேரவித்தியாசத்தில் வெண்கலப்பதக்கத்தை இழந்தவர்.

தற்போது சோலில் நடக்க இருக்கும் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு ஓடுகிறார்.

அப்போது அவர் தங்கப்பதக்கம் வெல்வார் என்று இந்தியா நம்புகிறது.

அந்த நம்பிக்கைக்குத் தகுந்தாற்போல் உஷா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

'கடந்த ஒலிம்பிக்போட்டியைவிட வரும் ஒலிம்பிக்கில் எனது திறமையை நன்கு வெளிப்படுத்தமுடியும். என்றால் தங்கப்பதக்கம் பெறமுடியும்,

'என்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை வீண் போகாது.

[illegible] பிரார்த்தனைசெய்யுங்கள்.

சோல் ஒலிம்பிக் எனக்கு வாழ்வா, சாவா என்று பிரச்சினையாகவுள்ளது.

இப்போது தங்கப் பதக்கத்தை கைப்பற்றவிட்டால் எப்போதுமே பதக்கம் இல்லை

400 மீற்றர் தடை ஓட்டத்தில் பதக்கம் வெல்லமுடியாது என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இப்போதுள்ள கணக்கின் படி நான் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் உலகில் முன்னணியிலுள்ள 20 வீராங்கனைகளில் ஒருத்தியாக இருக்கிறேன்.

ஆனாலும் மனம் தளரவில்லை. குருவாயூரப்பனை வேண்டிக்கொண்டுள்ளேன்.

இப்படி உஷா தெரிவித்தார். ★

## இந்தியா வரும் கிரிக்கெட் அணிகள்

இங்கிலாந்து, நியூசிலாந்து கிரிக்கெட் அணிகள் இந்தியாவில் விளையாட உள்ளன.

அதன்படி நியூசிலாந்து அணி அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி வருகிறது.

3 டெஸ்ட் போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் இந்தியஅணியுடன் ஆடுகிறது

முதல் போட்டி நவம்பர் 1 முதல் 3 வரை ராஜ்கோட்டில் நடைபெறும்.

நியூசிலாந்து அணி தனது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு டிசம்பர் 21 இல் சிங்கப்பூர் செல்லும்.

இங்கிலாந்து அணி டிசம்பர் 6இல்பம்பாய் செல்கிறது. 5டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணியுடன் மோதுகிறது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 17 இல் இங்கிலாந்து அணி லண்டன் திரும்புகிறது.

## ஒலிம்பிக் போட்டி சில தகவல்கள்

சோல் ஒலிம்பிக்கில் சகல நாட்டு வீரர்களும் தங்க தனி நகரமே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு நாட்டு உடற்பயிற்சி வீரர்கள் அந்த நகரில் தங்கும் போது மது அருந்த அனுமதிக்கப்படுவார்கள்

''1984 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கின் போதும் அவ்வாறு அனுமதித்தோம். எனவே இப்போதும் அனுமதிப்போம்''- என்று ஒலிம்பிக் அமைப்புக் குழு அறிவித்துள்ளது.

★ ★ ★

ஒலிம்பிக்கில் விளையாட்டு வீரர்கள் தங்கவென 14மாடிகள் கொண்ட 28 கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பார்வையாளர் தங்கவென 76 ஹோட்டல்களில் 17 ஆயிரம் அறைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ★

## உலக விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org